இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 105 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 27 சனிக்கிழமை 11.03.2017

# இலங்கை மீது கடும் கண்டனம் ஐ.நாவில் வரும்

## மனித உரிமையாளர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 11

போர்க் குற்றங்கள் குறித்த வாக்குறுதிகளை அரச தலைவர் நிறைவேற்றத் தவறியுள்ளதன் காரணமாக இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கடும் கண்டனத்தை எதிர்கொள்ளும் அபாயம் உள்ளது என்று ஆய்வாளர்கள், இராஜதந்திரிகள், அரசியல் ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி ஏ.எவ்.பி. செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக ஏ.எவ்.பி. மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன போர்க் குற்றங்களுக்கு நீதி வழங்குவேன் என்ற வாக்குறுதியுடன் ஆட்சிபீடமேறியவர். இதன் மூலமாக அவர் முன்னைய ஆட்சியாளரின் பாரம்பரியத்திலிருந்து விலகியதுடன், நிரந்தர சமாதானத்துக்கான உண்மையான வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தையும் கொண்டிருந்தார்.

எனினும், போர்க் குற்றங்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்கான இரண்டு வருட கால எல்லையைத் தவறவிட்டுள்ளதுடன், தான் ஒருபோதும் படையினரை நீதிமன்றத்தில் நிறுத்தப்போவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். பன்னாட்டு விசாரணைகளுக்காக ஐக்கிய நாடுகளின் வேண்டுகோளையும் அவர் நிராகரித்துள்ளார். இதன் காரணமாக அவர் ஏற்படுத்திய நம்பிக்கைகள் ஏமாற்றமாக மாறியுள்ளன.

மைத்திரிபால சிறிசேனவின் கருத்துகள் கவலையளிக்கக்கூடியவை. மேலும் அவை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் உரைகளை நினைவுபடுத்துகின்றன எனக் குறிப்பிடுகின்றனர்.

பன்னாட்டு நெருக்கடிக் குழுவைச் சேர்ந்தவர் அலன் கீனன், இலங்கை இராணுவத்திடமிருந்து அரச தலைவர் குறிப்பிடத்தக்க முட்டுக்கட்டைகளை எதிர்கொள்கின்றார். மேலும் பன்னாட்டு நீதிபதிகள் என்ற விடயத்தைச் சிங்கள மக்களை >> 24



## 231 கிலோ கஞ்சாவே சிக்கியது

யாழ்ப்பாணம், மார்ச் 11

சாவகச்சேரியில் மீட்கப்பட்ட 231 கிலோகிராம் கஞ்சா மூடைகள் வெளிமாவட்டத்துக்குக் கடத்திச் செல்லப்படவிருந்ததா என்பது தொடர்பில் விசாரணை நடத்தப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். >> 22

## ட்ராக்டருக்குள் சிக்குண்டு குடும்பப்பெண் பரிதாபச் சாவு

வவுனியா, மார்ச் 11

வவுனியா சலழிகினிகம போகஸ்வாவ பகுதியில் நேற்றுப் பகல் 11மணியளவில் சாலைச் சீரமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபெண் ஊழியர் உழவு இயந்திரத்தில் சிக்குண்டு உயிரிழந்தார் என்று போகஸ்வாவ பொலிஸார் >> 23

## விபத்தில் படுகாயமுற்ற பெண் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணம் - மண்கும்பான் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த இரு பிள்ளைகளின் தாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். >> 24



## மனச்சாட்சிப்படி செயற்பட முடியாவிடின் பதவி துறப்பேன்

### கூறுகிறார் கரு ஜயசூரிய

கொழும்பு, மார்ச் 11

மனச்சாட்சியின் பிரகாரமே செயற்பட்டு வருகின்றேன். அவ்வாறு செயற்பட முடியாவிட்டால் பதவியில் இருக்க மாட்டேன். பொதுத்தேர்தலின் பின்னர் சிறிகோத்த பக்கம் காலடி வைக்கவே இல்லை என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

மனச்சாட்சியின் பிரகாரம் நடுநிலை >> 04

## பிரிட்டனில் அபாயத்தை எதிர்கொள்ளும் அகதிகள்

### அரசின் புதிய உத்தரவுகளால்

கொழும்பு, மார்ச் 11

பிரிட்டன் அரசின் புதிய உத்தரவுகளால் பிரிட்டனில் தங்கியிருப்பதற்காக விண்ணப்பிக்கும் அகதிகள் திருப்பி அனுப்பப்படும் அபாயம் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டனில் நிரந்தரமாகத் தங்கியிருப்பதற்காக விண்ணப்பிக்கும் அகதிகளை அவர்களது நாட்டுக்குத் திருப்பியனுப்புவது குறித்து ஆய்வு செய்யும் திட்டமொன்றைப் பிரிட்டன் அறிமுகப்படுத்தியுள்ளது.

பிரிட்டனில் ஐந்து வருடங்களுக்கு முன்னர் அடைக்கலம் பெற்ற அகதிகளை அவர்களது நாடுகளுக்குத் திருப்பி அனுப்புவது பாதுகாப்பானதா என்று ஆய்வுசெய்யும் இந்தச் சட்டம் கடந்த வியாழக்கிழமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் >> 24

## பொது எதிரணிக்கு அங்கீகாரம் கோரி மீண்டும் குழப்பம்

கொழும்பு, மார்ச் 11

மகிந்த ஆதரவு அணியை நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் குழுவாக அங்கீகரித்து அதற்குரிய சிறப்புரிமைகளை வழங்குமாறு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் மகிந்த ஆதரவு அணியினர் நேற்று மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

51 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நாடாளுமன்றத்தில் இரண்டாவதுபெரும்சக்தியாகபொதுஎதிரணியே திகழ்கின்றது. எனவே, சபாநாயகர் உரிய அங்கீகாரம் வழங்காவிட்டால் சபை நடவடிக்கைகளைக் கொண்டு செல்ல இடமளிக்கப்படாது என்றும் அந்த அணியினர் எச்சரித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தனவுக்குச் >> 24

## முச்சந்தி முரளி



எப்பதான் முடியும் எண்டு சொல்லுறியள்...

## மக்களின் வாழ்விடங்களை முடிந்தவரை விடுவிப்போம்

### யாழ். படைத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

நாட்டில் 30 ஆண்டுகள் இடம்பெற்ற போர் காரணமாக மக்களின் வாழ்விடங்களை இராணுவ முகாம்களாக மாற்றினோம். அவற்றை முடிந்தவரை மக்களிடம் வழங்கவே முயற்சிக்கின்றோம் என யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மகேஸ் சேனநாயக்க தெரிவித்தார்.

காங்கேசன்துறை நல்லிணக்கபுரத்தில் அமைக்கப்பட்ட இரண்டாம் கட்ட வீட்டுத் திட்டம் நேற்று அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது உரையாற்றும்போதே கட்டளைத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் காரணமாக இந்த மாவட்டத்தில் படைகளால் கையகப்படுத்தப்பட்டிருந்த நிலங்களை போர் முடிந்த பின்னர் 2009 முதல் 13 கட்டங்களாக விடுவித்துள்ளோம்.

ஊறணியில் மீனவர்களுக்காக விடுவிக்கப்பட்ட இறங்குதுறையைப் புனரமைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு >> 23

## மகிந்த அணியால் நேற்றும் சர்ச்சை

### ஆளுங்கட்சி வெளிநடப்பு சபை 21 வரை ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 11

மகிந்த ஆதரவு அணி விவகாரம் குறித்து சபாநாயகர் வழங்கிய தீர்ப்பை மையப்படுத்தி மகிந்த அணியினர் சபையில் நேற்றும் கேள்விக்கணைகளைத் தொடுத்ததுடன், அது தொடர்பில் தமது அதிருப்தியையும், >> 24

## அர்ஜுன மகேந்திரனிடம் 3 மணி நேரம் விசாரணை

கொழும்பு, மார்ச் 11

மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடி தொடர்பாக நியமிக்கப்பட்ட அரச தலைவர் ஆணைக்குழு மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் >> 22

## 85 இந்திய மீனவர் நேற்று விடுவிப்பு

### தமிழகக் கொந்தளிப்பைத் தணிக்க



யாழ்ப்பாணம், மார்ச் 11

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 85 இந்திய மீனவர்களும் நேற்று உடனடியாக விடுதலை செய்யப்பட்டனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் கடந்த 6ஆம் திகதி ஊடுருவிய இந்தய மீனவர் மீது கடற்படையினர் நடத்தியதாகக் கூறப்படும் துப்பாக்கிப் பிரயோகத்தால் இராமேஸ்வரம் மீனவர் ஒருவர் உயிரிழந்தார். இதனால் தமிழகத்தில் கடும் கொந்தளிப்பு நிலமை ஏற்பட்டுள்ளது.

இந்தக் கொதிநிலையைத் தணிக்கும் >> 23

## மேலும் 225 வீடுகள் அமைக்கும் பணி ஏப்ரலில் ஆரம்பம்

### வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தோருக்காக

யாழ்ப்பாணம், மார்ச் 11

வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் மேலும் 225 குடும்பங்களுக்கு வீடுகள் அமைப்பதற்கான பணிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

காங்கேசன்துறை நல்லிணக்கபுரத்தில் இரண்டாம் கட்டமாக அமைக்கப்பட்ட வீடுகளை உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் வசிப்பவர்களில் சொந்தக் கிராமத்திலும் நிலமற்ற குடும்பங்களுக்கே >> 22

## மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்க அரசு முயற்சி

### மகிந்த தரப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 11

புதிய அரசமைப்பின் கீழ் வடக்கு-கிழக்கு உள்ளிட்ட மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகவும், அந்தந்த மாகாணப் பிரதிப் >> 23

## பேஸ்புக் வதந்திகள் பற்றி சி.ஐ.டி. விசாரிக்க உத்தரவு

### சட்டம், ஒழுங்கு அமைச்சர் நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 11

சமூக வலைத்தளங்கள், முகநூல் பக்கங்களில் வெளிவரும் அநேகமான தகவல்கள் சட்டபூர்வமற்றவை. எனவே, அவற்றுக் >> 24

# பேருந்து போக்குவரத்துக்கு கொழும்பில் தனிப் பாதை

## திட்டம் நாளை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 11

கொழும்பு நகரத்தில் நிலவும் அதிக போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்கும் நோக்கில், பேருந்து போக்குவரத்துக்கெனத் தனியான வழிப்பாதை ஒன்றை அடையாளப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான திட்டம், நாளை ஞாயிற்றுக்கிழமை இராஜகிரியச் சந்தியில் இருந்து ஆயுர்வேத சந்தி வரை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சம்பிக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கப்பூர், கொரியா போன்ற நாடுகளில் தற்போது செயற்படுத்தப்படுகின்ற இந்த முறை, பயணிகளின் போக்குவரத்துக்கு முக்கியத்துவம் வழங்கும் நோக்கிலேயே முன்னெடுக்கப்படுகின்றது.

வீதியில் இடவசதிகளை ஏற்படுத்திப் பொதுமக்களின் நேரங்களை மீதப்படுத்துவது, இதன் மற்றுமொரு நோக்கம். தற்போது இராஜகிரியவில் இருந்து ஆயுர்வேதச் சந்தி வரை மாத்திரம் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இதன் முன்னேற்றத்தை அவதானித்து, கொழும்பிலுள்ள ஏனைய வீதிகளுக்கும் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதன்பிரகாரம், பச்சை நிறத்தில் உள்ள குறியீட்டில் மாத்திரமே பஸ்கள் பயணிக்க முடியும். ஏனைய நிறங்களில் உள்ள குறியீட்டில், ஏனைய வாகனங்கள் பயணிக்க வேண்டும் என்றார். (த-4)

# ஆட்சியில் அமர்த்திய தமிழரை கைவிட்டுள்ள அன்னப் பறவை

## கண்டிக்கின்றார் சிவாஜிலிங்கம்

கிளிநொச்சி, மார்ச் 11

கடந்த பொதுத் தேர்தலில் அன்னத்துக்கு வாக்களிக்குமாறு கோரப்பட்டது. தமிழர்களும் வாக்களித்தனர். ஆயினும் அன்னம் நீரையும் பாலையும் பிரித்து அருந்துவதுபோல், தமிழ் மக்களை நீராகக் கைவிட்டுள்ளது. இவ்வாறு வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கண்டனம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியபோதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் உச்சக்கட்டத்தில் நடந்துகொண்டிருந்தபோது கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட சுமார் 20 ஆயிரம் தமிழர்களின் நிலை என்ன என்பதை இலங்கை அரசு இன்னமும் வெளிப்படுத்தவில்லை. இலங்கையின் பொறுப்புமிக்க பதவியில் இருக்கும் தலைமை அமைச்சரோ அவர்கள் வெளிநாடு போயிருக்கலாம் அல்லது இறந்திருக்கலாம் என்று அசண்டையீனமாகச் சொல்கிறார்.

கடந்த பொதுத் தேர்தலில் அன்னத்துக்கு வாக்களிக்குமாறு கோரப்பட்டது. வாக்குகள் வழங்கப்பட்டன. அன்னம் நீரையும் பாலையும் பிரித்து அருந்துவதுபோல், தமிழ் மக்களை நீராக கைவிட்டுள்ளது. இந்த விடயத்தில் ஒட்டுமொத்த கூட்டமைப்பும் ஒருமித்துச் செயற்பட வேண்டும். ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்ட காலநீடிப்பு தொடர்பான கடிதத்தில் 8 பேர் கையொப்பமிட்டனர். மூவர் கையொப்பம் இடவில்லை என்று சுமந்திரனால் தெரிவிக்கப்பட்டது. பின்னர் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் தாம் கையொப்பமிட்டதாகத் தெரிவித்தார். மொத்தமாக 9 பேர் கையொப்பமிட்டுள்ளனர். வவுனியாவில் இன்று இடம்பெறவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் இவ்விடயம் வலியுறுத்தப்படும் என்றார். (த-4-6)

# அரசியல்வாதிகள் சொத்து விவரத்தை வெளியிடவேண்டும்

## மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை

கொழும்பு, மார்ச் 11

அரச தலைவர் மற்றும் அமைச்சர்கள் நாட்டு மக்களுக்கு அவர்களின் சொத்து விவரங்களை வெளியிடவேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

மறுக்கும் பட்சத்தில் தகவல் அறியும் சட்டத்தைப் பயன்படுத்தி மக்கள் இது தொடர்பிலான தகவல்களைப் பெறவேண்டும் என்றும் அந்தக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி சுனில் வட்டக்கள இது தொடர்பில் தெரிவித்ததாவது:

தகவல் அறியும் சட்டம் நடைமுறைக்கு வந்து ஒரு மாதம் கடந்துவிட்டது. இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்கள் தகவல்களை பெறவேண்டும். இது மக்களின் சட்டம். அந்த உரிமையை இழந்துவிடக் கூடாது. மக்களின் பணத்துக்கு என்ன நடக்கின்றது? இந்தப் பணத்தை அரசியல்வாதிகள் திருடி இருக்கின்றார்களா என்று மக்கள் அறியவேண்டும்.

அரச தலைவர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் தங்களது சொத்துக்களின் விவரங்களை வெளியிட வேண்டும்.

தகவல் அறியும் சட்டத்தைப் பயன்படுத்தி தனது சொத்து விவரங்கள் கோரப்படுகின்றன என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். உண்மையில், இது நல்ல கோரிக்கை. இந்தக் கோரிக்கையை ஏற்று அவர் உடனடியாகச் சொத்து விவரங்களை வெளியிட வேண்டும்.

சிறிய வாகனம் ஒன்றை வைத்துத் தொழில் செய்யும் ஒருவர் திடீரெனப் பிரதேச சபை உறுப்பினராக ஆகின்றார். ஐந்து வருட முடிவில் பிராடோ வாகனம் வாங்கி ஓட்டுகின்றார். 45ஆயிரம் ஏக்கரில் தென்னந் தோட்டம் வாங்குகிறார். இது எப்படிச் சாத்தியம்? இதற்குப் பின்னால் ஊழல், மோசடி இருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

இவற்றையெல்லாம் அறியும் உரிமை மக்களுக்கு உண்டு. அவர்கள் சொத்து விவரங்களை வெளியிட வேண்டும். இல்லையென்றால் மக்கள் தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக அறிவதற்கு முயற்சி செய்ய வேண்டும்என்றார். (த-3)

# வீட்டில் வைத்திருந்த ஆலய நகை திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 11

ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினர் ஒருவருடையை வீட்டில் வைக்கப்பட்டிருந்த 13 பவுண் எடையுடைய தாவடி முருகப் பெருமான் ஆலயத்தின் முருகக் கடவுளின் தலைக் கலசம் (முடி) திருட்டுப் போயுள்ளதாகச் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், தாவடி வட பத்திரகாளி அம்மன் ஆலய வீதியில் நேற்று அதிகாலை 4 மணிக்குப் பின்னர் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினர் அதிகாலை வேளை தனது வீட்டு முற்றத்தைக் கூட்டிக்கொண்டிருக்கும்போதே அவருக்குத் தெரியாமல் வீட்டின் உள் சென்ற திருடர்கள் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த குறித்த கலசத்தைத் திருடியதாக முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார். இந்தக் கலசம் அடியவர் ஒருவரின் நேர்த்திக் கடனுக்காக வழங்கப்பட்டதாகவும், பாதுகாப்புக்காக ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினரின் வீட்டில் வைக்கப்பட்டிருந்தாகவும் கூறப்பட்டது

இந்த திருட்டு தொடர்பாக மோப்ப நாய்களின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றதாகச் சுன்னாகம் பொலிஸார் மேலும் கூறினர். (த-21)

# காலாவதியான மென்பானம் "வடக்கின் போரில்" விற்பனை

## நிறுவன முகவருக்கு எதிராக வழக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 11

காலாவதியான பொருள்களைக் காட்சிப்படுத்தியமை மற்றும் விற்பனை செய்தமை தொடர்பாக தனியார் நிறுவனம் ஒன்றின் யாழ்ப்பாண முகாமையாளருக்கு எதிராகப் பொதுச் சுகாதாரப் பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

'வடக்கின் போர்' கிரிக்கெட் போட்டி நடைபெறும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான சோடா வகைகள் மற்றும் யூஸ் வகைகள் விற்பனை செய்யப்பட்டன. ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் என்ற வகையில், 100 ரூபாவுக்கு இவை விற்பனை செய்யப்பட்டன. இதன் காலாவதித் திகதியைப் பார்க்காமல் அதிகமான மாணவர்கள் மற்றும் பார்வையாளர்கள் இதனை வாங்கி அருந்தியுள்ளனர். எதேச்சையாக காலாவதித் திகதியை பார்வையிட்ட மாணவர் ஒருவரால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இதன் விற்பனை தடை செய்யப்பட்டது.

சம்பவ இடத்துக்கு யாழ்ப்பாணப் பொதுச் சுகாதாரப் பிரிவினர் வருகை தந்து காலாவதியான சோடா வகை மற்றும் யூஸ் வகைகளைக் கைப்பற்றியதுடன் அந்த நிறுவன யாழ்ப்பாண முகவருக்கு எதிராகவும் வழக்குப் பதிவு செய்தனர். (த-10)

## வேலைவாய்ப்புக் கிடைக்காத பட்டதாரிகளின் போராட்டம்

# தீர்வின்றித் தொடர்கிறது

வடக்கு மாகாணத்தை சேர்ந்த வேலை வாய்ப்புக் கிடைக்காத பட்டதாரிகளின் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 12ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

அரச வேலை வாய்ப்பை வலியுறுத்திவடக்குமாகாணத்தைசேர்ந்த பட்டதாரிகள் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக தமது தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்தப்போராட்டம் நேற்று 12 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. அரசியல் தலைவர்கள் உட்பட அதிகாரிகளிடம் இருந்து சாதகமான பதில்கள் கிடைத்திருப்பினும், அது சாத்தியப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என்று பட்டதாரிகள் தெரிவித்தனர்.

"பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து எம்மை கல்வி கற்க வைத்த பெற்றோர் இன்று நாம் வேலைவாய்ப்பு இல்லாமல் நடுச் சாலைகளில் நின்று போராடுவதை எண்ணி வேதனை அடைகின்றனர். பல்வேறு எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் கல்விகற்ற நாம் இன்று தொழில்வாய்ப்பை பெறமுடியாமல் பலரின் ஏளனத்துக்கு உள்ளாவது வேதனையளிக்கின்றது. இரவு பகலாக தொடர்ச்சியாக போராட்டத்தை முன்னெடுக்கும் நாம் அரசின் மீதோ, தமிழ் அரசியல் தலைமைகள் மீதோ நம்பிக்கை வைக்க வேண்டுமானால் எமது போராட்டத்துக்குச் சாதகமான பதில் கிடைக்க வேண்டும்" என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்த பட்டதாரிகளும் வேலை வாய்ப்பை வழங்குமாறு கோரி நேற்று 9ஆவது நாளாக தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். அத்துடன் மட்டக்களப்பு மாவட்ட வேலை வாய்ப்புக் கிடைக்காத பட்டதாரிகளும் தமக்கான நிரந்த வேலைவாய்ப்பை வழங்குமாறு வலியுறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். (வ-21)

# முன்பள்ளி ஆசிரியர்கள் நியமனங்களில் தாமதம்

## வடக்கு உள்ளூராட்சி அமைச்சு மீது குற்றச்சாட்டு

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் கீழ் உள்ள முன்பள்ளிகளில் 41 ஆசிரியர்களை நியமிக்ககூடிய வாய்ப்பைக் குறித்த அமைச்சு தவறவிட்டுள்ளதாக அந்த ஆசிரியர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வடக்கு மாகாணத்தின் கீழ் உள்ள உள்ளூராட்சி மன்றங்களினால் பராமரிக்கப்படும் முன்பள்ளிகளில் 41 ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி அங்கீகாரம் உள்ளபோதும் தற்போது 4 ஆசிரியர்கள் மட்டுமே நிரந்தர ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர்.

வடக்கில் தற்போது வேலையற்றோர் விடயம் பெரும்பிரச்சினையாக உள்ளது. இந்தநிலையில் முன்பள்ளி ஆசிரியர்களை நியமிக்கக்கூடிய சந்தர்ப்பத்தை வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு தொடர்ந்தும் தவறவிடுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் கடந்த ஆண்டு ஆரம்பத்தில் சுட்டிக்காட்டியவேளை, தற்போதுதான் வடக்கு மாகாண நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. விரைவில் இந்த நியமனம் வழங்கப்படும் என்று கூறப்பட்டது.

2017ஆம் ஆண்டு பிறந்தும் இதற்கான நடவடிக்கைகள் இதுவரை இல்லை. இதனாலேயே வன்னிப் பகுதியில் 2 ஆயிரம் வரையிலான முன்பள்ளி ஆசிரியர்கள் இராணுவத்தினரால் பராமரிக்கப்படும் முன்பள்ளிகளில் இணையும் அவல நிலை ஏற்பட்டது.

எனவே இந்த நியமனங்களை வடக்கு மாகாண சபை விரைந்து வழங்க வேண்டும் என ஆசிரியர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி. விஜயலட்சுமியைத் தொடர்புகொண்டு கேட்டபோது, இந்த விடயம் தற்போது கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது. முன்பள்ளி நியதிச் சட்டத்துக்கான அனுமதியில் ஏற்பட்ட காலதாமதமே இதற்குக் காரணம். இருப்பினும் தற்போது அது கிடைத்துள்ளது. அதனால் நியமனங்களுக்காகக் கடிதம் எழுதியுள்ளோம். அனுமதி விரைவில் கிடைக்கும். கிடைத்ததும் முறைப்படி விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத் தேர்வுக்கமைய நியமனங்கள் வழங்கப்படும் என்றார். (த-101)

# மாகாணத் திணைக்களங்களில் பட்டதாரிகளுக்கு நியமனங்கள்

## மூன்று வாரங்கள் தேவை என்கிறார் ரணில்

யாழ்ப்பாணம், மார்ச் 11

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் விடயத்தில், முதலில் மாகாணத் திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களைத்துரிதமாகப்பூர்த்தி செய்ய முழுமைப்படுத்த முயற்சிக்கின்றேன். அதற்குக்குறைந்தது மூன்று வாரங்கள் எமக்குத் தேவைப்படும். அதேபோன்று கொழும்பு அரச திணைக்களங்களில் புதிதாக வேலைவாய்ப்புக்களை உருவாக்க முடியுமா என்றும் நான் ஆராய்ந்து பார்க்கின்றேன். அதற்கேற்ப விரைவில் தீர்வு ஒன்றைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கிறேன். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூறினார் என்றுதமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்தது.

கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் வடக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் பிரதிநிதிகளுக்கும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் சந்திப்பு ஒன்றை யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஏற்பாடு செய்திருந்தார். சந்திப்பு அலரி மாளிகையில் நேற்றுமுற்பகல் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் பட்டதாரிகள் சார்பில் 6 பிரதிநிதிகளும், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான அஸ்மின், சுகிர்தன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இங்கு பட்டதாரிகள் தமது பிரச்சினைகளையும் நிலமைகளையும் தமது கோரிக்கைகளையும் ரணிலிடம் முன்வைத்தனர்.

போர்க் காலத்தில் உயர்தரக் கல்வியை மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் கற்றோம். தமது குடும்பத்தார் பல்வேறு சிரமங்களுடன் கல்விகற்க வைத்தனர். நாம் அரச துறை மற்றும் தனியார் துறைகளில் வேலை கிடைக்காதவர்களாக அன்றாடம்கூலிவேலை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம் என்று தமது தரப்பு வாதத்தை அவர்கள் ரணிலிடம் முன்வைத்தனர்.



வடக்கு மாகாணம் மாத்திரமல்ல கிழக்கு மாகாணத்திலும் பட்டதாரிகள் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கின்றார்கள். வடக்குக் கிழக்கிலே தனியார் தொழில்வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. போருக்குப் பின்னரான நிலைகளைச் சீர் செய்யும் நோக்கில் பட்டதாரிகளின் கோரிக்கைக்கு அரசு சிறப்புக் கவனம் செலுத்தவேண்டும். எமது வடக்குக் கிழக்குப் பட்டதாரிகள் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் நிலவும் தமிழ் மொழிரீதியான வெற்றிடங்களை நிரப்பு வதற்கும் தயாராகவே இருக்கின்றார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தினார்.

நேற்றுமுன்தினம் மாகாணசபையில் அவைத் தலைவர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் அடங்கிய குழுவினருக்கும், பட்டதாரிகளின் பிரதி நிதிகளுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது. அந்தச் சந்திப்பில் மாகாண திணைக்களங்களில் இருக்கின்ற வெற்றிடங்களை உடனடியாகப் பட்டதாரிகளுக்கு வழங்க முடியுமானவற்றை வழங்க ஆவன செய்தல் என்ற தீர்மானம் எட்டப்பட்டது. அதற்குத் தலைமை அமைச்சரின் உதவிகள் அவசியப்படுகின்றன. அத்தோடு புதிய வேலைவாய்ப்புகள் குறித்து ஆராய்தல் அவசியமாகும் என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தார். இந்தக் கோரிக்கைகளுக்குப் பதிலளித்த போதே ரணில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரணில் மேலும் தெரிவித்ததாவது:

உங்களுடைய கோரிக்கைகள் நியாயமானவை. அதனை நான் புரிந்துகொள்கின்றேன், ஏற்றுக்கொள்கின்றேன். இது உங்களுடைய பிரச்சினை மாத்திரமல்ல, மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய எல்லா மாகாணங்களிலும் இதே நிலமை காணப்படுகின்றது. பெரிய நகரங்களைத் தவிர ஏனைய எல்லா இடங்களிலும் தனியார் வேலைவாய்ப்புகள் இல்லாத நிலமை பரவலாக உள்ளது. ஆனாலும் போர் காரணமாகப் பாதிக்கப்பட்ட உங்களுக்காக நான் சிறப்புக் கவனத்தைச் செலுத்துவேன். நாடு கடன் சுமையால் அவதியுறுகின்றது. நாட்டின் சொத்துக்களை விற்றுத்தான் கடன்களை அடைக்கவேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம். என்றாலும் உங்களது கோரிக்கைகளை நான் ஏற்றுக்கொள்கின்றேன். என்னால் செய்ய முடியுமான உச்ச அளவை நான் நிச்சயமாக உங்களுடைய விடயத்திலே செய்கின்றேன்.

சுற்றுலாத்துறை முன்னேற்றமடைந்து வருகின்றது. தமிழ் நாட்டிய, நாடக கலைஞர்களை அதற்குப் பயன்படுத்த முடியும். அவ்வாறானவர்கள் இருப்பின் அவர்களைச் சுற்றுலாத்துறைத் திணைக்களங்களின் கீழ் உள்ளீர்க்க முயற்சிக்கலாம். எது எவ்வாறாயினும் அரச நியமங்களைக் கடைப்பிடித்து உங்களுக்கான தீர்வுகளைத் துரிதமாக நான் தருவதற்கு முயற்சிக்கின்றேன். நம்பிக்கையோடு இருங்கள். உங்களுக்கு நான் உதவுவேன் -என்றார்.

(த-45)

## கஞ்சாவுடன் கைதானோர் மறியலில்

வவுனியா, மார்ச் 11

வவுனியாவில் கஞ்சா போதைப் பைக்கற்றுக்களுடன் கைது செய்யப்பட்டவர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்று உத்தரவிட்டது.

கஞ்சா விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் 3 பேர் வவுனியா உதவி மதுவரி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டனர்.

முச்சக்கரவண்டியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கையும் மெய்யுமாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் விசாரணை நடத்தியதில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வவுனியா நீதிவான் மன்றில் 3 பேரும் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டனர். அதன்போதே விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக மாவட்ட மதுவரி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர். (த-4)

## தனிச் சிகரெட் இனிமேல் விற்கமுடியாது

*அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் வருகிறது*

கொழும்பு, மார்ச் 11

தனிச் சிகரட்டை விற்பனை செய்ய முடியாதவாறு சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன இதனைத் தெரிவித்தார்.

சிகரட் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையாகவே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது. ஒருவர் புகைப்பழுத சுவாசிப்பதால் வருடாந்தம் 25 ஆயிரம் பேர் உயிரிழக்கிறார்கள். அவர்களுள் ஐந்து சதவீதமானோர் சிறுவர்கள் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார். (த-4)

## பசிலுக்கு எதிராக குற்றப் பத்திரம்

கொழும்பு, மார்ச் 11

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச மற்றும் திருக்குமார் நடேசன் ஆகியோருக்கு எதிராக, கம்பஹா மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மல்வானைப் பகுதியிலுள்ள 16 ஏக்கர் நிலத்தைக் கொள்வனவு செய்தமை தொடர்பில், பணச்சலவைச் சட்டத்தின் கீழேயே, இவர்களுக்கு எதிராக குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4)

## பொலிஸ் பொறுப்பதிகாரி உடனடியாக இடமாற்றம்

கொழும்பு, மார்ச் 11

களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பிரதீப் ஆனந்த சில்வா உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

களுத்துறையில் சிறைச்சாலை பஸ் மீது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியின் கடமையில் தவறு இடம்பெற்றுள்ளதாக பொலிஸ்மா அதிபர் முன்னர் கூறியிருந்தார். (த-10)



## மனித நுகர்வுக்குத் தகுதியற்ற பெரும் தொகை அரிசி சிக்கியது

கொழும்பு, மார்ச் 11

கொழும்பு மொத்த விற்பனை நிலையமொன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 10 இலட்சத்திற்கும் அதிக பெறுமதியான மனித நுகர்வுக்கு தகுதியற்ற ஒரு தொகை அரிசி நுகர்வோர் அதிகாரசபையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு தெரிவித்தது.

அதிகார சபையின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கொழும்பு-12 பிரதேசத்தில் உள்ள மொத்த விற்பனை நிலையம் ஒன்றில் இருந்து காலாவதியான சம்பா அரிசி மீட்கப்பட்டுள்ளது.

இந்த விற்பனை நிலையத்தில் இருந்து 25 கிலோகிராம் நிறையுடைய காலாவதியான 313 மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டபோது அவை சிறிய மூடைகளில் அடைக்கப்பட்டுக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இவற்றின் பெறுமதி 10 இலட்சத்து 17 ஆயிரத்து 250 ரூபா ஆகும். சம்பவம் தொடர்பில் மாளிகாகந்தை நீதிவான் மன்றத்தில் விளக்கமளிக்கப்பட உள்ளதாக மேலும் கூறப்பட்டது. (த-10)

## தங்கையைத் தடுத்து வைத்த அண்ணன் விளக்கமறியலில்

தென்மராட்சி, மார்ச் 11

காதலனுடன் சென்ற தங்கையைக் கொடிகாமத்துக்கு வரவழைத்துத் தடுத்து வைத்த அண்ணனை விளக்கமறியலில் வைக்குமாறும் அண்ணியைப் பிணையில் செல்லுமாறும் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

தென்மராட்சி கிழக்கைச் சேர்ந்த பெண்ணை மட்டுவில் பகுதி இளைஞன் கடந்த மாதம் அழைத்துச் சென்று தனது வீட்டில் வைத்திருந்துள்ளார். தனது தங்கையைக் காணவில்லையென அண்ணன் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

ஏதோ ஒரு விதத்தில் தங்கையின் தொலைபேசி இலக்கத்தை அறிந்த அண்ணன், தங்கையின் பெயரில் வங்கியில் பணம் வைப்பிலிடுவதற்காகக் கொடிகாமத்தில் உள்ள வங்கிக்கு வருகை தருமாறு அறிவித்துள்ளார். அண்ணனின் கதையை நம்பி கடந்த 27 ஆம் திகதி கொடிகாமத்துக்குக் காதலனுடன் தங்கை சென்றபோது, அம்மா அழைத்து வரச் சொல்லியுள்ளார். அரை மணி நேரத்தில் கொண்டு வந்து விடுவதாகக் கூறி அவரை அழைத்துச் சென்றுள்ளார் அண்ணன்.

காதலி திரும்பி வராமையால் அவரது அண்ணனுக்கு எதிராகக் காதலன் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து அண்ணனையும் அண்ணியையும் கைது செய்த பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான், தங்கையை உடனடியாக நீதிமன்றில் முற்படுத்த வேண்டுமென உத்தரவிட்டு அண்ணனை எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் அண்ணியை தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டார். (த-9)

# யாழ்ப்பாண நகரத் திரையரங்குக்குள் பொலிஸ் உத்தியோகத்தர் அட்டகாசம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

விடுமுறையில்வந்திருந்த பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப்பாண நகரில் இயங்கும் திரையரங்குக்குள் நேற்றைய தினம் மதுபோதையில் அட்டகாசத்தில் ஈடுபட்டார். இதன் போது அவர் காயமடைந்தார். அவரை திரையரங்குக்குள் இருந்த இளைஞர்கள் வைத்தியசாலையில் சேர்த்தனர்.

"யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியை வதிவிடமாகக் கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொழும்பு வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுகின்றார். அவரும் நண்பர்களும் நேற்று மதுபோதையில் யாழ்ப்பாண நகரத் திரையரங்குக்குச் சென்றனர். அங்கு கூடியிருந்தவர்களுடன் பொலிஸ் உத்தியோகத்தரும் அவரது நண்பர்களும் மதுபோதையில் தகராறில் ஈடுபட்டனர்.

அவர்கள் அடிதடியிலும் ஈடுபட்டனர். இதனால் திரையரங்கில் திரைப்படம் பார்க்க வந்தவர்கள் அந்த மூவரையும் மடக்கிப் பிடிக்க முயன்றனர். அதில் இருவர் தப்பியோடிய நிலையில் பொலிஸ் உத்தியோகத்தர் போதையின் காரணமாக சாலையில் வீழ்ந்து மாட்டிக்கொண்டார்.

பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. தகராறில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட இருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

(வ-101, 103)

குடுவுடன் கைதான குடும்பத்தலைவர்

# பொலிஸாருக்கு எதிராக நீதிமன்றில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 11

குடு வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டிக் கைதுசெய்யப்பட்ட குடும்பத் தலைவர், தான் அதை வைத்திருக்கவில்லை. பொலிஸார் என் மீது குடுவை வீசிவிட்டு பின்னர் கைது செய்தனர். பொலிஸார் வேண்டுமென்றே இவ்வாறானதொரு குற்றச்சாட்டை சோடித்துள்ளார்கள் என்று நீதிமன்றில் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்து 2 கிராமும் 38 மில்லி கிராமும் அளவுகொண்ட குடு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் மாலை ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவர் யாழ்ப்பாண நீதிவான் மன்றில் பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டார்.

இதன்போது குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சட்டத்தரணி, இந்த வழக்கு சோடிக்கப்பட்ட வழக்கு. பாதிக்கப்பட்டவர் மீது வீண்பழியைப் பொலிஸார் போடுகின்றனர் என்று மன்றில் தெரிவித்தார்.

இதற்கு பதில் நீதிவான் பொலிஸாரைப் பார்த்து, குடு போதைப் பொருளை குறித்த நபரிடமிருந்து தான் மீட்டீர்களா? எதில் குடுவை வைத்திருந்தார் என்று கேள்வியெழுப்பினார்.

அதற்கு பொலிஸார், அவருடைய தலைக் கவசத்துக்குள்தான் குடு இருந்தது. அதன் அளவு 2கிராமும் 38 மில்லி கிராமம் கொண்டது. நாம் அதை பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பியிருக்கிறோம் என்றனர்.

தலைக்கவசத்துக்குள் எவ்வாறு இருந்தது? அதற்குள் குடு வைப்பதற்குரிய இடவசதியிருக்கிறதா? என்று பதில் நீதிவான் கேள்வி எழுப்பினார். நாங்கள் தலைக்கவசத்தில் இருந்துதான் குடுவை எடுததோம் என்று கூறி சந்தேகநபரின் தலைக் கவசத்தை பொலிஸார் காண்பித்தார்கள்.

"நான் மாலை நேர வகுப்புக்குச் சென்ற எனது பிள்ளைகளை ஏற்றுவதற்காகவே சென்றேன். நான் இந்தச் செயலைச் செய்யக்கூடியவன் இல்லை. பொலிஸார் வேண்டுமென்றே இவ்வாறான குற்றச் சாட்டை என்மீது சுமத்துகின்றார்கள். நான் மோட்டார்ச் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, என்னை இடைமறித்த சிவில் பொலிஸார்தான் என்மீது குடுவை வீசிவிட்டு பின்பு என்னைப்பிடித்தார்கள்" என்று சந்தேகநபர் தெரிவித்தார்.

இந்த நிலையில் வழக்கை விசாரணை செய்த பதில் நீதிவான் குற்றஞ்சாட்டப்பட்டவரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

"மகனை ஏற்றிவரவே அவர் சென்றார். குடு வைத்திருக்கும் அளவுக்கு நாங்கள் கெட்டவர்கள் அல்ல. நாங்கள் சமூகத்தில் மரியாதையான வேலை செய்பவர்கள். மரியாதையாக வாழ்பவர்கள். எங்கள் மீது பொலிஸார் தேவையில்லாமல் இவ்வாறு குற்றத்தைச் சுமத்துகின்றார்கள்" என்று குற்றஞ்சாட்டப்பட்டவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

(வ-4, ரி)

# இலங்கையை ஐக்கிய நாடுகள் சபை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும்

## உலகத் தமிழர் பேரவை வலியுறுத்து

இலங்கையை ஐக்கிய நாடுகள் சபை உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும் என்று உலகத் தமிழர் பேரவை கோரியுள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் சபை, இலங்கை தொடர்பில் வெளியிட்ட அறிக்கை வரவேற்கப்பட வேண்டிய விடயம். ஐ. நா. மனித உரிமைகள் சபையின் நீதிப் பொறிமுறை தொடர்பில் இலங்கையின் ஆக்கபூர்வமான தொடர்பு, அரசமைப்புத் திருத்தம் மேற்கொள்ள எடுத்து வரும் முயற்சிகள் போன்றன வரவேற்கப்பட வேண்டியவை. எனினும் நிலைமாறுகால நீதிப்பொறிமுறைமை வருத்தப்படுமளவிற்கு மந்தகதியில் இடம்பெற்று வருகின்றது.

நீதிப் பொறிமுறைமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் இலங்கை அரசின் தரப்புக்கள் ஒரே விதமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும்" என்று உலகத் தமிழர் பேரவை கேட்டுள்ளது.

(வ)

# மனித உரிமைகளை நீதிமன்றங்கள் பாதுகாக்கவேண்டும்

## தலைமை நீதியரசர் வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 11

மக்களின் மனித உரிமைகளை காப்பதே நீதிமன்றங்களின் முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று தலைமை நீதியரசர் பிரியசாத் டெப் தெரிவித்தார்.

இலங்கையின் 45ஆவது தலைமை நீதியரசராக கடந்தவாரம் நியமிக்கப்பட்ட பிரியசாத் டெப் நேற்று உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் உரையாற்றினார். அதன் போதே அவர் இதனை தெரிவித்தார்.

"பொதுமக்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க வேண்டுமானால் நீதிபதிகள் உயர்ந்த குணங்களுடன் செயற்படுவது அவசியம்.

அரசமைப்பு மற்றும் சட்டத்தைக் காக்க சகல நீதிபதிகளும் கடமை பெற்றுள்ளனர். இதன்மூலம் மாத்திரமே பொது மக்கள் நீதிமன்றங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையைப் பாதுகாக்க முடியும். வழக்கு விசாரணைகளின் போது ஏற்பட்டுள்ள தாமதங்களை தடுக்க மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். வழக்கு விசாரணைகளின் போது புதிய தொழில்நுட்ப விதிமுறைகளை பயன்படுத்துவது அவசியம். அதேபோன்று வழக்கு விசாரணைகளை தாமதப்படுத்தக் காரணமாகவுள்ள சில சட்ட விதிமுறைகளுக்கு திருத்தங்களை மேற்கொள்ள அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(வ)

## மருத்துவ அதிகாரிகள் சங்கம்

# தனி ஒரு சிகரட் விற்பனைக்கு தடா போடுவதற்கு வரவேற்பு

கொழும்பு, மார்ச் 11

தனி ஒரு சிகரட் விற்பனை செய்வதைத் தடைசெய்வதற்கான சட்டம் இயற்றுவதற்கு அரசு கவனம் செலுத்தி இருப்பதை வரவேற்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

இது தொடர்பிலான அமைச்சரவைப் பத்திரத்தை விரைவாக தாக்கல் செய்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த சங்கத்தின் செயலாளர் மருத்துவர் நவீன் டி சொய்சா தெரிவித்தார்.

"இலங்கையினுள் சிகரட் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான 10 யோசனைகள் அடங்கிய பட்டியல் ஒன்று மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் 6 மாதங்களுக்கு முன்னர் அதிகாரிகளிடம் வழங்கப்பட்டது. சிகரட்டுக்களை ஒவ்வொன்றாக அல்லது குறைந்தளவு சிகரட்டுக்கள் உள்ளடக்கப்பட்ட பெட்டிகளை விற்பனை செய்வது தடைசெய்யப்பட வேண்டும் என்பது அந்த யோசனைப் பட்டியலில் கூறப்பட்டிருந்த முக்கியமான விடயமாகும்.

அதன்படி இப்போதாவது இதுதொடர்பில் அரசு கவனம் செலுத்தியிருப்பது வரவேற்கப்படவேண்டிய விடயமாகும்" என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்க செயலாளர் தெரிவித்தார்.

(வ)

# பண்டி நெல்லால் விவசாயிகள் பாதிப்பு

வரணி, மார்ச் 11

வரணிப் பிரதேச நெல் வயல்களில் பண்டி நெல் என அழைக்கப்படும் பாவனைக்கு உதவாத நெற்பயிர்கள் வளர்ந்து நெல் வேளாண்மைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

கடந்த வருடம் மாரி மழை பொய்த்த நிலையில் வயல்களில் பண்டி நெல் அதிகமாக வளர்ந்து காட்சியளிக்கின்றது. பார்வைக்குப் பயிர் வளரும் காலத்தில் இவை நெற்பயிர்கள் போன்று காணப்பட்டாலும் நெற்கதிர்கள் வெளிவரும் போதே இவற்றை விவசாயிகளால் அடையாளம் காணமுடியும். இதனால் புல்லுப்பிடுங்கும் காலங்களில் இனங்கண்டு அழிக்க முடியாத நிலை உள்ளது.

இந்த வயல் பிரதேசத்தில் உள்ள சீரமைக்கப்பட்ட குளத்தைச் சூழ உள்ள வயல்கள் முழுமையாக பண்டி நெல் வளர்ந்து ஆக்கிரமித்துள்ளதுடன் நெல் அறுவடையில் இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

(வ-122)

# கவியரங்கம்

கொழும்பு, மார்ச் 11

வலம்புரி கவிதா வட்டத்தின் 35ஆவது பௌணர்மி கவியரங்கம் கொழும்பு அல் ஹிக்மா கல்லூரியில் மறைந்த மலையக கவிஞர் சக்தி பாலையா அரங்கில் கவிஞர் டி.என். இஷ்ரா தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அரங்கில் ஊடகவியலாளர் செல்வி ஜீவா சதாசிவம் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு கவிஞர் சக்தி பாலையாவைப்பற்றிய சிறப்புரை ஆற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-10)

# சடலம் மீட்பு

கொழும்பு, மார்ச் 11

கொழும்பு புறக்கோட்டை தொடருந்து நிலையப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். தொடருந்து நிலையத்தின் மலசல கூடத்துக்குள்ளிருந்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், அது யார் என அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ-10)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

## மனச்சாட்சிப்படி...

யாகவும், நீதியாகவும் சபாநாயகர் முடிவெடுக்கவேண்டும் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிரணியில் இருக்கும்போது எமக்கு அநீதி இழைக்கப்பட்டது. அதன் தாக்கம் எப்படி இருக்கும் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சமமான உரிமைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றேன்.

மகிந்த ஆதரவு அணியின் பிரச்சினை தீரவேண்டும் என்பதுதான் எனது கருத்தாகவும் இருக்கின்றது. அடுத்த வாரம் இது சம்பந்தமாக கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்தப்படும். அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏகமனதாகவே என்னைத் தெரிவு செய்தீர்கள். ஆகவே, பிரச்சினை ஏற்படும்போது தீர்வைக் காண வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கின்றது.

ஆனாலும், எனக்கும் சில வரையறைகள் இருக்கின்றன. உட்கட்சி விவகாரங்களில் என்னால் தலையிடமுடியாது என்பதையும் குறிப்பிடவேண்டும்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குரிய பணி இடம்பெற்று வருகின்றது. அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தனவை 9 தடவைகள் எச்சரிக்கை விடுத்தேன். அதற்கு அவர் செவிமடுக்காததாலேயே தீர்மானமொன்றை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன். இதையிட்டுக் கவலையடைகின்றேன்.

அதேவேளை, மனச்சாட்சியின் பிரகாரமே செயற்பட்டு வருகின்றேன். நடுநிலைமையையும் காத்து வருகின்றேன். தேர்தலின் பின்னர் இன்றும் சிறிகொத்தா பக்கம் காலடி எடுத்து வைக்கவில்லை - என்றார்.

(த-4)

# நட்ட ஈடு எங்களுக்கு வேண்டாம் எங்கள் காணிகளைத் தாருங்கள்

## கேப்பாபிலவு மக்களின் போராட்டம் 10 ஆவது நாளாகவும் தொடர்கிறது








முல்லைத்தீவு. மார்ச் 11

"எங்கள் பூர்வீகக் காணிகளுக்கு நட்ட ஈடு ஒன்றும் வேண்டாம். எங்களுக்கு எங்கள் பூர்வீக காணிகளைத் தாருங்கள் இல்லாத விடத்து எங்களை நாடு கடத்துங்கள்" என்று கேப்பாபிலவு தொடர் அற வழிப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

கேப்பாபிலவு மக்களின் பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி கேப்பாபிலவு மக்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள தொடர் அறவழிப் போராட்டம் 10 ஆவது நாளாகவும் எத்தகைய உறுதிமொழிகளும் இன்றி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

"கூட்டு அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வடகிழக்கு மாகாணங்களில் இராணுவம் சுவீகரித்த 6 ஆயிரம் ஏக்கர் காணிகளுக்கு மேல் விடுவித்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர். அதே போன்று எங்கள் பூர்வீக நிலத்தையும் விடுவியுங்கள். எங்கள் காணிகளுக்கு நட்ட ஈடுதருவதாகத் தெரிவித்தனர். நாங்கள் பரம்பரையாக வாழ்ந்த எங்கள் வாழ்வியல் நிலத்தைத் தாருங்கள் எத்தகைய நட்ட ஈட்டையும் நாம் பெற்றுக்கொள்ளப் போவதில்லை " என்று கேப்பாபிலவு தொடர் அறவழிப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

கேப்பாபிலவில் உள்ள 482 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி 138 குடும்பங்கள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் தொடர் அறவழிப்போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

"கேப்பாபிலவுக் காணியை விடுவிக்கக் கோரி கடந்த வருடம் மார்ச் மாதம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில ஈடுபட்டபோது, விரைவில் காணிகளை விடுவிப்பதாக எமக்கு உறுதி மொழி வழங்கப்பட்டது. இன்று வரை எமக்கு எத்தகைய முடிவும் கிடைக்க வில்லை" என போராட்டத்தில் கலந்து கொண்ட ஆ. வேலாயுதம்பிள்ளை தெரிவித்தார். (ஐ -7)

# லயன்ஸ் கழகப்பிரதிநிதிகள் யாழிலிருந்து கொழும்புக்கு நேற்று வாகனப் பேரணி

*பன்னாட்டு லயன்ஸ் கழகத்தின் நூற்றாண்டை முன்னிட்டு ஏற்பாடு*

பன்னாட்டு லயன்ஸ் கழகத்தின் நூற்றாண்டை முன்னிட்டு இலங்கையில் உள்ள அனைத்து லயன்ஸ் கழகங்களும் ஒன்றிணைந்து வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான விழிப்புணர்வு வாகன பவனி நேற்று நடைபெற்றதுடன், நடைபவனி இன்று நடைபெறவுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது.

நாட்டின் அனைத்துப் பகுதியிலிருந்தும் புறப்படும் லயன்ஸ் கழகங்களின் வாகன அணிகள் நேற்று பிற்பகல் 3 மணிக்கு சிலாபத்தைச் சென்றடைந்து, அங்கிருந்து வாகன அணி கொழும்பை நோக்கிப் புறப்பட்டது.

இன்று காலை 7 மணிக்குக் கொழும்பில், அனைத்து லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளும் சுமார் 5 ஆயிரம் பேர் வரை இணைந்து நடைபவனியாக விகாரமாதேவி பூங்காவுக்குச் செல்லவுள்ளனர்.

அங்கு நடைபெறும் கூட்டத்தில் தலைமை அமைச்சல் ரணில் விக்கி ரசிங்க தலைமை விருந்தினராகவும், அடுத்த வருட பன்னாட்டு லயன்ஸ் கழகங்களின் ஆளுநராக தெரிவு செய்யப்பட்ட அகர்வால் சிறப்பு விருந்தி னராகவும் கலந்து கொள்வர் எனத் தெரிவிக் கப்பட்டது

பன்னாட்டு லயன்ஸ் கழகங்களின் 306 பி1 மாவட்ட வாகன பவனிநேற்றுக்காலை ஆளுநர் லயன் வை. தியாகராசா தலைமையில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுசாவகச்சேரியைச் சென்றடைந்தது.

அங்கிருந்து புறப்பட்ட வாகன அணி கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய லயன்ஸ் கழகங்களின் வாகன அணிகளுடன் வவுனியாவில் இணைந்து பிற்பகல் 3 மணிக்கு சிலாபத்தைச் சென்றடைந்தது.

சிலாபத்துக்கு வருகைதந்த ஏனைய லயன்ஸ் கழகங்களின் வாகன அணிகளும் ஒன்றிணைந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டு, கொழும்பைச் சென்றடைந்தன என்று 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் வை.தியாகராசா தெரிவித்தார்.

(ஐ-9)



**காணி விற்பனைக்கு**

புத்தூரில், புத்தூர் சந்தியில் இருந்து சுன்னாகம் றோட்டில் ஐந்தாவது காணி 6½ பரப்பு விற்பனைக்கு உண்டு. இரண்டு துண்டுகளாகவும் கொடுக்கலாம். இருவர் சேர்ந்து வேண்டலாம்.

076 537 7328

**வேலைவாய்ப்பு**

யாழ் நகரில் நிர்மாணிக்கப்படும் நான்கு மாடிக் கட்டடம் ஒன்றின் கட்டட வேலைகளை மேற்பார்வை செய்ய அனுபவம் வாய்ந்த T.O (தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்) தேவை. முழுநேர கடமை. (பகுதி நேரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) முன்பு தொழில் செய்த இடம். கல்வித் தகைமை. அனுபவ காலம் என்பவற்றைத் தெளிவாக குறிப்பிட்டு கடிதம் அனுப்பவும். மற்றும் முழு நேர காவலாளியும் தேவை. (Security Guard) சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

கடிதம் அனுப்பவேண்டிய முகவரி: விளம்பர இல- 5525
மே.பா.உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**செம்மணி இந்துமயான அபிவிருத்திச்சபை**

பதிவு இல.HA/4/JA/266
393/30, கோயில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**பொதுக்கூட்ட அறிவித்தல்**

காலம் : 26.03.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி
இடம் : செம்மணி இந்துமயான மண்டபம்
தலைவர் : திரு.லயன் சி.இலட்சுமிகாந்தன்

**நிகழ்ச்சி நிரல்**

01) தேவாரம்
02) தலைமையுரை
03) பிரேரணைகள். அறிக்கைகள்
04) பிறவிடயங்கள்
05) புதிய நிர்வாகிகள் தெரிவு
06) நன்றியுரை

அனைவரையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

சி.இலட்சுமிகாந்தன் தலைவர்
மு.யோகராசா பொருளாளர்
இ.தனிகைநாதன் செயலாளர்

**மணமகள் தேவை**

கொழும்பு. வெள்ளவத்தையில் வசிக்கும் கட்டட பொறியியலாளராக பணியாற்றும் றோமன் கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த 38 வயதுடைய மணமகனுக்கு படித்த அழகான மெல்லிய மணமகள் தேவை.

077 444 0277

**பெயர்மாற்றம்**

இலக்கம்42. மாட்டின்லேன். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குணசேகரா கினடியா ஆகிய நான் (11.03.2017) இன்றிலிருந்து எனது பெயரை குணசேகரா ஷெற்றீசியா என்று மாற்றம் செய்வதோடு சகல ஆவணகளிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்று அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குணசேகரா ஷெற்றீசியா

**முற்றிலும் இலவசம்**

G.C.E O/L மற்றும் G.C.E A/L படித்த மாணவர்களுக்கு தமது உயர்கல்வியை தொடர நல்ல ஆலோசனைகள் குறைந்த பட்சம் IELTS 5.00 புள்ளி

உடனடியாக விரையுங்கள்
குறைந்த செலவில் கொழும்பில் அல்லது வவுனியாவில் வகுப்புக்களை ஒழுங்குசெய்ய முடியும்.

திரு.நவின் - 076 667 3326 (வவுனியா)
திரு.யோகேஸ் - 077 423 8215 (யாழ்ப்பாணம்)

**காணி விற்பனைக்கு**

புதுமடம், உடுவில் தெற்கு மானிப்பாயில் மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

சி.கேதீஸ்வரன்- 070 292 0897

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உணவகம் ஒன்றுக்கு சமையல் உதவியாளர் மற்றும் சுத்திகரிப்பாளர் தேவை. (காய்கறி வெட்டுதல். பாத்திரங்கள் கழுவுதல். சமையல் வேலை தெரிந்தவர்கள்.)

077 713 1594

**மணமக்கள் தேவை**

டாக்டர்கள். இஞ்சினியர்கள். பட்டதாரிகள். வர்த்தகர்கள். வங்கியாளர்கள். கணக்காளர்கள் சைவ போசனம் குற்றமுள்ள. குற்றமில்லாத மணமக்களும் வெளிநாட்டில் பிரஜா உரிமை பெற்ற மணமக்களும் விவாகரத்துப் பெற்ற மணமக்களும் சூரியன். செவ்வாய் குற்றமுள்ள, குற்றமில்லாத உள்நாட்டு. வெளிநாட்டு மணமக்களும் எம்மிடம் உள்ளனர்.

* 85 இல் சூரியன், செவ்வாய் 8 இல் 43 பாவம் உடைய M.Sc. இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு:- கமலக்கண்ணன் திருமண சேவை
இல 62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி.
077 607 0862

## அறிவித்தல்

**காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் காரைநகர்**

**கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல் 18.03.2017**

மேற்படி சங்கத்தின் துணை விதி 20. 02இன் படி தன்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக இக்கிளைகளின் பொதுச்சபைக் கூட்டங்கள் மேற்படி ஒழுங்கு விதிகளின் பந்தி 9இற்கமைய கீழ் குறிப்பிடப்படும் கால அட்டவணைப்படி நடைபெறுமென யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**1. கிளைப் பொதுச்சபைக் கூட்ட ஆரம்பம் - 18.03.2017 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி**
**2. கூட்டம் நடைபெறும் இடங்கள் - விவரம் கீழ்வருமாறு**

| தொ.இல | கி.இல | கி.பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர்கள் |
|---|---|---|---|---|
| 01. | 62 | வேரப்பிட்டி | ஸ்ரீ முருகன் முன்பள்ளி | ப.தவப்பிரியன் |
| 02. | 63 | மருதபுரம் | மருதமலை முருகன் முன்பள்ளி | இ.உதயகுமார் |
| 03. | 64 | மல்லிகை | கலைவாணி சனசமூக நிலையம் | க.சசிகரன் |
| 04. | 65 | விக்காவில் | சங்க காரியாலய மண்டபம் | பா.குருபரன் |
| 05. | 66 | ஊரி | பேரம்பலம் முன்பள்ளி | க.செந்தூரன் |

க.வசந்தகுமார்.
கௌரவ செயலாளர்,
காரைநகர் பனை தென்னை வளஅபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

**திகதி : 10.03.2017** J/8217(14,17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
24 . 06 . 1947

இறப்பு
09 . 02 . 2017

**அமரர் முருகேசு யோகராசா**

பாரினிலே பல பேர்
பசிமுகம் பார்த்த அப்பாவே
பாசமாக எங்களை வளர்த்து
பசியாற வைத்த அப்பாவே
போனது முப்பத்தொரு நாள்கள்
என்றும் உங்கள் நினைவுடன்

7/3, கற்குளலேன்.
கொட்டடி, யாழ்ப்பாணம். (A2A/1886)(22.18)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்



## நன்றி நவிலல்

**பொன்னம்பலம்**
**நாகேந்திரம்**



இளைப்பாறிய கணித ஆசிரியர் Head f the Dept. Grommer School. U.K) வீமன்காமம் வடக்கு. மாவிட்டபுரத்தைச் சேர்ந்த இளைப்பாறிய கணித ஆசிரியர் (Head of the Dept. Grommer School. U.K) பொன்னம்பலம் நாகேந்திரம் கடந்த 07.02.2017 அன்று லண்டனில் சிவபதம் எய்தினார்.

அன்னார் வீமன்காமம் வடக்கு. மாவிட்டபுரத்தைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான கணக்காளர் இளையதம்பி பொன்னம்பலம் - உருக்குமணி தம்பதிகளின் ஏக புத்திரனும். கட்டுவனைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அம்பலம் பொன்னையா (அதிபர்) - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும். காலஞ் சென்ற ஆசிரியர் புட்கலாதேவியின் அன்புக் கணவரும். அனுராதை. கேசவன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும். கேசவன் பத்ம நாதனின் ( CIBC - Canada) மாமனாரும். அனகன். ஸ்ரீமன் ஆகி யோரின் அம்மப்பாவும். திருமதி நாகேஸ்வரி கதிரவேலுவின் சகோதரனும். ஸ்ரீரங்கன். Dr. யாழினி. ஸ்ரீதரன். கமலினி. ஸ்ரீமுகுந்தன். சிவாஜினி ஆகியோரின் தாய் மாமனும். காலஞ் சென்ற கதிரவேலு. கனகரட்ணம். பாலசிங்கம். பாலநாதன் மற்றும் சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெற்றது.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றியோருக்கும் குடும்பத்தினர்கள் சார்பில் நன்றி தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

(ஜே/8205)(11.18)

அனுராதை - 416 431 4924, ஸ்ரீரங்கன் - 077 294 2761,
யாழினி, நாகேஸ்வரி - 077 361 8121



## ஒன்பதாண்டில் நினைவுகள்



தோற்றம்
01 . 06 . 1933

மறைவு
11 . 03 . 2008

**அமரர் இளையதம்பி வல்லிபுரம்**

இளைப்பாறிய அதிபர், சமாதான நீதிவான், சமூக சேவையாளர்,
உதயன் செய்தியாளர், ஸ்தாபகர் - யா/இமையாணன் அ.த.க
பாடசாலை

ஒன்பதாண்டுகள் உருண்டோடியதே.... அப்பா
எட்டாத தூரம் சென்று !.....
தொட்டணைத்து தோள் சுமந்து
தோணியாய்க் கரைசேர்த்தீர் எம்மை......
இரவு பகல் பாராது சேவைகளை ..... இன்றும்
இமையூரும் மானியூரும் புகழ்ந்திட.....
மறைந்தும் மறையா மக்கள் பணிகளை
மறவாது மக்கள் உரைப்பதால்.....
பெருமையடைகின்றோம்....

J/8216(14.17)

தகவல்:
வ.முருகதாஸ் (அதிபர்)
077 612 7411

குடும்பத்தினர்.
'ஜெயமஹால்'
மானிப்பாய் வடக்கு,மானிப்பாய்.


# அச்சுவேலி ப.நோ.கூ. சங்கத்தின் கட்டடத்தை கையளிக்கப் பரிந்துரை

யாழ்ப்பாணம், மார்ச் 11

அச்சுவேலி ப.நோ.கூ. சங்கக் கட்டடத்தை மீள சங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதிக்கு வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் பரிந்துரைத்துள்ளது. இவ்வாறு சங்கத்தின் தலைவர் தாமரைச்செல்வன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது சங்கத்துக்குச் சொந்தமான ஒரு கட்டடம் 1996 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தால் கையகப் படுத்தப்பட்டுள்ளது. அதை விடுவிக்க வேண்டும் என்று நாம் பல தடவைகள் பாதுகாப்பு அமைச்சு, கூட்டுறவு அமைச்சு ஆகியவற்றின் ஊடாக முயற்சித்தோம். அது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று பதிலளிக்கப்பட்ட போதும் கட்டடம் கையளிக்கப்படவில்லை. மீண்டும் ஆளுநர் செயலகம் மற்றும் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு சென்றிருந்தோம்.

அதை ஆராய்ந்த ஆளுநர் செயலகம் கடந்த முதலாம் திகதி எமக்கு கிடைக்கும் வகையில் பிரதியிட்டு யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதிக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் கடிதம் அனுப்பியுள்ளது. அதில் கூட்டுறவுச் சங்கத்தின் கோரிக்கைக்கமைய கட்டடத்தை மீளளிக்க ஆவன செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது- என்றார். (ற - 101)


## 22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
18 . 04 . 1942

இறப்பு
14 . 02 . 1995

**தியாகராசா அரசரத்தினம்**

(இளைப்பாறிய இ.போ.ச.சாரதி - காரைநகர்)

*திதி: 11.03.2017*

ஆண்டுகள் இருபத்திரெண்டு சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம் - நேரம்
தவறாமல் உங்கள் நினைவு எமை வாட்டுதே
எம் மனம் கவர்ந்த நீங்களின்றித் தவிக்கின்றோம்.

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம். J/8204(14.17)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
15 . 03 . 1939

அமரத்துவம்
11 . 03 . 2009

**அமரர் உயர்திரு வயிரமுத்து**
**குலசிங்கம்**

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்களப்
பிரதிப்பணிப்பாளர் நாயகம், இலங்கை)

அன்பின் திருவுருவே பாசத்தின் பிறப்பிடமே
எமையெல்லாம் தாங்கொணாத் துயரில் துடிக்கவிட்டு
எங்குதான் ஓடி மறைந்தீர்கள் ஐயா
சென்ற இடமெல்லாம் புகழ் ஈட்டி வாழ்ந்தீர்களே இப்போது
நீங்கள் இல்லாத இல்லம் வெறிச்சோடிக் கிடக்கின்றதே ஐயா
உயிர் வாழும் வரை உங்கள் கொள்கைகளைக்
கடைப்பிடித்து வாழ முயற்சிப்போம் ஐயா
ஆண்டுகள் எட்டு ஓடி மறைந்தாலும் கலங்கரை விளக்கமாய்
திகழ்ந்த உங்களைப் பிரிந்து வாடித் தவிக்கின்றோம் ஐயா
என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
**உங்கள் பிரிவால் துன்புற்று நிற்கும்**

Mrs.S.Kulasingam,
London. (ஜே/8203)(11.18)

அன்பு மனைவி,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனிமார், பெறாமக்கள்.


# வியாபாரி மூலையில் கேரளக் கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம்.மார்ச்.11

பருத்தித்துறை- வியாபாரிமூலை முதலாம் கட்டைப் பகுதியில் 1கிலோ 380கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டது.

குறித்த பகுதியில் கஞ்சா வியாபாரம் இடம்பெறுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இவ்வாறு கஞ்சா மீட்கப்பட்டது. எனினும் இதனுடன் தொடர்புடையவர்கள் யாரும் இதுவரை கைதாகவில்லை. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ-26)

# மறவன்புலோ திருமகள் நூலக ஆண்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 11

திருமகள் மாதர் பொது நூலக முதலாம் ஆண்டு விழாவும், திருமகள் வீட்டுத்தோட்ட விளைபொருள் சந்தை ஆரம்ப நிகழ்வும் மறவன்புலோ சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

மறவன்புலோ திருமகள் மாதர் சி.க.கூ.சங்கத்தின் உப தலைவர் திருமதி இந்திராதேவி குணபாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இலகுநாதனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாச வெளிக்கள உத்தியோகத்தர் என்.சிவகுமாரனும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது.

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 11

திருமறைக் கலாமன்றம் நடைமுறைப்படுத்தும் 'சிறுவர்கள் சமூக இணக்கப்பாட்டின் முகவர்களாகிறார்கள்' என்னும் தலைப்பிலான சிறுவர் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக 'சிறுவர் நாடாளுமன்றம்' நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் திருமறைக் கலாமன்றத்தின் பிராந்திய மன்றங்களைச் சேர்ந்த 180க்கும் மேற்பட்ட தமிழ்,சிங்கள,முஸ்லிம் சிறுவர்கள் கலந்து கொள்ளவுள்ளதோடு, திருமறைக் கலாமன்றத்தின் சிறுவர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 35 பேர் சிறுவர் தொடர்பான பிரச்சினை, சமூக ஒருமைப்பாடு, நல்லிணக்கம் என்பவற்றில் தமது பங்களிப்பு மற்றும் திருமறைக் கலாமன்றத்தின் அனுபவம், சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் சமவாயம் என்பன தொடர்பாகவும் உரையாற்றவுள்ளனர். (வ-10)

# ஆய்வரங்குத் தொடர்

யாழ்ப்பாணம், மார்ச் 11

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படும் ஆய்வரங்குத் தொடரின் மூன்றாவது ஆய்வரங்கு 'ஒக்ரோபர் புரட்சியும் தேசிய இன விடுதலையும்' என்ற தலைப்பில் இல. 62, கே.கே.எஸ். சாலை, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3. 30 மணியளவில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

சோ. தேவராஜாவின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த ஆய்வரங்கில், ஆய்வுரையினைத் சி. சிவசேகரமும், தேசிய இன ஒடுக்கலும் முதலாளியமும், சுயநிர்ணய உரிமை, தேசிய இன விடுதலை பற்றிய வர்க்கக் கண்ணோட்டம் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராய்கின்றதான இந்த ஆய்வுரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

# வயல்களில் அமைத்த குழாய்க் கிணறுகள் உவர் நீராக மாற்றம்

## தென்மராட்சி தெற்கு விவசாயிகள் பாதிப்பு

தென்மராட்சி, மார்ச் 11
வறட்சியிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க வயல்களில் அமைக்கப்பட்ட குழாய்க் கிணற்று நீர் உவராக மாறியதால் தென்மராட்சி தெற்குப் பிரதேச நெற் செய்கையாளர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென்மராட்சி தெற்குப் பகுதிகளில் உள்ள வயல்களில் கடந்த வருடம் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகள் பலவற்றில் உவர் நீர் வருகின்றன எனவும் அதனைப் பயன்படுத்த முடியாதுள்ளதெனவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

"கடந்த வருடம் போதிய மழை வீழச்சி இன்மையால் பலர் வயல்களுக்கு நீர் பாய்ச்சுவதற்காக வயல்களில் குழாய்க் கிணறுகளை அமைத்து நீர் பாய்ச்சினர். முதற் தடவை நல்ல நீராகக் காணப்பட்டு பின்னர் உவர் நீராக மாறியது. உவர் நீராக குழாய்க் கிணற்று நீர் மாறியமை தெரியாமல் பயிர்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டது. அதனால் வயல்களில் விளைச்சல் பாதிக்கப்பட்டதுடன் நிலமும் உவர்த்தன்மைக்கு மாறியுள்ளது" என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

"தனங்களப்பு மறவன்புலோ வயல் பகுதிகளில் 2 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட வறட்சி காரணமாக வயல்களில் நெற் செய்கையாளர் சிலரால் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. அவற்றின் ஊடாக பயிர்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டது. கடந்த வருடம் மழை வீழச்சி குறைவாகக் காணப்பட்டதால் வயல்களில் காணப்பட்ட குளங்களில் நீர் குறைவடைந்தது. பயிர்கள் பாதிப்பு ஏற்படாதிருக்க சிலர் குழாய்க் கிணறுகள் அமைத்து நீர் பாய்ச்சினர்.

முதற் தடவை நீர் இறைத்த போது நல்ல நீராகக் காணப்பட்டது. பின்னர் நீரின் தன்மை மாறி உவர்த்தன்மையாக மாறியது. இது தெரியாமல் பயிர்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டது. இதனால் பயிர்களுக்கு பாதிப்ப ஏற்பட்டு விளைச்சலும் குறைவடைந்தன" என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக துறைசார் நிபுணரிடம் கேட்ட போது, "தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான நெல் வயல்கள் உள்ள பகுதிகளைச் சுற்றியும் கடலேரி காணப்படுகிறது. இதனால் நீர்மட்டத்தின் தன்மையும் மாறுபடலாம். வயலின் குறிப்பிட்ட அளவு ஆழத்துக்கு நல்ல நீர்ப் படை காணப்பட்டாலும் அதற்குக் கீழ் கடலேரி நீரின் ஓட்டம் காணப்படும்.

வயல்களில் குழாய்க் கிணறு அமைப்பதற்குப் பதிலாக கிணறுகள் அமைத்துப் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுங்கள் எனத் துறை சார் அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டபோதிலும், சிலர் அதனைச் செவிமடுக்காமல் குழாய்க்கிணறுகள் அமைத்துள்ளனர்.

ஆரம்பத்தில் அவை நல்ல நிலையில் காணப்பட்டாலும் பின்னர் மாறுபடலாம். அந்தப் பகுதி வயல்கள் விரைவில் உவர்த்தன்மையடைந்து நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படலாம்" என்று அவர்கள் தெரிவித்தனர். (வ- 9)

ரயில்கடவைக்காப்பாளர்கள் நேற்றுப் போராட்டம்

# பணிக்குச் செல்லுமாறு பொலிஸார் அச்சுறுத்தல்

## ஒன்றியத் தலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 11
வடக்கு, கிழக்கு தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் நிரந்தர நியமனம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், ஊழியர்களின் வீடுகளுக்குச் சென்று பொலிஸார் அச்சுறுத்துகின்றனர்.

இவ்வாறு தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் ஒன்றியத் தலைவர் எஸ். ஜே .றோகான் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும், தொழிலாளர் சட்ட திட்டத்துக்கமைய அடிப்படைச் சம்பளம் வழங்க வேண்டும், ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இன்று (நேற்று) காலை 6 மணியிலிருந்து பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்தோம்.

இன்று காலை (நேற்று) வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் வீடுகளுக்குச் சென்ற பொலிஸார், அவர்களை அச்சறுத்தியதுடன் பணிக்கு வருமாறும் நிர்ப்பந்திக்கின்றனர். நாங்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவது தொடர்பில் கடந்த மூன்று நாள்களுக்கு முன்னரே, வவுனியா மூத்த பொலிஸ் அத்தியட்சகர் காரியலாயத்துக்கு அறிவித்துள்ளோம்.

நீண்ட காலமாக நாம் எமது நிரந்தர நியமனத்துக்காகப் போராடி வருகிறோம். பல போராட்டங்களை மேற்கொண்டும், பல வாக்குறுதிகள் எமக்கு வழங்கப்பட்டும் அது நிறைவேற்றப்பட வில்லை. அதன் காரணமாகவே பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளோம்.

எமது போராட்டத்தை இலங்கை தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் ஒன்றியத்துக்கும் தெரிவித்துள்ளோம். பொலிஸாரின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் பணியாற்றி வருகின்றோம். பல ஊழியர்களின் வீடுகளுக்குச் சென்ற பொலிஸார், அவர்களைப் பணிக்கு வருமாறு அழைப்பதுடன், அச்சுறுத்தி வருவதாகச் சக ஊழியர்கள் தெரிவித்தனர். எம்மைப் பொலிஸார் அச்சுறுத்துவது ஒன்றும் புதிதல்ல. நாம் இப்படியான கட்டத்தில் தான் பணியாற்றி வருகின்றோம் என்பதை அதிகாரிகள் புரிந்து கொள்ள வேண்டும்- என்றார். (ஐ-4)

## மரணஅறிவித்தல்

### சுப்பிரமணியம் பரஞ்சோதி



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பரஞ்சோதி 09.03.2017 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இளையாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவஞானம் நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கண்மணி அவர்களின் அன்புக் கணவரும் அருந்தவராசா (கனடா), கிருசாந்தி(கனடா), பிரபாகரன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சரஸ்வதியின் சகோதரனும் காலஞ்சென்ற பெரியாம்பியின் அன்பு மைத்துனரும் லைதா(கனடா), குணராசா (கனடா), சுஜித்தா (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனாரும் கனகம்மா(கனடா), தனபாலசிங்கம் (கனடா), அம்பிகாதேவி (கனடா), காலஞ்சென்ற நல்லநாதன் (இலங்கை) மற்றும் தில்லைநாதன்(இலங்கை), சகுந்தலாதேவி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மோனிக்கா (கனடா), அபிராம் (கனடா), கவிஸ் (கனடா), சுஜான் (கனடா), கிறிஸ்சித் (கனடா), அக்சயன், ஆகீஷன், றிசோன், அக்னஜா (இலங்கை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்வை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வெள்ளை வீதி,
உடுப்பிட்டி.

தகவல்: குடும்பத்தினர்.
(ப.பிரபாகரன்)

077 423 8285

## மாணவன் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11
பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமுக நிலையத்தால் புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்புச் சித்தியடைந்த மாணவனைக் கௌரவிக்கும் நிகழ்வு முருகமுர்த்தி திருக்கோவில் நாவலர் மணிமண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.பகல் 10 மணிக்கு நடைபெறும் என்று நிலையச் செயற்குழுவினர் அறிவித்தனர்.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வுக்கு தலைமையாக நிலையத்தலைவர் சொ.சிவயோகலிங்கம் கலந்து கொள்வார். நிகழ்வில் 2016ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்புச் சித்தியடைந்த அந்தப்பகுதியைச் சேர்ந்த உ.பவிசன் என்ற மாணவன் கௌரவிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ரி1)

## ஒக்ரோபர் புரட்சி இரண்டாம் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 11
யாழ்ப்பாணம் புதிய பண்பாட்டுத்தளத்தின் ஏற்பாட்டில் ஒக்ரோபர் புரட்சி நூற்றாண்டு 2ஆம் நிகழ்வு ஆரியகுளம் உயர்கல்வி படிப்பகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறும் என்று நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.

இந்த நிகழ்வில் "மா.பா.சி.கேட்டவை" தினக்குரல் பதிவுகள் நூலின் விமர்சனத்தை மகாஜனாக்கல்லூரி ஆசிரியர் சி.ரமேசும், "தமிழர் சமுகத்தில் ஏற்படுத்திய தாக்கம்" எனும் தொனிப்பொருளில் நூற்றாண்டு ஆய்வுரையை ரூபவாகினி தொலைக்காட்சியின் முன்னாள் பணிப்பாளர் சி.வன்னியகுலமும் வழங்கவார்கள் என்று அவர்கள் தெரிவித்தனர். (வ-10)

## சங்கீத சபையின் பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச் 11
வட இலங்கை சங்கீத சபையின் 21ஆவது "கலாவித்தகர்" பட்டமளிப்பு விழா மருதனார்மடத்திலுள்ள வட இலங்கைச் சங்கீத சபை தற்பரானந்தன் அரங்கில் இன்று சனிக்கிழமை பி.ப. 1 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வடஇலங்கை சங்கீத சபைத் தலைவரும் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளருமான ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மகளிர், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

# ஆவணக்காப்பகத்தின் 43ஆவது தொடர் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 11
சமகாலக்கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள நிகழ்ச்சித்தொடரின் 43ஆவது நிகழ்வு நல்லூர் கோவில் சாலையில் உள்ள ஆவணக்காப்பகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் என்று அதன் முகாமையாளர் அறிவித்தார்.

இந்த நிகழ்ச்சித் தொடரின் 42ஆவது நிகழ்வில் இலங்கையின் சமகால சிற்பப்போக்கை மாற்றியமைத்தவர்களில் ஒருவரான சரத்குமாரசிறி 'இப்போதைக்கு கொண்டாடுதல் இல்லை' எனும் தொனிப்பொருளில் உரை நிகழ்த்துவார். இந்த உரையில் சமுக பொருளாதார பண்பாட்டுப் பின்புலங்கள் மற்றும் அவரது வெளிப்பாடுகள் பற்றிய கலந்துரையாடலும் இடம்பெறும் என்று இலங்கை ஆவணக்காப்பக முகாமையாளர் தெரிவித்தார். (வ-ரி1)

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு

தென்மராட்சி, மார்ச் 11
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற பிரதேச தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் சிறுவர் கணக்கு வைத்துள்ள மாணவர்கள் வங்கியால் விரைவில் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற பிரதேச தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் சிறுவர் கணக்கு வைத்துள்ள மாணவர்கள் தமது விவரங்களை உடனடியாகச் சாவகச்சேரி கிளையில் கையளிக்குமாறு அதன் முகாமையாளர் அ.கங்காதரன் கேட்டுள்ளார். (வ-9)

## 33ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
26 . 09 . 1924



மறைவு
07 . 02 . 2017

### அமரர் திருமதி கிளாடிஸ் ராசமலர் யோசப்

"நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தை முடித்து விட்டேன்
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்
இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது
நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே"
2 தீமொத் 7:8

அன்னாரின் நினைவாகவும் அவர்தம் வாழ்வுக்காகவும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஆராதனையும் மதியபோசனமும் இன்று (11.03.2017) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கேணியடி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளது போராட்டத்துக்கு இதுவரை உரிய தீர்வில்லை

## வடக்கில் மூன்று மாவட்டங்களிலும் நேற்றும் தொடர்ந்தது

கிளிநொச்சி, மார்ச் 11
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளது போராட்டம் உரிய தீர்வு இன்றி, தீர்வுக்கான முயற்சியும் இன்றி 3 மாவட்டங்களிலும் நேற்றும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

**கிளிநொச்சி**
கிளிநொச்சியில் வலிந்து காணமல் ஆக்கப்பட்ட குடும்ப உறவினர்களின் தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் கந்தசுவாமி ஆலய முன்றிலில் 19 ஆவது நாளாக நேற்று இடம்பெற்றது.
கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில், கிளிநொச்சி மாவட்டத்தில் போர் இடம்பெற்ற காலத்தில் வலிந்து காணாமல் போனவர்கள், கடத்தப்பட்டவர்கள். அரசியல் கைதிகள் மற்றும் இராணுவத்திடம் ஒப்படைக்கப் பட்டவர்களின் விடுதலை மற்றும் அவர்கள் பற்றிய தெளிவான தகவல்களை வெளிப்படுத்தக்கோரியும் அவர்களது உறவுகள் இரவுபகலாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போராட்டத்துக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர். தொடர்ச்சியான காலநிலை மாற்றம் காரணமாக மாவட்டத்தில் அதிக வெப்பமும் இடையிடையே மழையும் காணப்படுகின்றன. இதனைப் பொருட்படுத்தாமல் தகரக் கொட்டகைக்குள் சிறுவர் முதல் பெரியவர் வரை தமது உறவுகளைக் கண்டுபிடிப்பதற்காக தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

**வவுனியா**
வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் 15ஆவது நாளாக நேற்று உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
அவர்கள் நேற்று 15ஆவது நாளாகத் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். கையளிக்கப் பட்ட தமது உறவினர்களை விடுவிக்கக் கோரியும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும் அவசரகாலச்சட்டத்தை நீக்குமாறு கோரியும் இவர்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.




**முல்லைத்தீவு**
முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் போனவர்களின் உறவுகள் முன்னெடுத்துவரும் தொடர் அறவழிப்போராட்டம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக மூன்றாவது நாளாகவும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.
"நாட்டில் நடைபெற்ற இறுதிப் போரிலும் அதற்கு முன்னரும் தங்கள் உறவுகளை பறிகொடுத்துவிட்டு அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை கூட அறிந்து கொள்ளாத நிலையில், பல வருடங்களாக அலைந்து திரிந்தும் எந்த முடிவுகளும் எமக்கு கிடைக்கவில்லை. எங்கள் உறவுகளை எமக்கு கண்டுபிடித்துத் தருவதற்கு இந்தக் கூட்டு அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்து இங்கு வந்து இன்று (நேற்று) மூன்றாவது நாளாகவும் தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம்.
எங்களுக்கு நல்ல முடிவு கிடைக்கும் வரைக்கும் நாங்கள் இங்கிருந்து செல்லமாட்டோம்" என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். (ஐ-4-6-7)

# கச்சதீவு ஆலய சூழலில் புகை விசிறும் பணிகள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11
கச்சதீவு அந்தோனியார் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களை நுளம்புக் கடியில் இருந்து பாதுகாக்கும் நோக்கில், ஆலயச் சூழலில் புகை விசிறும்பணிகளை சுகாதாரத் திணைக் களத்தின் 15 பணியாளர்கள் நேற்று முன்னெடுத்துள்ளனர் என்று யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி க.நந்தகுமாரன் தெரிவித்தார்.
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகவுள்ளதால், மக்கள் நிரந்தரமாக வசிக்காத தீவு என்ற வகையில் நுளம்பின் பெருக்கம் அங்கு அதிகமாக இருக்கக் கூடும். உற்சவ காலத்தில் வருடாந்தம் இந்தத் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வது வழமையான பணியாக உள்ள போதிலும், தற்போது அதிகரித்துக் காணப்படும் டெங்கின் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு இந்த வருடம் பல விசேட நடவடிக்கைகளைக் கையாள்கின்றோம். அதற்காக கடந்த மூன்று தினங்களாக 15 பேர் கொண்ட அணி இதற்கான பணியில் ஈடுபட்டுள்ளது.
அதேநேரம் இன்றைய உற்சவத்துக்காக இந்திய யாத்திரிகர்கள் வருவது இதுவரை உறுதிப் படுத்தப்படாத போதிலும், வந்தால் மேற்கோள்ள வேண்டிய சுகாதார நடவடிக்கைகளுக்கான ஆயத்தப் படிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. எனவே கச்சதீவுக்கான அனைத்துச் சுகாதார நடவடிக்கைகளையும் திணைக்கள ரீதியில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. என்றார். (ஐ-101)



# கோப்பாய் விபத்தில் ஓட்டோ சாரதி காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 11
நல்லூர் ராஜ பாதைச் சந்தியில் நேற்றுக்காலை இடம்பெற்ற முச்சக்கர வண்டி மற்றும் படி வாகன விபத்தில் முச்சக்கர வண்டிச் சாரதி படுகாயமடைந்தார். அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். படி வாகனச் சாரதி கைது செய்யப்பட்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் காலை 8 மணியளவில் இடம்பெற்றது.
கோப்பாய் சாலைப் பகுதியால் வேகமாக வந்த படி வாகனம் ராஜ பாதைச் சந்தியால் கோப்பாய் சந்தி நோக்கித் திரும்ப முற்பட்ட முச்சக்கர வண்டியை மோதித் தள்ளியது. விபத்தில் அளவெட்டி மேற்கைச் சேர்ந்த முச்சக்கர வண்டிச் சாரதி தியாகராசா தர்மலிங்கம்(வயது57) கை மற்றும் கால் நாடிப்பகுதிகளில் படுகாயமடைந்து மயக்கமுற்ற நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (வரி1)

# சிறுதானிய செய்கையில் வரணி விவசாயிகள்

வரணி, மார்ச் 11
வரணி இடைக்குறிச்சி விவசாய அமைப்பின் கீழ் உள்ள தீனிக்கிராய்மாவில் வயல் வெளிகளில் இந்த முறை சிறு தானியப் பயிர்களைப் பயிரிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.
இடைக்குறிச்சி விவசாய அமைப்பின் தலைவர் சி.துரைராசா தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. கௌபி, பயறு, உழுந்து, எள்ளு போன்ற தானியப் பயிர்களைப் பயிரிடுவது என விவசாயிகளால் தீர்மானம் எடுக்கப்பட்டது.
இது தொடர்பான விடய ங்களைக் கவனிக்க குறித்த இரண்டு வயல் வெளிகளுக்கும் இரண்டு குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன. (வ-122)

# 13, 000 குடும்பங்களுக்கு வாழ்வாதாரத் திட்டங்கள்

## யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டில் கிடைக்கும்

யாழ்ப்பாணம் மார்ச் 11
2017ஆம் ஆண்டு 13 ஆயிரத்து 431 குடும்பங்கள் பயன் பெறும் வகையில், 549 மில்லியன் ரூபா செலவில் வாழ்வாதாரத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்டச் செயலகத்தின் புள்ளி விவரங்கள் தெரிவித்தன.
5 ஆயிரத்து 427 குடும்பங்களுக்கான விவசாய அபிவிருத்தித் திட்டம், 3 ஆயிரத்து 224 குடும்பங்களுக்கான கால்நடை வளர்ப்புத் திட்டம், ஆயிரத்து 405 குடும்பங்களுக்கான மீன்பிடி அபிவிருத்தி திட்டம், 532 குடும்பங்களுக்கான கைத்தொழில் அபிவிருத்தி திட்டம், 703 குடும்பங்களுக்கான சமூக அபிவிருத்தித் திட்டம், ஆயிரத்து 31 குடும்பங்களுக்கான வீடமைப்புத் திட்டம் போன்றவையே முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# இசைப் பயிற்சி நல்லூரில் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 11
நல்லூர் அறநெறிப் பாடசாலையின் சிறப்பு இசைப் பயிற்சி பட்டறை நாளை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மண்டபத்தில் இயங்கும் நல்லூர் அறநெறிப் பாடசாலையில் இசை மாணவர்களுக்கான சிறப்பு இசைப் பயிற்சிப் பட்டறை நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.
இந்த இசைப் பயிற்ச்சிப் பட்டறையை வெளி நாடுகள் பலவற்றில் இசை நிகழ்ச்சிகளையும், இசைப் பயிற்சிகளையும், நடத்திவரும் வயலின் வித்துவான் கலைமாமணி வி.ஆர். கிருஸ்ணன் நடத்துவார். இசை மாணவர்கள் அனைவரும் இந்த நிகழ்வில் கலந்து பயன்பெறுமாறு கேட்டு கொள்ளப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)



# மருத்துவர் அம்பிகைபாகனுக்கு சாவகச்சேரியில் அஞ்சலி நிகழ்வு

சாவகச்சேரி, மார்ச் 11
சாவகச்சேரி வைத்தியசாலைக் கட்டடங்கள் போர் வன்செயல்களின் போது அழிவடைந்து கற்குவியல்களாகக் காணப்பட்ட வேளையில் வைத்தியசாலை நிர்வாகத்தைப் பொறுப்பேற்று இன்று தலைநிமிர்ந்த கட்டடங்களுடன் திகழ காரணகர்த்தாவாக இருந்த அமரர் சங்கரப்பிள்ளை அம்பிகைபாகனுக்கு சாவகச்சேரி நகரப் பகுதி மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அஞ்சலி நிகழ்வு சாவகச்சேரி நகர சபை பொன் விழா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
ஓய்வுநிலை மருத்துவர் ச.சி.அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு ஈகைச் சுடரேற்றிய துடன் அமரர் அம்பிகைபாகனின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்தார். சாவகச்சேரி வைத்தியசாலை மருத்துவ அதிகாரி த.குகதாசன் நினைவுப் பேருரை நிகழ்த்தி னார். நன்றியுரையினை சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் கா.சண்முகதாசன் நிகழ்த்தினார். (வ - 9)

# அழகுக் கலைக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 11
வடக்கு மாகாணக் கிராம அபிவிருத்தி திணைக் களத்தின் அனுசரனையுடன் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைத்தல், அழகுக் கலை மனைப் பொருளியல் கண்காட்சி பருத்தியடைப்பு முத்துமலர் மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் திருமதி ஏ. அன்டன் யோகநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் மற்றும் வடக்கு மாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து வர்த்தக வாணிப கிராமிய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சி.சத்திய சீலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (வ)





# காணியை திடீரென விடுவித்து வெளியேறியது இராணுவம்

வவுனியா, மார்ச் 11
வவுனியா, பேயாடிக்குளம் இராணுவ முகாமின் முன்னணி காப்பரணில் இருந்து இராணுவத்தினர் வெளியேறினர்.
அந்தப் பகுதியில் இராணுவத்தின் 56ஆவது படைப்பிரிவுநிலைகொண்டிருந்தது. படைமுகாம் அமைக்கப்பட்டிருந்த பகுதி 10 ஏக்கர் பரப்பளவு கொண்டது. பேயாடிக்குளம் பாடசாலை, தனியார் காணிகள், தென்னந்தோப்புகள், வயல்கள் என்பன அவற்றுள் கையகப்படுத்தப்பட்டிருந்தன. சுமார் 17 ஆண்டுகளாக இராணுவம் நிலைகொண்டிருந்தது.
நாகபூசணி ஆலயத்துக்கு அருகே இருந்த தென்னம் தோப்புமுற்றாகஅழிக்கப்பட்டுள்ள நிலையில் அந்தப் பகுதியில் புதிதாக விகாரை அமைக்கப்பட்டுள்ளது. நாகபூசணி ஆலயத்துக்கு தென்பகுதியிலுள்ள காணியை விட்டு இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் இரவு வெளியேறியுள்ளனர்.
பேயாடிக்குளம் மக்கள் இராணுவம் வெளியேற வேண்டும் என்று வற்புறுத்தி இந்த மாத இறுதியில் போராட்டம் நடத்தவிருந்த நிலையிலேயே இராணுவத்தினர் திடீரென காணியை விட்டு வெளியேறியுள்ளனர்என்று தெரிவிக்கப்படுகின்றது.
பேயாடிக்குளம் பாடசாலை, தனியார் வயல்கள், காணிகள்இன்னமும்இராணுவத்தின் பிடிக்குள்ளேயே உள்ளன. (ற-402)

# மோசடியை ஊக்குவிக்கும் நியமனங்களை நிறுத்துக

## வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 11
தாபன விதிக் கோவைக்கு அமையாத அல்லது மாகாண சட்ட அதிகாரத்துக்கு முரணான, ஊழல் மோசடிக்கு ஆதரவாகவும், அதனை ஊக்குவிக்கும் வகையிலும் வழங்கப்படும் நியமனங்களை உடனடியாக நிறுத்த வேண்டும்.
இவ்வாறு வடக்கு மாகாண சபையில்நேற்றுமுன்தினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
வடக்குமாகாணசபைஉறுப்பினர் து.ரவிகரன் இந்தப் பிரேரணையைக்கொண்டு வந்தார்.
"முல்லைத்தீவுமாவட்ட சுகாதாரசேவைகள்திணைக்கள முன்னாள் பணிப்பாளர் முன்னர் தனது கடமைக் காலத்தில் நிதி மோசடிகளில் ஈடுபட்டார் என்று குற்றஞ் சாட்டப்பட்டது. அவர் மீது திணைக்களரீதியானஆரம்பகட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புசுகாதாரதிணைக்களத்துக்கு அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
தற்போது வரை அவர் மீதுள்ள விசாரணைகள் முடிவடையவில்லை. அதே பணிப்பாளர் மீண்டும் முல்லைத்தீவுமாவட்டபிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்துக்குசுகாதாரத்திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

> ஊழல் விசாரணை முடிவுகள் வெளியாகும் வரை இந்த நியமனத்தை நிறுத்தி வைக்க வேண்டும்.

ஊழல் மோசடி சம்பந்தமாக விசாரணைக்குட்பட்டிருக்கும்ஓர் உத்தியோகத்தருக்கு எவ்வாறு பதவி உயர்வு வழங்கமுடியும்?
அவர் மோசடி மேற்கொண்டார் என்று கூறப்படும் அதே இடத்துக்கு அதே பதவிக்கு எப்படிஅவரைநியமிக்கமுடியும்? இந்த நியமனம் வழங்கப்படும்போதுஏன்மாகாண சபையின் ஒப்புதல்பெறப்படவில்லை? ஊழல் விசாரணை முடிவுகள் வெளியாகும் வரை இந்த நியமனத்தை நிறுத்தி வைக்க வேண்டும். இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் ஊடாகஅரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் இந்தச் சபை கோரவேண்டும்" என்றுபிரேரணைமுன்மொழியப்பட்டு ஏகமனதாகத் தீர்மானமாக்கப்பட்டது.(ற-4-8)

# வீரபுரத்தில் காணிகளை கையகப்படுத்துவதற்கு ஊர்காவற்படை முயற்சி

## அவற்றை மீட்டுத் தருமாறு கிராம மக்கள் கோரிக்கை

வவுனியா, மார்ச் 11
"வவுனியா, செட்டிகுளம்பிரதேசசெயலாளர் பிரிவின் கீழுள்ள வீரபுரம் கிராமத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான400ஏக்கர்நிலத்தைஊர்காவற்படைஅபகரித்துசிங்களவர்களுக்குத் தாரைவார்க்க முற்சிக்கின்றது."
இவ்வாறுபாதிக்கப்பட்டகிராமமக்கள் குற்றஞ்சாட்டினர்.
"வீரபுரம், தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த கிராமம். போரால் நாங்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்தோம். இங்கேவசித்த பலர் இந்தியா சென்று இப்போதும் அகதி முகாம்களில் உள்ளனர். அவர்கள் இங்குதிரும்பினால் அவர்களுக்குஇந்தக்கிராமத்தைவிட வேறு இடங்கள் கிடையாது. வீரபுரம் அடர்ந்த காடாக இருக்கும்போதே எமக்கு வழங்கப்பட்டது. வனப் பகுதியைத் துப்புரவாக்கி குடியிருப்புக்கு உகந்த இடமாக நாமே மாற்றினோம்.
எமக்கு எந்த வீட்டுத் திட்டங்களும் வழங்கப்படவில்லை.கொட்டகைகள் அமைத்தே வாழ்ந்தோம். 1990ஆம் ஆண்டு போர் ஏற்பட்டபோது கிராமத்தில் இருந்து வெளியேறினோம். இப்போது வரை பல்வேறு இடர்களுக்கு மத்தியிலேயே எமது வாழ்க்கையை நகர்த்துகின்றோம்.
எங்கள் 400 ஏக்கர் நிலப்பரப்பில் 50 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி ஊர்காவற் படையினர் முகாம் அமைத்துள்ளனர். போர் முடிந்து 8 ஆண்டுகள் முடிந்தும் ஊர்காவற் படை அந்த இடத்தை விட்டு அகலவில்லை. அது மட்டுமல்லாதுஎமது350ஏக்கர்நிலத்தையும் துப்புரவாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.
அயல் கிராமங்களில் வாழும் சிங்கமக்களுக்கு நிலத்தைப் பகிர்ந்தளிப்பதற்குஊர்காவற்படையினர்முயற்சிக்கின்றனர். எமதுநிலம்அபகரிக்கப்படுவது தடுத்து நிறுத்தப்படவேண்டும். எங்கள் நிலங்கள் எமக்கே வழங்கப்பட வேண்டும். இது தொடர்பாக தமிழரசுக்கட்சியின்வவுனியாமாவட்டத் தலைவரும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சருமான ப.சத்தியலிங்கத்தின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளோம்" என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.
"இந்த விடயம் எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. உடனடியாக மாவட்டச்செயலரின் கவனத்துக்குக் கொண்டு சென்றேன். இந்த விடயமாக அந்தப் பகுதி தமிழ், சிங்கள மக்களிடம் இனக்குரோதம் வளர்வதை நாம் விரும்பவில்லை. அந்தப் பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்த மக்களிடம் நிலங்கள் கையளிக்கப்பட வேண்டும். அங்கு தற்போது ஊர்காவற்படையினரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தேன். இது தொடர்பில் உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்டச்செயலாளர் உறுதியளித்தார்" என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.
"இது தொடர்பாக எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. வவுனியா தெற்கு மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலாளர்களுக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. வீரபுரம்பகுதியில்எந்தவிதமானபணிகளும்இடம் பெறாத வகையில் தடை செய்ய வேண்டும்என்றும், அந்தப்பகுதியை அனைவரும்நேரில்சென்றுபார்வையிட்டு உண்மையில் அங்கு வசித்தவர்கள் தொடர்பில் பரிசீலனை மேற்கொண்ட பின்பே அடுத்த கட்டப்பணிகளைமுன்னெடுக்கமுடியும்என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது" என்று வவுனியாமாவட்டச்செயலாளர்தெரிவித்தார். (ற-101)

# புற்றுநோய் விழிப்புணர்வு 10

சுவாசப்பை புற்றுநோய் பற்றி அறிந்து கொள்வோம்!
அறிகுறிகளாவன;
- ✦ நீண்ட நாள்களாக இருக்கும் இருமல்.
- ✦ சளியுடன் குருதி வெளியேறுதல்.
- ✦ சுவாசிப்பதில் சிரமம்.
- ✦ காரணம்அறியப்படாதநீண்டநாள் காய்ச்சல்.
- ✦ காரணமற்றநிறைக்குறைவு.
- ✦ அக்குள் மற்றும் கழுத்துப் பகுதி, நிணணீர் முடிச்சுக்கள் வீங்கிக் காணப்படல்.

தகவல் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# கரைவலை தொழிலில் மீன் பிடிபாடு குறைவு

முல்லைத்தீவு, மார்ச் 11
கரைவலைத் தொழிலுக்கான பருவகாலம் ஆரம்பித்துள்ள போதும் முல்லைத்தீவுக் கடலில் மீன்கள் படுவது இம்முறை குறைந்துள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின்சமாசத்தலைவர்மரியராசா தெரிவித்தார்.
"முல்லைத்தீவுமாவட்டத்தில்ஜனவரிஅல்லது பெப்ரவரி மாதம் கரைவலைத் தொழில் ஆரம்பிக்கும். ஒக்ரோபர் மாதம் வரை தொழில் செய்யப்படும். கடந்த காலங்களில் கரைவலைத் தொழில் மூலம் மீனவர்கள் அதிக வருமானம் பெற்றனர்.
இந்தமுறைநிலைமைதலைகீழாகமாறியுள்ளது. மீன்களின் பிடிபாடு மிகவும் குறைந்துள்ளது.
கடந்த ஆண்டுகளில் இயந்திரத்தின் உதவியுடன் சட்டத்துக்கு முரணான வகையில்சிலர்கரைவலைத்தொழிலில்ஈடுபட்டிருந்தனர். இப்போது அதைஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம்" என்று அவர் தெரிவித்தார். (ற-7)

# ஊற்றுப்புலத்திலுள்ள பாலம் உடைந்து விழும் நிலையில்

## சீரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை



கிளிநொச்சி, மார்ச் 11
கிளிநொச்சி, ஊற்றுப்புலத்தில்இருபண்ணைக் கிராமங்களைஇணைக்கும் பாலம் ஆபத்தை விளைவிக்கக்கூடிய நிலையில் உள்ளது. பாலத்தைச் சீரமைக்க விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்என்று கிராமமக்கள்கோரிக்கை விடுத்தனர்.
"கிளிநொச்சிகரைச்சிபிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டது ஊற்றுப்புலம். அங்கு நாவலர் பண்ணை, வள்ளுவர் பண்ணைஎனஇருகிராமங்கள் உள்ளன. அவற்றை இணைக்கும் பாலம் சேதமடைந்துள்ளது. அந்தக் கிராமங்களுக்கு துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.
பாலச் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதும், தற்போதுவெள்ளநீர்காணப்படுவதால்அவைஇடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் அமைக்கப்பட்டிருந்த பாலம் தற்போது கீழ் நோக்கி நகர்ந்துள்ளது. நீர் பாலத்துக்குள் புகுந்துள்ளது. பாலத்தின்இரு கரைகளிலும் தடுப்புச் சுவரும்அமைக்கப்படவில்லை. பாலத்தினூடாகப் பயணம் செய்வது ஆபத்து மிக்கதாக மாறியுள்ளது.
வள்ளுவர் பண்ணையில் இருந்து நாவலர் பண்ணைக்கு வருவதற்கு மிக நீண்ட தூரம் துவிச்சக்கரவண்டியில் அல்லது நடந்து வர வேண்டியுள்ளது. வள்ளுவர் பண்ணையில் உள்ளவர்கள் வாகனத்தை வைத்திருந்தாலும் கூட தமது கிராமத்துக்குக்கொண்டுசெல்ல முடியாது.
இதனால் அவசர தேவைகளின்போது பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. பாலத்தை விரைவாகச் சீரமைப்பதற்குச் சம்பந்தப்பட்டஅதிகாரிகள்உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-6)

# யாழ். மாவட்டத்தில் கட்டுப்பாட்டு விலையில் அரிசி விற்பனையில்லை

## பாவனையாளர்கள் விசனம்

அச்சுவேலி,மார்ச் 11
யாழ்ப்பாண மாவட்டத்தில் அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை நடைமுறை இதுவரை இல்லை. இந்த நடைமுறையைப் பொது நிறுவனங்களான பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கூட நடைமுறைப்படுத்த முன்வரவில்லை என்று பாவணையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டதோடு பொதி செய்யப்படும் அரிசிப் பொதிகளில் விற்பனை விலை பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த நடைமுறையைப் பின்பற்றாதவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும், தண்டம் அறவிடப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு செய்யப்பட்டு இரண்டு வாரங்கள் கடந்த போதிலும், நடைமுறைக்கு வரவில்லை.

இந்த விடயத்தில் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளோ, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகளோ உரிய நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை. அரிசி விற்பனை விடயத்தில் தனியார் வர்த்தகர் போன்று பொது நிறுவனங்களான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நடக்க முற்படுவதும், ஒரு கிலோ அரிசியை தர நிலைக்கு ஏற்ப ரூபா 90 தொடக்கம் 100 வரை விற்பனை செய்வதும் எம்மை ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

சில தனியார் விற்பனை நிலையங்களில் தரம் குறைவானதும், பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதுமான அரிசியே கிலோ ஒன்று 78 ரூபா எனக் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது-என்றனர்.

"கட்டுப்பாட்டு விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படுவதில்லை என்று எமது அலுவலகத்துக்கும் பல முறைப்பாடுகள் வந்தவண்ணமேயுள்ளன.

இது தொடர்பாக முதற்கட்டமாக, அரிசிப் பொதிகளில் கட்டாயம் விலை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு விலை பொறிக்கப்படாத அரிசிப் பொதிகளை விற்பனை செய்யும் கடைகள், மில் உரிமையாளர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மில் உரிமையாளர்களிடம் இருந்து அரிசியை கொள்வனவு செய்யும் மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள் அரிசிப் பொதிகளில் விலை பொறிக்கப்பட்டுள்ளதா என்பதை அவதானித்துக் கொள்வனவு செய்யவேண்டும். அவ்வாறு இல்லாமல் இருக்கும் பட்சத்தில் இவர்களுக்கும் எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரைக்கும் அரிசிப்பொதிகளில் விலை பொறிக்கப்படாத கடைகளுக்கு எதிராக 7 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கை பரவலடைந்து விரைவில் இதனைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்று யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை இணைப்பாளர் த.வசந்தசேகரன் தெரிவித்தார்.

(ஐ-10- 11)

# மருந்தகங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் இடைநிறுத்தம்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 11
மருந்தகங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.



அகில இலங்கை மருந்தக உரிமையாளர் சங்கத்துடன் இடம்பெற்ற சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலைகள் விதிக்கப்பட்ட பின்னர், நாட்டில் மருந்து விற்பனைகள் அதிகரித்துள்ளன. கட்டுப்பாட்டு விலை விதிப்பதற்கு முன்னர், அதிக விலைகளுக்கு மருந்து வகைகள் விற்பனை செய்யப்பட்டதால், சாதாரண மக்கள் தனியார் மருந்தகங்களில் மருந்து கொள்வனவு செய்வது குறைவாகவே இருந்தது. ஆனால் மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலைகள் விதிக்கப்பட்டு அவற்றின் விலைகள் குறைக்கப்பட்ட பின்னர் மருந்து விற்பனை கள் அதிகரித்துள்ளன.

நாடு முழுவதும் அமைந்துள்ள மருந்தகங்கள் தொடர்பாக கணக்கெடுப்பொன்றை நடத்தும் நோக்கிலேயே பதிவு நடவடிக்கைகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கணக்கெடுப்பு மேற்கொண்டதன் பின்னர் பதிவு பற்றிய தீர்மானம் எடுக்கப்படும்.என்றார். (ஐ-10)

# 5 நாள்கள் பயணமாக சவுதி சென்றார் ஹக்கீம்

## முக்கிய ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படும்

கொழும்பு, மார்ச் 11
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், ஐந்து நாள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று முன்தினம் சவுதி அரேபியாவுக்குச் சென்றுள்ளார் எனத் தெரியவருகிறது.

இந்தப் பயணத்தின் போது, சவுதி அரேபிய சுற்றுச்சூழல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் அப்துல்ரஹ்மான் அல் பெட்லியை நாளை ஞாயிற்றுக்கிழமை சந்தித்து நீர் வழங்கல் தொடர்பில் இருதரப்பு ஒப்பந்தமொன்றில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கைச்சாத்திடவுள்ளார்.

அத்துடன் சவுதி அரேபியாவிலுள்ள பெரிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தைப் பார்வையிடும் அமைச்சர், அங்குள்ள தொழில்நுட்பத்தை இலங்கையில் பயன்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடவுள்ளார். கொழும்பு அரசுக்கு நிதியுதவி வழங்கும் சவுதி அபிவிருத்தி நிதியத்துடன் முக்கிய பேச்சுக்களிலும் கலந்துகொள்வார். இதன்போது, இலங்கைக்கு நிதியுதவியை பெற்றுக்கொள்வது தொடர்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுக்கவுள்ளார். இந்தப் பயணத்தில் இலங்கை வாழ் மக்களையும் அவர் சந்திக்கவுள்ளார் எனவும் தெரிவிக்கபட்டுள்ளது.

இந்தப் பயணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ். தௌபீக், எம்.எச்.எம். சல்மான், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் மேலதிக செயலாளர் உள்ளிட்ட அமைச்சின் உயரதிகாரிகளும் உடன் சென்றுள்ளனர் எனத் தெரியவருகிறது. (ஐ-10)

## மரண அறிவித்தல்



### திருமதி பரமேஸ்வரி கந்தையா

(உருத்திரபுரம் - 10ஆம் வாய்க்கால்)

உருத்திரபுரம், 10 ஆம் வாய்க்காலைப் பிறப்பிடமாகவும், நெளுக்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி பரமேஸ்வரிகந்தையா 08.03.2017 புதன்கிழமைகாலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சின்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், வேலுப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், முரளிதரன் (கனடா), உதயமலர் (வவுனியா), சிறிதரன் (கனடா), ஜெயதரன் (கனடா), காலஞ்சென்ற யசோதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரமணி, சுரேஸ், பிரதீபா, சுகி, ரஜனி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நடராசா, யோகராசா, இராஜேஸ்வரி மற்றும் விமலேஸ்வரி, தர்மகுலசிங்கம் (ராசா), தியாகராசா, நகுலேஸ்வரி, யோதீஸ்வரி (ஆசிரியை - உருத்திரபுரம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற வர்களான சின்னத்தங்கம், பரிமளம் மற்றும் தெய்வானை, மங்கையற்கரசி (கோணாவில்), காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் இராசமணி, லோகநாயகி, காலஞ்சென்ற சிவராசா, ரஞ்சிதமலர், பேரம்பலம், திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனியும், கேசகி, மிதுலன், லதுசன், கோபிகா, கிதுஷா, பிரதீசா, சதிஷா, டர்ஷனா, தர்ஷானி, பவின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நெளுக்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

வே. கந்தையா - (கணவர் - 077 613 6107).

சு. சுரேஸ் (மருமகன் - வேலணை - 077 317 9965)

# காட்டாஞ்சேனையில் ஹரோயின் மீட்பு

காழும்பு கொட்டாஞ்சனைப் பகுதியில் 100 ல்லியன் ரூபா பெறு மதிடைய, ஹெரோயின் ற்றும் 60 ஆயிரம் ரூபா ணம் என்பன நேற்று ட்கப்பட்டது என்று பொலிார் தெரிவித்தனர். இந் ச் சம்பவம் தொடர்பில் 33 ய தான சந்தேக நபர் ஒரு ரும் கைது செய்யப்பட் ர்ளார். கைது செய்யப்பட் ந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு துக்கடை நீதிமன்றில் ன்னிலைப் படுத்தப்படு ார் எனவும் பொலிஸார் தரிவித்தனர். (ஐ-10)

# தெரணியகல சம்பவம்; சந்தேகநபருக்கு மறியல்

தெரணியகல கொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபரை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அவிசாவளை நீதிமன்று நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

தெரணியாகலவில் 8 வயதுச் சிறுமியொருவர் உள்ளிட்ட இருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் அண்மையில் நடைபெற்றது. கொலைச் சம்பவத்தின் பின்னர் தலைமறைவாகியிருந்த 19 வயதான சந்தேக நபர், சிவனொளிபாத காட்டுப் பகுதியில் மறைந்திருந்த நிலையில் நேற்று முன்தினம் காலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரணை நடத்திய போது காணிப் பிரச்சினையொன்றை அடிப்படையாகக் கொண்டே இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றது என்று சந்தேக நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கொலைச் சம்பவம் இடம்பெற்ற வீட்டிலிருந்து பெண்களின் உள்ளாடைகள் அடங்கிய பையொன்று மீட்கப்பட்ட நிலையில், அதனைத் தானே கொண்டு வந்ததாகவும் அவர்களைக் கட்டிப்போடுவதற்காக வீடொன்றின் கொடியிலிருந்து அவற்றை எடுத்து மறைத்து வைத்திருந்த தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த சிறுமியின் தாய் தொடர்ந்தும் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஐ-10)

# லஞ்சம் பெற்றவருக்கு மறியல்

லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொதுச்சுகாதார சேவை உதவியாளர் ஒருவர் எதிர்வரும் 22ஆம் திகததி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு புறநகரில் சட்டத்தரணி ஒருவருக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றைச் சோதனை செய்த பின்னர், அங்கு டெங்குத் தொற்று ஏற்படக்கூடிய சூழல் இருப்பதாகக் கூறி, அதற்கான சட்ட நடவடிக்கையிலிருந்து தவிர்த்துக் கொள்ள 5 ஆயிரம் ரூபாவை குறித்த பொதுச் சுகாதார சேவை உதவியாளர் லஞ்சம் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. (ஐ-4)

# 6 மில்லியன் பெறுமதியான அபிவிருத்தியைத் தடுக்கும் வனஜீவராசித் திணைக்களம்

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 11

மன்னார் மாவட்டத்துக்குக் கிடைத்த 6 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான மிகப்பெரும் அபிவிருத்தி வனஜீவராசிகள் திணைக்களத்தின் நடவடிக்கையால் முடக்கப்படும் நிலைமை காணப்படுவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ. சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆசிய அபிவிருத்தி வங்கி ஊடாக மன்னார் மாவட்டத்தில் 6 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் நன்னீர் மீன்பிடி மற்றும் இறால் வளர்ப்பு உள்ளிட்ட 5 கட்டத் திட்டம் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இந்தத் தொகையில் இந்த ஆண்டுக்காக 700 மில்லியன் ரூபா அனுமதிக்கப்பட்டு பணிகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டது.

இந்தத் திட்டத்தை முன்னெடுக்கும் பட்சத்தில் மாவட்டத்தில் சுமார் 4 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அந்த வேலை வாய்ப்புக்கு மாவட்ட இளைஞர்களையே நியமிக்கவும் இணக்கம் காணப்பட்டது. மாவட்டத்தில் தொழிலாளர்களைப் பெறமுடியாத சந்தர்ப்பத்தில் மட்டும் மாகாணத்திற்கு உட்பட்ட வகையில் பணியாளர்களை நியமிக்கவும் இணக்கம் தெரிவித்தே திட்டம் தயார் செய்யப்பட்டது.

தயார் செய்யப்பட்ட திட்டத்துக்காக பாப்பாமோட்டை , வேட்டையாமுறிப்பு , நாயாற்றுவெளி உள்ளீட்ட இடங்களை உள்ளடக்கிய வகையில் 2 ஆயிரத்து 900 ஏக்கர் நிலப் பரப்பும் மாவட்ட நிர்வாகங்களினால் முன்மொழியப்பட்டு அந்த இடங்களை நிதி வழங்குநர்கள் பார்வையிட்டு ஏற்றுக்கொண்டனர்.

இந்த நிலையில் மாவட்டச் செயலருக்கோ அல்லது பிரதேச செயலாளர்களுக்கோ ,அந்த மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகளுக்கோ தெரியாமல் வனஜீவராசிகள் திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கை இந்தத் திட்டத்துக்கு இன்று முட்டுக்கட்டையாகவுள்ளது.

வனஜீவராசிகள் திணைக்களத்தினர் இந்தப் பகுதியில் 29 ஆயிரம் ஹெக்ரேயர் அதாவது ஏறக்குறைய 70 ஆயிரம் ஏக்கர் நிலத்தைத் தமது திணைக்களத்துக்குச் சொந்தமானது என 2016ஆம் ஆண்டில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளனர். இது எந்தத் திணைக்களத்துக்குமே இதுவரை தெரியாது.

வனஜீவராசிகள் திணைக்களத்தினர் வர்த்தமானி அறிவித்தல் விடுத்திருந்தாலும் அந்தப்பகுதி நிலங்களை எந்தவித தடையும் இன்றி விடுவிக்கவேண்டும் என மாவட்ட செயலாளர் உட்பட அனைவரும் கோரியிருந்தபோதும் இன்று வரை அது விடுவிக்கப்படவில்லை.

இது தொடர்பில் நாம் மீன்பிடி அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு சென்றபோது மீன்பிடி அமைச்சரும் அதிர்ச்சி அடைந்து மன்னார் மாவட்டமே வனஜீவராசிகள் திணைக்களத்துக்குச் சொந்தம் எனக் கூறி அனைத்துத் திட்டங்களையும் அவர்களிடமே வழங்குவதா எனக் கூறியிருந்தார்.

இது தொடர்பில் இன்று ( நேற்று ) மீன்பிடி அமைச்சின் அதிகாரிகள் நாரா, நெக்டப் அதிகாரிகளுடன் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் வந்து உரிய இடங்களைப் பார்வையிட்டுள்ளனர்.

எனவே மாவட்டத்தின் வளர்ச்சி கருதி குறித்த நிலங்களை விடுவிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படவேண்டும் - என்றார்.

(த-101)

## கொல்களம் இயங்காததால் மாட்டிறைச்சிக்கு தட்டுப்பாடு

வவுனியா, மார்ச் 11

வவுனியா தாண்டிக்குளத்தில் அமைந்துள்ள கொல்களத்தில் நேற்றும், நேற்று முன்தினமும் மாடுகள் வெட்டப்படாததால் வவுனியா இறைச்சிக் கடைகளில் மாட்டு இறைச்சிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது.

இரு வாரங்களுக்கு முன்னர் தாண்டிக்குளம் சோயா வீதியில் உள்ள மாடு வெட்டும் கொல்களத்தில் வெட்டப்பட்ட மாடுகள் சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்டன என்றும், மிருக வைத்திய திணைக்களத்திடமும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் அனுமதி பெறப்படவில்லை என்று கூறப்பட்டது. வெட்டப்பட்ட மாடுகள் அடங்கிய பார ஊர்தி சுகாதார திணைக்களத்தால் நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட்டது.

மாடு வெட்டுவதற்கான ஆவணங்கள் உள்ளமையை அந்தப் பார ஊர்தி உரிமையாளர்கள் காட்டியதை அடுத்து பார ஊர்தி கொழும்பு செல்ல அனுமதிக்கப்பட்டது.

அந்த மாடு வெட்டும் கொல்களத்தை வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி கடந்த வாரம் பார்வையிட்டார். சுகாதார திணைக்களம், மிருக வைத்திய திணைக்களம், நகரசபை தரப்பினரை நீதி மன்றுக்கு அழைத்து கலந்துரையாடினார். சுமூகமான முடிவு அந்தத் திணைக்களங்களுக்கு மத்தியில் இன்னும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மிருக வைத்திய திணைக்களத்தில் இருந்து மிருக வைத்தியர் காயத்திரி சத்தியலிங்கம் நேற்று முன்தினம் காலை அந்தக் கொல்களத்தில் வெட்டப்படவேண்டிய மாடுகளை பார்வையிட்டு சான்றுப்படுத்த வந்திருந்தார். நகரசபையின் சுகாதார பரிசோதகர் அங்கு பிரசன்னமாக வில்லை. மாடு வெட்டுவதில் காலதாமதமாகியதை அடுத்து நேற்று முன்தினம் கெல்களத்தின் பணிகள் நிறுத்தப்பட்டது.

அவர்கள் நேற்றும் வராததால் நேற்றும் மாடு வெட்டப்படவில்லை. மாட்டுஇறைச்சிக் கடைகளுக்குச் சென்ற நுகர்வோர் இறைச்சியை பெறமுடியாது திரும்பினர்.

கொல்களம் மூடப்பட்டுள்ளதால் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று குத்தகைக்காரர்கள் கவலை தெரிவித்தனர்.

(ற -4,402)

## நற்செயல் மேன்மைதரும்

எமது ஊனியல் வாழ்வு இந்த உலகத்துடன் முடிவுற்றாலும் மறுமையில் நிலை வாழ்வு உண்டென்பது எமது மறை நம்பிக்கையாகும். அந்த நிலைவாழ்வை நிர்ணயிப்பது நாம் புரியும் நற்செயல்களே. பசியாகவோ, தாகமாகவோ, அன்னியராகவோ, ஆடையின்றியோ, நோயுற்றோ, சிறையிலோ வாடுவோர்க்கு உதவுவது இறைவனைக் கண்டு கொள்ள வழிவகுக்கும் நற்செயல்களாகும். கடவுள் எங்கே என்று தேடும் போது நான் இங்கே ஏழை, எளியவர்களில் வாழ்கிறேன் என குரல் கொடுக்கின்றான் இறைவன்.



மேற்சொன்ன உதவிகளின்றி வாடும் மனித குழுமங்கள் எம்மத்தியில் இல்லையா? அவர்களின் நிலையை எப்போதாவது சிந்திக்கின்றோமா? வாழும் உரிமையைப் பெற்றுக் கொள்ள, குடியிருப்பு இடங்களை சென்றடைய போராடும் மக்களின ஆதங்கத்தைப் புரிந்து செயலாற்ற முன் வருகின்றோமா?

இவ்வாறு பலவித தேவைகளில் உள்ள சின்னஞ் சிறியோருக்கு செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள் என இறைவன் மகிழ்வடைவார். இறைவனைத்தேடி நீண்ட பயணங்கள், யாத்திரைகள் செய்வதை விட அருகில் உள்ள அயலானுக்கு உதவி புரிந்து இறைவனைக்காண விழைவோம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

## வயல் காவலுக்கு சென்றவர் காட்டு யானை தாக்கிச் சாவு

திருகோணமலை சேருநுவர பிரதேசத்தில் வயல்காவலுக்குச் சென்றவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகிஉயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 61வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் மூதூர் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றன.

(த-ய.45)

## பெருமூளை நோய் தொடர்பில் சமூக விழிப்புணர்வு அவசியம்

### குழந்தை வைத்திய நிபுணர் கீதாஞ்சலி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

பெருமூளை நோய் பற்றிய அறிவும், விளக்கமும் சமுதாயத்தில் குறைவாகவே இருக்கின்றது. அது தொடர்பான விழிப்புணர்வு அவசியம்.

இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலையின் குழந்தை வைத்திய நிபுணர் மருத்துவர் கீதாஞ்சலி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் "பெருமூளை வாதம்" தொடர்பாக நூல் வெளியீடு அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பெருமூளை உடல் மற்றும் விருத்தியில் மாற்று வலுவுடைய குழந்தைகள் பலர் நம் மத்தியில் உள்ளனர். அவ்வாறான குழந்தைகள் உள்ள பெற்றோர்கள் அவர்கள் மனதில் ஆதரவற்ற நிச்சயம் ஓர் உணர்வையே கொண்டுள்ளனர்.

பலரின் கேள்விகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் குழந்தைகளை வீட்டுக்குள் முடக்கி அழுத்தங்களின் மத்தியில் வாழ்கின்றனர்.

இந்த நோய் பற்றிய அறிவும் விளக்கமும் சமுதாயத்தில் குறைவாகவே இருக்கின்றது.

உலக சுகாதார நிறுவனத்தின் வரையறையின்படி மாற்றுத் திறமையுள்ள, விருத்தியில் பின்னடைவான பிள்ளைகளை இயலுமான வகையில் உடற்தொழிற்பாடு, தன்னைத் தானே கவனித்தல், கல்வி, வேலை போன்றவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் அவர்களை ஒரு சாதாரண தரத்துக்கு உயர்த்துவதேயாகும். மாற்று வலுவுடைய குழந்தைகளை முற்கூட்டியே கண்டறிதல், கண்டறிந்தவுடன் சிகிச்சை பெற முன்வருதல் என்பவை தொடர்பாக விழிப்புணர்வு அவசியம்." - என்றார்.

(ற-21)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு
05
.
01
.
1930



இறப்பு
09
.
02
.
2017

அமரர் இளையதம்பி இரத்தினம்
(வேலணை, 5 ஆம் வட்டாரம்)

கடந்த 09.02.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து வந்து உதவிகள் பல புரிந்ததுடன் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டும் மலர்வளையம் சாத்தியும் இறுதி ஊர்வலத்தில் கலந்தும் ஆறுதலாய் இருந்த எமது உறவுகள் நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் கடந்த 09.03.2017 அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் வேலணை சாட்டி இந்துமயானத்தில் நடைபெற்றது. இன்று (11.03.2017) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

09, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 031 2675

(J/8222/11.17.19)

## பல்கலை விரிவுரையாளர் சங்கம் கொழும்பு அரசுக்குக் காலக்கெடு

கொழும்பு, மார்ச் 11
பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம், கொழும்பு அரசுக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கத் தீர்மானித்துள்ளது என்று அந்தச் சங்கத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
"சம்பள முரண்பாடு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்துவந்தது. பல்கலைக்கழக நடவடிக்கைகளின் நன்மை கருதியே போராட்டத்தைக் கைவிட்டு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளோம். எதிர்வரும் இருவார காலத்துக்குள் எங்களுக்குத் தீர்வு வழங்கப்படவில்லையெனில் மீண்டும் கைவிடப்பட்ட பணிப்புறக்கணிப்புத் தொடரும்". என்றார். (ஐ-10)

## அரச தலைவர் ஆணைக்குழு பந்துலவுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 11
ஊடகங்களுக்கு பொய் உரைத்த மகிந்த ஆதரவு அணி உறுப்பினர் பந்துல குணவர்தனவை, மத்திய வங்கி பிணை முறி கொடுக்கல் வாங்கல் தொடர்பாக விசாரணை செய்யும் அரச தலைவர் ஆணைக்குழு கடுமையாக எச்சரித்துள்ளது.
மத்தியவங்கி பிணை முறி கொடுக்கல் வாங்கல் தொடர்பாக விசாரணை செய்யும் அரச தலைவர் ஆணைக்குழு கடந்த புதன்கிழமை விசார ணைகளை மேற்கொண்டது.
அதற்கமைய கடந்த புதன்கிழமை அறிவிக்கப்பட்ட அறிவித்தலின்படி நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன ஆணைக்குழுவிடம் முன்னிலையானார்.
குறித்த சம்பவம் தொடர்பாக தான் பொய் கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஏற்றுக்கொண்டதை அடுத்து, அரசதலைவர் ஆணைக்குழு ஆணையாளர்கள் பந்துலவைக் கடுமையாக எச்சரித்துள்ளனர்.
இதனை அடுத்து ஆணைக்குழு உறுப்பினர்கள் அவரிடம் வாக்குமூலமொன்றையும் பதிவு செய்தனர். (ஐ4)

# வரிகளை அதிகரிப்பதால் மட்டும் பொருளாதாரத்தை வளர்க்கமுடியாது

கொழும்பு, மார்ச் 11
நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி, வளமுள்ள நாடாக இலங்கையை மாற்ற வேண்டிய பொறுப்பு நிதி அமைச்சின் மீதே தங்கியுள்ளது. நிதி அமைச்சு இந்தப் பொறுப்பைச் சரிவர செய்வதற்கான சூழ்நிலைகள், வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். வெறுமனே வரிகளை அதிகரிப்பதன் மூலம் மட்டும் ஒரு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. அவ்வாறு உலகில் எந்தவொரு நாடும் முன்னேறியதும் கிடையாது.
இவ்வாறு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிதி அமைச்சின் உற்பத்தி வரிகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் அண்மையில் நடைபெற்றது. இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,
நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்பதுடன், வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்க வேண்டும்.
" நீங்கள் வெறுமனே கடனை மாத்திரம் பெற்றுக் கொள்வதினாலோ அல்லது வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதன் ஊடாகவோ நாட்டைப் பொருளாதார ரீதியாகக் கட்டியெழுப்ப முடியாது. வெளிநாட்டு முதலீட்டாளர்களை உள்நாட்டுக்கு கொண்டு வாருங்கள். அவர்களைக் கொண்டு இந்தப் பிரதேசங்களைக் கட்டியெழுப்புங்கள். தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்துங்கள். அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்களை, அடிப்படைத் தேவைகளை, பௌதிக கட்டமைப்புக்களை செய்து கொடுத்து பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது தான் நிரந்தர முன்னேற்றமாகும்" என்று மலேசிய முன்னாள் தலைமை அமைச்சர் மஹதீர் முஹம்மத் இலங்கைக்கு வந்தபோது கூறியிருந்தார். அதுபோல் நாமும் செயற்பட வேண்டும்.

> போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏராளமான பிரச்சினைகள் குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பு சபையில் சுட்டிக்காட்டி யிருந்தது. நல்லாட்சி அரசு பெறுப்பேற்றதன் பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும், புதிய அரச மைப்பு உருவாகும், அதனூடாக எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும், எமது காணிகள் எம்மிடம் மீள ஒப்ப டைக்கப்படும் என்றெல்லாம் கற்பனை செய்த மக்கள் இன்றும் ஏமாற்றத்துட னேயே வாழ்கின்றனா்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏராளமான பிரச்சினைகள் குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பு சபையில் சுட்டிக்காட்டியிருந்தது. நல்லாட்சி அரசு பெறுப்பேற்றதன் பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும், புதிய அரசமைப்பு உருவாகும், அதனூடாக எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும், எமது காணிகள் எம்மிடம் மீள ஒப்படைக்கப்படும் என்றெல்லாம் கற்பனை செய்த மக்கள் இன்றும் ஏமாற்றத்துடனேயே வாழ்கின்றனர். எனவே, இது சம்மந்தமாக உரிய நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும்.
இன்று உணவுப்பொருள்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. அந்தப் பொருள்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு கொண்டுவரும்போது இரட்டிப்பு விலையாகின்றது. எல்லாப் பகுதிகளும் குறைந்த விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். இது தொடர்பில் தெளிவான கொள்கையொன்றை நிதி அமைச்சு வகுக்க வேண்டும். இவ்வாறான திட்டங்கள் வகுக்கப்படுமாயின் மட்டுமே பொருள்களின் விலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.என்றார். (ஐ10)




## அரசியலில் பெண்களின் பங்குபற்றுதலை அதிகரிப்பதற்கான திட்டங்கள் அவசியம்

*அரச தலைவர் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 11
தூய்மையான, நேர்மை மிக்க, அரசியலை முன்னெடுப்பதற்கு, பெண்களை அதிகளவில்அரசியலில்ஈடுபடுத்துவதற்கான திட்டங்களை எதிர்காலத்தில் முன்னெ டுப்பது அவசியம். இவ்வாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
சிறி லங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் மகளிர் முன்னணி ஏற்பாடு செய்த சிறப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று அரச தலைவரின் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது
தூய்மையான அரசியல் வகிபாகங்கள் இன்று நாட்டுக்கு தேவையாக உள்ளது. மக்களுக்காகத் தூய்மையானதும், நேர்மையானதுமான சேவையை ஆற்றும் பலம் எமது தாய்மாருக்கும், மகள்மாருக்கும் இருக்கிறது. அந்தப் பலத்தை இனங்கண்டு எதிர்கால தேர்தல்களில் மகளிர் பிரதிநிதித்துவத்துக்கான பின்னணியை உருவாக்குவதற்கு தற்போதைய அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.



ஊழல், மோசடி, முறைகேடுகளில் ஈடுபட்டு அரச வளங்களைத் தவறாகப் பயன்படுத்துவோரன்றி, வெற்றுக் கோஷங்கள் இல்லாத நேர்மையான, தூய்மையான அரசியல் இயக்கத்தையே இன்று நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர். மக்களது அந்த அரசியல் தேவைகளை நிறைவேற்றுவதற்கு சிறி லங்கா சுதந்திரக் கட்சி பாடுபட்டு வருகின்றது.
சிறி லங்கா சுதந்திரக் கட்சி நடவடிக்கைகளிலும், அரச அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளிலும் மகளிர் பிரதிநிதித்துவத்தையும் , ஒப்படைக்கப்படும் பொறுப்புக்களையும் உயர்த்துவதற்கு அரசு செயற்படுகின்றது. என்றுள்ளது. (10)

## மகிந்தவின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்படும்

கொழும்பு, மார்ச்.11
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பைக் குறைக்காமல், தொடர்ந்தும் பலப்படுத்துவோம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, விமலவீர திசாநாயக்கவால் எழுப்பப்பட்ட வினாவுக்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க பதிலளித்து கொண்டிருந்த போதே தலைமை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது
கடந்த ஆட்சியின் போது முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்கவின் பாதுகாப்பைக் குறைத்தது போன்று, மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக் குறைக்கப்படமாட்டாது. பாதுகாப்பு அமைச்சின் மூலமாகவே முன்னாள் அரச தலைவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.
தற்போது அரசதலைவர், தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கான பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. என்றார். (ஐ-10)

## திருமலையில் கோர விபத்து ஒருவர் சாவு: ஐவர் படுகாயம்



திருமலை, மார்ச் 11

திருகோணமலை கண்டி பிரதான வீதியில் 93ஆம் கட்டைச் சந்தியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

அதிகாலை 3.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காரும் கப்ரக வாகனமுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகின.

இதில், காரில் பயணித்த மூவரும், கப்ரக வாகனத்தில் பயணித்த ஐவரும் படுகாயமடைந்த நிலையில் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் முள்ளிப்பொத்தானையைச் சேர்ந்த அலிகான் நௌபர்கான் (வயது 38) என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்து தொடர்பில் கந்தளாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-ய.45)

## யாழ்.- திருமலை பஸ்ஸில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

திருமலை, மார்ச் 11

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் சுமார் ஒன்பதரைக் கிலோ கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக உப்புவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

தகவல் ஒன்றுக்கமைய நேற்றுமுன்தினம் இரவு குறித்த பஸ்ஸை கன்னியாப் பகுதியில் மறித்துச் சோதனையிட்ட பொலிஸார் கேரளக்கஞ்சாவுடன் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர். திருகோணமலையைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நீதி மன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(த- ய.45)

# ஏழாவது நாளாகவும் பன்னங்கண்டி மக்கள் கவனவீர்ப்புப் போர்

### காணி அனுமதிப் பத்திரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து



கிளிநொச்சி, மார்ச் 11

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பன்னங்கண்டி பிரதேச மக்கள் நேற்று ஏழாவது நாளாகவும் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாம் குடியிருக்கும் காணிகளுக்கான அனுமதிப் பத்திரம், வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் தெரிவிக்கையில்,

இறுதிப் போருக்கு முற்பட்ட காலப் பகுதியில் நாம் இவ்வாறான ஒரு பிரச்சினையை எதிர்கொள்ளவில்லை. காணிகளுக்கு அனுமதிப் பத்திரம் இல்லாவிடினும் நாங்கள் நிம்மதியாக வாழ்ந்தோம். எங்களுக்கென்றே இந்தக் காணிகள் வழங்கப்பட்டன.

நாங்கள் நட்டு வளர்த்த மரங்கள் கூட இப்போது பயன்தர ஆரம்பித்துள்ளன. மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் வீட்டுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு அரசுநலத் திட்டங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எனினும் நாம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறோம். இதற்கு உரிய தீர்வு கிட்டும்வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்றனர். (த-ய.6)

## வவு. பொதுப் பூங்கா மீண்டும் திறப்பு

வவுனியா, மார்ச் 11

வவுனியா நகர சபையின் பொதுப் பூங்கா மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. நுழைவுக் கட்டணமாக சிறியவர்களுக்கு 10 ரூபாவும் பெரியவர்களுக்கு 20 ரூபாவும் அறவிடப்படுகின்றது.

வவுனியா நகரசபையின் பொதுப் பூங்கா 8 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டு கடந்த மாதம் வடக்கு முதலமைச்சரால் பாவனைக்குத் திறக்கப்பட்டது. சில தினங்களின் பின்னர் சிறார்கள் விளையாடிக் கொண்டிருந்தபோது ஊஞ்சல் பாறி விழுந்தது. ஒரு சிறுவன் காயமடைந்தான். தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் சோதனைக்காக பூங்கா மறு அறிவித்தல் வரை மூடப்பட்டது.

தற்போது பூங்கா மக்கள் பாவனைக்குத் திறக்கப்பட்டுள்ளது. சிறியவர்களுக்கு 10ரூபாவும் பெரியவர்களுக்கு 20 ரூபாவும் ஒளிப்படம் வீடியோ எடுப்பதற்கு ஆயிரம் ரூபாவும் அறவிடப்படுகின்றது என்று மக்கள் தெரிவித்தனர்.

"கடந்த முதலாம் திகதி முதல் கேள்வி கோரல் மூலம் தனியார் ஒருவருக்கு நகரசபை பொதுப்பூங்கா ஒரு வருடத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

நகரசபை தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மூலம் தரம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் நகரசபைக்கு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கேள்வி கோரல் மூலம் தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளது." என்று வவுனியா நகரசபைச் செயலாளர் ஆர். தயாபரன் தெரிவித்தார்.

(ற - 4)


# யாழ்ப்பாணத்தில்

## கடைகள், வீடு ஒரு பிளாசா விற்பனை

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்தியில்- இரு பக்கமும் றோட்டு அமைந்துள்ள நல்ல சுற்றாடல் கொண்ட பகுதியில் சிறப்பான முறையில் இயங்கிக் கொண்டிருக்கும் கீழே 7 கடைகளும், மேல் தளத்தில் 4 கடைகளும் அதனுடன் ஹோலும் உள்ளது. கீழ் தளத்தில் அமைந்துள்ள வீட்டில் சமையல் அறை, குளியல் அறை, மலசலகூடம், 2 பெரிய ஹோல், அலுவலக அறை உள்ளது. கிணறும் தண்ணீர்த் தாங்கியும் உள்ளது. மேற்பகுதியில் 4 படுக்கை அறைகள், சமையல் அறை, ஒரு ஹோலும் உள்ள பெரியதொரு கட்டடத் தொகுதி உடனடியாக விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:- 077 695 6298/ 077 142 6658/ 077 666 0690, 416 261 1460-கனடா



# அல்...
# அருள்மிகு ஸ்ரீ முத்...
# மகா சத சண்டி ய...

மாசி 27ஆம் நாள் (11.03.2017) சனிக்கிழமை - ...
பூஜை, கன்னியா பூஜை, சுமங்கலி பூஜை, வடுக...
வீதிப்ரதக்ஷணம், கும்ப அ...



## திருத்தல வரலாறு

தமிழர் தாயகத்தை வன்னி மன்னர்கள் ஆண்ட போது அல்வாய் என்ற கிராமத்தில் சில நிலவுடமையாளர்கள் வல்லமை பெற்றிருந்தார்கள். மழவராயர், மாப்பாணர், மணிவீரர் முதலியோர் இந்த மரபில் தோன்றியவர்கள்தான்.

வீரமாப்பாணர்முதலியார் . குமாரவேலர், கந்தர் ஆகியோர் அவரது புதல்வர்கள். வள்ளி நாச்சியார் அவரது ஒரேயொரு மகள். இவர் உடைச்சி என்று எல்லோராலும் அழைக்கப்படுவர். இவர் ஒரு விதவைப்பெண் ஆவார். இவரது காலத்தில் அக்கம்மா என்ற பெண்தெய்வத்தின் மாயங்கள்பற்றியும் அதன் அதீத ஆற்றல் பற்றியும் ஊர்முழுவதும் ஒரே பேச்சு. ஊரில் கிழக்கே பரந்த பிரதேசம் மாரியில் வெள்ளம் தேங்கி பாரிய குளம்போல்காட்சி தரும் ஒரு குளம். ஒரு கிணறு. ஒரு குகை, துலுக்கன் கோட்டை என்ற காணியில் குகை, அருகில் நாச்சிமார் கோயில். இவையாவும் மாய¸ அக்கை. மாயா¸ கை என அழைக்கப்படும். மாயக்கைப் பிரதேசம். உடம்பே தெரியாது நீட்டிய ஒரு கையினை உடைய ஒரு பெண் தெய்வம். அது பலிகேட்பதாக ஊரவர் பேசிக்கொள்வர். உடைச்சிக்கு மாயா அக்கை மேல் பயபக்தி அதிகம. அவர் அடிக்கடி அக்கம்மா அக்கம்மா என கூச்சலிடுவாராம். அக்காலத்தில் காத்தவராயன் கூத்து பார்க்க உடைச்சி தவறுவதில்லையாம். இதனால் முத்துமாரி மீது அவருக்கு அதிக பிரியம். விதவை ஆகையால் வெண்பட்டு உடுத்தி ஆண்டு தோறும் தோணி மூலம் மதுரை மீனாட்சி தரிசனம் செய்ய செல்வாராம். அங்கு ஒரு அம்மன் வெங்கல சிலையை வாங்கி வந்து தனது வீட்டில் வைத்து பூஜை செய்து மகிழ்வாராம். அந்த அம்மனை தனக்கு பின் யார் ஆதரிப்பார் என்ற கவலை உடைச்சியை வாட்டிய போது அம்பாள் கனவில் தேன்றி "வள்ளீ கவலைப்படாதே உங்கடை அந்தக் காணி வேவிலந்தைக்காணி. எனது தலவிருட்சமாகத் தோன்றி வேம்பும் இலந்தையுமாகக் காட்சி தருகிறதே அது யாருமல்ல வேம்பு நான் இலந்தை சிவம் என அறிந்து கொள் அதுதான் எனக்கு பிடித்த இடம். அங்கே என்னை வைத்து விளக்கேற்று;; என கனவுரைத்தபோது வள்ளியால் கொட்டில் கட்டி வணங்கப்பெற்று தோன்றியதுதான் இத்திருத்தலம். வள்ளியின் வம்சாவழியினர் பராமரித்து வரலாயினர்.

இதனைத் தொடர்ந்து 1827 இல் பொது நிர்வாக அமைப்பினை உருவாக்கினர் என்றும் அதில் நாற்பது உறுப்பினர்கள் எனவும் 5 பரிபாலன உறுப்பினர் என்பதும் அமையப்பெற்றதே முதலாவது நிர்வாகம் ஆகும். பின்னர் காலத்திற்குகாலம் நிர்வாகசபைகள் உருவாக்கப்பட்டு பல திருப்பணி வேலை நிறைவு பெற்றன. மீண்டும் 1993 இல் புதிய நிர்வாகசபை தோன்றிய போதும் 1994 இடைக்காலநிர்வாக சபை தேன்றியது. இதனைத் தொடர்ந்து பல திருப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. மீண்டும் 1999 இல் புதிய நிர்வாகசபை பொறுப்பேற்றதுடன் திருப்பணிசசபை ஒன்று தோற்றுவிக்கப்பட்டு இன்று வரை பலதிருப்பணிகள் உள்நாட்டவர்களின் நிதியிலும் புலம்பெயர் அன்பர்களின் பெருநிதியினாலும் பிரம்மாண்ட திருப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அம்பிகையின் சந்நிதியில் மாதாந்த உற்சவங்களுடன் செவ்வாய்க்கிழமை உற்சவம் மிகவிமர்சையாக நடைபெறும். அம்பிகையின் மகோற்சவம் ஆடி மாத பூரணையை தீர்த்த உற்சவமாகக்கொண்டு 15 தினங்கள் நடைபெறும் திருவிளக்கு பூஜை. சுமங்கலி பூஜை. பக்தோற்சவம் வசந்தோற்சவம். சப்பறத்திருவிழா தேர்த்திருவிழா. தீர்த்தோற்சவம் என்பன விசேஷட திருவிழாக்களாகும். கடந்த இருபது ஆண்டுகளில் ஆலயத்தின் திருப்பணிகள் மிகவும் உன்னதமானபணியாகவும் பலகோடியில் செய்யப்பட்ட திருப்பணிகளைக் காணமுடிகின்றது.

"முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே""

## உலக நன்மைக்காக நடை...




யாழ்ப்பாணம் அல்வாய் சமீபம் வேவில...
இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமுத்துமாரி...
பலகுடும்பங்களின் குல தெய்வமாகவும் அடி...
ஸ்ரீமுத்துமாரியம்மன் திகழ்கின்றாள்.

மாசிமகப்பெருவிழா

இவ்வாலயத்தில் ஆண்டுதோறும் மாசிமகப்பெருவிழா காலம்கா...
ஆண்டுகளாக பக்தர்களின் விருப்பத்திற்கிணங்கியும் உலக நன்...
நிகழ்த்தப் பெறுகிறது. இதற்கு சண்டியாகம் என்று பெயர். ஸ்ரீதேவீ...
கொடிய அரக்கர்களை அழித்து அம்பிகை இவ்வுலகைக்காப்பாற்றிய ...
கொண்டதாகும். இம் மந்திரங்களை ஒருநாளைக்கு பத்துமுறை ...
சதசண்டிஹோமம் என்று பெயர். இதனைச் செய்தால் மக்கள்...
நோய்நொடிகள் தீரும் என்றும் மேலும் திருமணப்பாக்கியம், வியாப...
பெருகும் எனவும் சாத்திரங்கள் கூறுகின்றன. இதனடிப்படைய...
ஆண்டுதோறும் இந்த மகாசண்டியாகம் நடத்தப்படுகின்றது. மார்ச் ...
மாசி மகத்தன்று நிறைவு செய்யப்படவுள்ளது. தினமும் காலை தொ...
நிறைவடைகிறது. பட்டுப்புடவை மற்றும் 96 வகை மூலிகைப்...
ஏராளமான பத்தர்கள் தரிசித்து அம்பிகை அருள் பெற்று வருகின்றன...
இவ்வாலய பிரதமகுருக்கள் சிவஸ்ரீசிவாகுருக்கள். சிவஸ்ரீ சுரேசு...
நடத்துகின்றனர். இணுவிலில் மகாதேவவாத்தியார், சுன்னாகம் ச...
ஆகியோருடன் இந்தியாவிலிருந்து வந்திருக்கும் பதினைந்து சிவா...
கணேச குருக்கள் ஆகியோர் யாகத்தை நடத்துகின்றனர். மேலு...
வேதசிவாகம பாடசாலை எனும் குருகுலம் நடத்தி வரும் முதல்வ...
இருந்து நடத்தியும் தினமும் அம்மனின் திருவருள் என்ற தலை...
பெருவிழாவின் ஏற்பாடுகளை ஆலயத்தலைவர் திரு.கணேச...
செய்துவருகின்றனர்.

**சிவப்பிரம்...**
**முதல்வர் - ...**
**மயிலாடுது...**

## சண்டியாக பிரதம குருவின் ஆசிச்செய்தி




அம்பிகையின் அடியார்களே,

மாசி மகத்தை முன்னிட்டு நான்காம் தடவையாக சத சண்டியாகம் செய்வதற்கு திருவருள் கை கூடியுள்ளது. இதற்கு இங்கும். வெளிநாடுகளிலும் வாழுகின்ற அடியவர்களின் உதவியினால் இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கின்ற சிவாச்சார்ய பெருந்தகையைக் கொண்டு சப்தசதி பாராயணம் செய்யப்பட்டு 100 தடவை பாராயணம். 10 தடவை ஹோமமும் செய்கின்ற பேற்றினை அம்பிகை தந்து இருக்கின்றாள். மாணிக்கவாசகருடைய திருவாசகத்திற்கிணங்க அவன் அருளாலே அவன்தாள் வணங்க என்ற சொல்லிற்கிணங்க இறைவியினுடைய பெருங்கருணையினாலே இவற்றை அனைவரையும் ஒன்று கூடி பெரும் செலவில் இப்படிப்பட்ட மஹா யக்ஞம் செய்வதற்கும். பார்ப்பதற்கும் என்ன புண்ணியம் இப்பிறவியில் செய்தோமோ தெரியவில்லை. இதற்குப் பொருளுதவி. நிதியுதவி. சரீர உதவி செய்த அனைத்து அடியவர்களும். வேண்டிய வரங்களைப் பெற்று இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு இறைவியின் கடைக்கண் பார்வையினால் எம்மையெல்லாம் ரக்ஷிக்கும் பொருட்டு ஆலய பரிபாலன சபையினரதும் அந்தணர். சிவாசார்யார்கள் அனைவருடைய ஒத்துழைப்பில் மிகச் சிறப்பாக சண்டியாகம் நிறைவுபெறும். இச்செய்தியை உதயன் பத்திரிகை மூலம் உங்களுக்கு அம்பிகையின் பாதக் கமலங்களைப் பணிந்து ஆசி கூறுகின்றேன்.

**அல்வாய் தேவஸ்தான குருவும்,**
**லண்டன் விம்பிளி ஈழபதீஸ்வரர் குரவாய்**
**பணிபுரியும் சண்டியாக பிரதம சிவாச்சாரியார்**
**'சிவாகம க்ரியா நிதி'**
**சிவஸ்ரீ ஸதா சிவ. சுரேஸ்வர குருக்கள்.**

## நல்லூர் ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி




அல்வாய் வேவிலந்தைப் பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் முத்துமாரி அம்பாளுக்கு இந்த ஆண்டு மாசி மஹா மகத்தை முன்னிட்டு பத்துத் தினங்கள் அம்பாளுக்கு மகா சத சண்டி யாகம் நடைபெறுவதையிட்டு அனைவரும் மகிழ்ச்சி அடைகின்றனர். யாகங்கங்களில் பல சிறப்புக்களை பூவுலகத்திற்கு வழங்குவது சண்டியாகம் ஆகும்.

இந்த யாகத்தை சிறப்பிக்கும் வேவிலந்தை முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தினருக்கும் வேத விற்பன்னர்களுக்கும் அல்வாய் மக்களுக்கும் இறை அன்பு கிடைப்பதாக இதனை அனைவரும் தரிசித்து நாட்டில் நிரந்தர அமைதியும் சாந்தி. சமாதானம். இறையன்பும் கிடைக்கப் பிரார்த்தித்து மண்ணில் நல்ல வண்ணம் அனைவரும் வாழ்வோமாக.

"என்றும் வேண்டும் இறையன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
**ஆதீனக்குரு முதல்வர், இரண்டாவது குரு மகாசந்நிதானம்,**
**நல்லை திருஞான சம்பந்த ஆதீனம்.**

## வாழ்த்துச் செய்தி




எல்லாம் வல்ல எம்பிரான்-ஈசனின் இடது பக்கத்து இடம் கொண்ட அன்னைமுத்துமாரி அம்மனின் அருள்வேண்டி இம்முறை நான்காவது தடவையாக அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் நடந்தேறி வரும் மஹா சத சண்டியாகத்தில் பங்குபெறுகின்ற சிவாச்சாரிகள் உபயகாரர்கள் தர்மகர்த்தா சபையினர் யாகத்தை தர்சிக்க வருகின்ற அடியார்கள் அனைவரும் பேறு பெற்றவர்களே. இவர்கள் மட்டுமல்ல இந்த மண்ணிலே பிறந்தார் எல்லோரும் இந்த யாகத்தில் நல்ல பலன்களைப் பெற்று அம்பாளின் திருவருளால் நோய் நொடியின்றி நீண்ட உயிர் வாழ்வும் கல்வியும் செல்வமும் அழகுடன் அறிவும் தூயமனமும் துணிவும் கொண்டு பெருமையுடனே பெருவாழ்வு வாழ வேண்டுமென அம்பாளின் பாதம் பணிந்து வேண்டுதல் செய்கின்றேன்.

"ஆத்தாளை, எங்கள் அபிராமி வல்லியை, அண்டமெல்லாம் பூத்தாளை,
மாதுளம் பூநிறத்தாளை.புவி அடங்கக் காத்தாளை,
ஐங்கணை பாசாங்குசமும் கரும்பும் அங்கை சேர்த்தாளை
முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே"

**ஈஸ்வரபாதம் சரவணபவன்**
**நாடாளுமன்ற உறுப்பினர்,**
**யாழ், கிளிநொச்சி மாவட்டம்.**

## வாழ்த்துச் செய்...



வடமராட்சிப் பிரதேசத்தில் அல்...
பதியினிலே அகிலாண்ட ...
நாயகியாகவும் அனைத்து உ...
விளங்கும் அன்னை பராசக்தி ...
நின்று அருட்கடாட்சம் புரிகின்றாள்.

சக்தி என்ற பெரும் தத்துவம் பல்வேறு விதம...
காணப்படுகின்றது. இறை பரம்பொருளில் இரு...
பேரருட் சக்தியாக விளங்குகின்றாள்.

யாகம் என்பது நம் மனதில் உள்ள ...
பொசுக்கிவிடும். பூவுலகில் நாம் கேட்கி...
அனைத்தினையும் பெற்றுக் கொள்வதற்க...
யாகமே மஹா சத சண்டி யாகமாகு...
மந்திரங்களைக் கொண்ட சண்டியா...
விருட்சத்தைப்போல பன்மடங்கு பலனை...
பலன்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கு...
சமித்துக்களை அக்கினியில் போடுகின்றோ...
என்பார்கள். இப்படி செய்யப்படுகி...
சமித்துக்களுக்கும் ஒவ்வொரு விதமான ...
என்கின்றது சாஸ்திரம்.

இந்த வகையிலே அன்னை வலம்புரி ...
ஈடேற்றத்தோடு அவதாரமெடுத்த நாளில் 4 ஆ...
இவ் மஹா சத சண்டி யாகம் எமது ஆலயத்தி...
இட்டு அடியேனாகிய நான் மட்டற்ற மகிழ்ச்...
இதுபோன்ற யாகங்கள் இனிவரும் காலங்கள்...
சிறப்புற நடைபெற வேண்டுமென எல்லாம்...
தாயவளின் பாதார விந்தங்களை வணங்கி நி...

**முன்னாள் ...**
**வே.பராச...**

**இவ்வருடம் 11.03.2017 சனிக்கிழமை பிற்பகல் மாசி மகத்தை முன்னிட்டு அ...**

# வாய் வேவிலந்தை
# துமாரி அம்மன் தேவஸ்தானம்
# ாக சிறப்பிதழ் – 11.03.2017

– காலை 6.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு. புண்ணியாக வாசனம், மஹா சத சண்டி யாக பூஜை, மஹா சதசண்டி ஹோமம், காதம்பரி பலி, பைரவப் பலி, பிரம்மசாரி
டுகபூஜை, வஸ்த்ர சமர்ப்பணம், த்ரவ்ய ஹோமம், செபாக்கிய த்ரவ்ய சமர்ப்பணம், வசோத்தார ஹோமம், மகாசத சண்டி பூர்ணாகுதி, யாத்ராதானம், கும்பம் உத்தாபனம்,
ப அபிஷேகம், பூஜை, நவசக்தி இலட்சார்ச்சனை பூர்த்தி, சுவாமி வீதி உலா, ஆசியுரை குருமார்கள் கௌரவித்தல், மஞ்சத்தில் அம்பாள் வீதி உலா.







## நடைபெறும் மிகப்பெரிய சண்டியாகம்

விலந்தையில் உள்ளது. ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம் மாரியம்மன் மிகவும் சக்திவாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அடியார்கள் வேண்டுவதை அருளும் சக்தியாகவும்

ம்காலமாக கொண்டாடப்பட்டு வருகிற நிலையில் நான்கு நன்மைக்காகவும் மிகப்பெரிய சண்டியாகம்" பத்து நாள்கள் தேவீமகாத்மியம் எனும் புராணநூலில் மகிஷாஸூரன் போன்ற ற்றிய வரலாறு கூறப்பட்டுள்ளது. இது எழுநூறு மந்திரங்களைக் றை வீதம் பத்துநாள்களில் நூறுமுறை ஹோமம் செய்வதற்கு க்கள் துன்பங்கள் நீங்கி மகிழ்ச்சியாக வழலாம் என்றும் யாபார அபிவிருத்தி, செல்வவளம் போன்ற எல்லாவளங்களும் டையில் அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரியம்மனுக்கு மார்ச் 2ஆம் திகதி தொடங்கிய யாகம் இன்று மார்ச் 11ஆம் திகதி தொடங்கும் யாகம் மதியம் 12 மணியளவில் பூர்ணாகுதியுடன் கப்பொருள்களுடன் செய்யப்படும் பூர்ணாகுதியை தினமும் ற்றனர்.

ரேக்ஷ்குருக்கள் ஆகியோர் யாகத்தின் குருமார்களாக இருந்து கம் சர்வேஸ்வரகுருக்கள், முன்னேஸ்வரம் பத்மநாபகுருக்கள் சிவாச்சாரியார்களும் லண்டன் ராஜேஸ்வரக்குருக்கள் சிவகிரி மேலும் இந்தியாவில் தமிழகத்தில் மயிலாடுதுறை சிவபுரம் நல்வர் சிவஸ்ரீ.ஏ.வி.சுவாமிநாத சிவாசாரியார் சர்வபோதகராக தலைப்பில் சொற்பொழிவாற்றியும் வருகிறார்கள். சண்டியாகப் ணேசமூர்த்தி தலைமையில் அறங்காவலர்கள் சிறப்பாக

**பிரம்மஸ்ரீ A.V.ரவி சுவாமிநாதசிவாச்சாரியார்**
**வர் - சிவபுரம் வேதசிவாகம பாடசாலை**
**டுதுறை.**

## ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி



ஈழமணித் திரு நாட்டின் சிரசெனப் போற்றப்படும் யாழ் குடா நாட்டின் வடக்கால் அமைந்திருப்பது வடமராட்சி. வடமராட்சியில் அன்று தொட்டு இன்று வரை புகழ்பூத்ததும் அருள் சுரக்கின்றதுமான ஒரு புண்ணிய பதியாக அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ அருள் மிகு முத்துமாரி அம்பாள் விளங்குகின்றாள்.

அன்னையின் மெய்தீண்டி நாளும் பொழுதும் நற்பணி ஆற்றும் வாய்ப்பு அடியேனுக்கும் கிடைத்தது எமது பூர்வ புண்ணிய பலனே. அத்தகைய சிறப்புமிகு ஆலயத்தில் இன்று நான்காவது தடவையாகவும் மகாசதசண்டி யாகம் நடத்தும் பேறு எமக்குக் கிடைத்தமை என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே என்று நினைக்கும் படியாக அமைகின்றது.

சண்டிகாபரமேஸ்வரியின் பதின்மூன்று நாமங்களுக்கும் ஏற்ற அவிப்பெருள்களை தயார் செய்து அவற்றை அக்கினி மூலமாக அவளுக்கு சேர்ப்பதில் நாம் பெருமையும் உளத்திருப்தியும் அடைகின்றோம். அன்னைக்கு வேண்டிய அலங்காரங்களை சிறப்பாக ஆற்றி அவளின் அடியிணைக்கு ஏற்ற வகையில் திரவியங்கள் கொண்டு இன்று 10 நாள்களும் சிறப்பாக அடியார்கள் சண்டிகாபரமேஸ்வரிக்கு செய்யும் இந்த யாகத்தால் அனைவருக்கும் நல்லருள் கிடைப்பதுடன் அனைவரும் இன்று பெரு உளத்திருப்தியுடன் இந்த யாகத்தை ஆற்றியிருக்கின்றனர். எனவே இத்தகைய பெரும் யாகத்தை இந்த புண்ணிய சேத்திரத்தில் செய்வதற்கு கிடைத்த பேறு நாம் அனைவரும் பெற்ற பெரும் பேறாகக் கருதி உயர்வு பெற்று இருக்கின்றோம். எனவே அன்னையின் கடைக்கண் பார்வையினால் உயர்வான பேறுபெற்று அனைவரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ இறையாசி வேண்டி நிற்கின்றோம்.

அனைவரும் இன்புற்றிருக்க வாழ்த்துகின்றேன்.

**சிவ பிரம்ம ஸ்ரீ சதாசிவ சிவகுமார குருக்கள்**
**(சண்டியாகபானு) - ஆலய பிரதம குரு.**

## ஆலய பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்து.



ஆத்தாள் அண்டமெல்லாம் பூத்தாள், புவனம்பதின்நான்கையும் பூத்தவண்ணம் காத்தவளே என்று அம்பிகையினைப் பாடுவர் ஆன்றோர். உலகத்து நாயகியாக விளங்கி உலக மாதாவாக விளங்கும் அம்பாள் அல்வையில் கோயில் கொண்டு அன்று மடாலயமாக இருந்து இன்று மூர்த்தி, தல, தீர்த்த சிறப்புக்களுடன் ஆகம நெறிக்கு உட்பட்ட ஆலயமாக வளர்ந்து ஆயிரம் ஆயிரம் அடியவர்களை தன்னகத்தே கொண்டு அருளாட்சி செய்துகொண்டு இருக்கின்றாள். இத்தகைய உயர்வு மிகு அம்பிகைக்கு நான்காவது தடவையாகவும் மகாசத சண்டியாகம் நடத்தும் பேறு எமக்கு கிடைத்தமை அன்னையின் அருட்கடாட்சமே எனின் அது மிகையாகாது.

அல்வாய் என்ற சிற்றூரில் கோயில் கொண்ட அம்பிகையினால் இன்று அம்பிகையின் திருவுருவம் என்றால் அது அல்வாய் என்று சொல்லும்படியான சிறப்பு வேவிலந்தைப் பதியாளினால் கிடைத்ததும் இத்தகைய சிறப்பு மிகு ஆலயத்தில் சண்டிக்கு யாகம் செய்வதற்காக இறைதிருவருள் கைகூடிய போது அடியவர்கள் போட்டி போட்டு உபயம் ஏற்று இன்று மிக சிறப்பாக இத்தகைய யாகத்தை நிறைவுசெய்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். அன்னையின் அருட்பார்வை அனைத்து அடியார் மீதும் படவேண்டும் என வேண்டுகின்றேன். எமக்கு இப்பிறப்பில் கிடைத்தற்கரிய பணியாம் இறைபணி செய்வதற்கு அதுவும் தாய்த் தெய்வமான அன்னை முத்துமாரிக்கு இறைபணியாற்ற கிடைத்த இப்பேறு பெரும்பேறு. ஏழ்ஏழ் பிறப்புக்கள் எடுத்தாலும் இத்தகைய பணி கிடைப்பது அரிது. எனவே மற்றோரின் மனம் நெகிழும்படி நாம் அம்பிகைக்கு ஆற்றக்கூடிய இப் பெரும்பணியை ஆற்றுவோம். ஈழத்திலே மிகவும் உன்னதமான ஆலயமாக எமது ஆலயத்தை மாற்றுவோம். இத்தகைய யாகங்களைச் செய்வதனால் ஊர் நன்மை பெறும் என்ற செய்தியை உலகிற்கு சொல்லுவோம். இத்தகைய உயர்வான மஹா சதசண்டி யாகம் எமது வாழ்நாளில் கிடைத்தற்கரிய பேறாக போற்றி மேற்கொள்வோம். என வாழ்த்தி அனைவரும் வாழும் வண்ணம் நாம் பணி செய்வோம். பொதுப்பணி என்பது எமது உள்ளத்தால் எழ வேண்டும். யாரும் சொல்லி செய்வதல்ல அதே போல் இறைபணியும் உள்ளத்தில் உதித்த சிந்தனையாக அமைய எல்லாம் வல்ல அம்பிகையினை வணங்கி வாழ்த்தி நிற்கின்றேன்.

**திரு சி.கணேசமூர்த்தி**
**ஆலய பரிபாலனசபைத் தலைவர்.**

## ...செய்தி

அல்வாய் வேவிலந்தை ட கோடி, பிரமாண்ட து உயிர்கட்கும் தாயாக சக்தி நீக்கமற நிறைந்து

விதமாகப் பரந்து விரிந்து இருந்து பிரிக்க இயலாத

ள எண்ணங்களைப் கட்கின்ற கடாட்சங்கள் தற்காக நாம் செய்யும் மாகும். 700 மஹா டியாகமானது கற்பக களை தரவல்லது. இப் நாக்குடன் பலவிதமான ன்றோம். இதை ஆகுதி டுகின்ற ஒவ்வொரு ான பலன்கள் உண்டு

ம்புரி சங்காக ஆன்ம 4 ஆவது முறையாகவும் யத்தில் இடம்பெறுவதை கிழ்ச்சி அடைகின்றேன். ங்களிலும் மேன்மேலும் லாம் வல்ல முத்துமாரி ங்கி நிற்கின்றேன்.

**ான் செயலாளர்,**
**ராச்சிங்கம்.**

## வாழ்த்துச் செய்தி



அருள்மாரி பொழியும் அம்பிகை வழிபாடு இந்து மதத்தில் பன்னெடுங்காலமாக இருந்து வந்துள்ளது. பூலோகத்தில் நாம் கேட்கின்ற கடாட்சங்கள் அனைத்தையும் பெற்றுக் கொள் வதற்காக நாம் செய்யும் யாகமே சண்டியாகமாகும்.

சதசண்டி ஹோமத்திற்கு அதி அற்புதமான பலன்களுண்டு. நமது எதிர்ச்சக்திகளைப் பல மிழக்கின்றன. விக்ஷம், திருடர்கள், முரடர்கள், பில்லி சூனியம் போன்றவற்றிலிருந்து நாம் காப் பாற்றப்படுகின்றோம் என புராணங்கள் கூறுகின்றன. சதசண்டி யாகம் செய்தால் உடலாரோக்கியம், தனம், வளம், நீண்டஆயுள், புத்திர சந்தானம், புகழ், வாழ்வில் வெற்றி, ஆத்மபலம் கிடைக்கும் எனக் கூறப்படுகின்றது. ஒருமுறை ஹோமம் செய்தால் துர்க்கிர கங்களின் சேஷ்டைகள் ஒடுங்கும். பத்துமுறை செய்தால் எல்லா விதமான பயங்கள் நீங்கும். பதினாறு பேறும் பெருகும் என்றும் கூறப்படுகின்றது.

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் நான்காம் முறையாக 130 அடியார்களின் வேண்டுகோளை முன்னிட்டு தினமும் 13 உபயகாரராக 10 நாள்களும் 130 உபயகாரர் கூடி காலை 6.30 மணியிலிருந்து பிற்பகல் 7 மணிவரை இலங்கை, இந்தியா, லண்டனில் தலைசிறந்த சிவாச்சாரியர் அனுசரணையுடன் நம் சிவாகமம் கிரியா நிதி, சக்தி ஆகம வித்துவ ஜோதி, சிவப்பிரம்ம ஸ்ரீ சதா சிவ சுரேஸ்வரக் குருக்கள் தலைமையில் எடுக்கும் இப்புனித யாகத்தில் திளைத்த இயற்கை அன்னையே 10 தினங்களும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள். மாரி பொழிந்தது. என்னே அற்புதம். ஆலயம் எங்கும் தெய்வீகம். ஓம குண்டத்திலிருந்து நறுமணம். வானுயர் புகைமண்டலம். அனைவரையும் வருடி அனைத்து ஆரோக்கியமளிக்கின்றமை அற்புதம். அற்புதமே. மஹா சத சண்டி ஹோமம் நிறைவுற உழைத்த சிவாச்சாரியர்களுக்கும், உபயகாரர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், இவர்கட்கு மேலாக நம் ஆலய நிகழ்வுகள் அத்தனையும் சிறக்க தனது உடல், பொருள்,ஆவி அனைத்தையும் அம்பாளுக்கு அர்ப்பணித்துவரும் நம் மனித தெய்வம் பிரம்ம ஸ்ரீ சி.சுரேஸ்வரக்குருக்களுக்கும் அவ்வப்போது வேண்டிய உதவிகள் புரிந்து நிகழ்வு சிறக்க ஒத்துழைத்தார்க்கும் எனது மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களைப் பாதம் பணிந்து சொரிகின்றோம்.

**நா.சந்திரசேகரம்.**
**முன்னாள் பொருளாளர், - பரிபாலனசபை.**

## ஆலயத்தில் மஹாசத சண்டியாகம் 2017



சைவமும் தமிழும் செழிப்புற்று விளங்கும் ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண குடாநாட்டின் வடக்கே வடமராட்சிப் பதியிலே அல்வாய் என்று அழைக்கப்படும் கிராமத்தில் அன்று கிராமியத் தெய்வமாக வழிபடப் பெற்று இன்று மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற சிறப்புக்களுடன் உயர்நிலை பெற்று தேடிவரும் அடியவர்களுக்கு அருள்பாலித்து மிகவும் உன்னதமான சக்தி ஆலயங்களுள் ஒன்றாக விளங்கும் இந்த அம்மன் ஆலயம் அருட்கடாட்சத்தினால் ஆயிரம் ஆயிரம் அடியார் பெருமக்களை தன்பால் ஈர்த்து உயர்நிலை பெற்று விளங்குகின்றது.

அத்தகைய உன்னதமான அன்னையின் அருளால் உயர்நிலை பெற்ற அடியவர்கள் பலர். இத்தகைய உயர்வு நிலையில் இருக்கும் அடியவர்களுக்கு அன்னை என்றும் உறுதுணையாக இருப்பதனால் அன்னைக்கு இந்த ஆண்டு மஹா சத சண்டி ஹோமம் ஒன்று நிகழ்த்துவதற்கு சிந்தித்தனர். அச்சிந்தனை இன்று செயல்வடிவம் பெற்று உயர்வு நிலையில் நல்யாகம் நடந்தேறி இருக்கிறது. உண்மையில் இந்தயாகம் பற்றி சிந்தித்து அதற்கான முழு ஏற்பாடுகளையும் செய்தவர் அன்னையின் அருளால் உயர்வு பெற்ற சண்டிகா ஹோம பிரதம குரு சைவாகம கலாநிதி சிவப்பிரம்ம ஸ்ரீ சி.சுரேக்ஷ்வரக் குருக்கள் என்றால் அது மிகையாகாது. அன்னையின் அருளினால் அவர் லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய பிரதம குருவாக இருக்கின்றார். அவரது அயராத முயற்சியால் ஈழத்தின் பிரசித்தி பெற்ற குருமார்களையும் தமிழ்நாட்டில் பிரசித்திபெற்ற குருமார்களையும் இணைத்து மிகப் பெரிய மஹா சத சண்டி ஹோமத்தை நடத்தி இருக்கிறார். எமது சமயத்தில் தொன்று தொட்டு வழங்கி வருகின்ற தாய்த் தெய்வ வணக்கம் எமது சமய பண்பாட்டு விழுமியங்களைப் போற்றிப் பேணிப் பாதுகாக்கும் ஓர் உன்னத பணியாக இருக்கின்றது. எனவே நமது வாழ்நாளில் அன்னைக்கு செய்கின்ற பெரும் கைங்கரியமாக இது விளங்குகிறது. ஆனால் பயன் பெறப் போவது ஒட்டுமொத்த உயிர்களும் தமிழ் இனமும் அதிலும் சைவ நன்மக்களும் என்றால் அது மிகையாகாது. ஆனால் கிடைக்கும் நன்மைகள் அனைவரையும் சென்று சேரும். இதனையே பழந்தமிழ் பாடல் ஒன்று

"நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழிஓடி
புல்லுக்குமாங்கே பொசியுமாம் தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லோர்க்கும் பெய்யுமாம் மழை

என்பதற்கமைய யாகங்களைப் பொறுப்பேற்று நடத்துகின்ற எமக்கு மட்டுமல்ல அனைத்து மக்களுக்கும் இந்த யாகத்தின் பலன் ஒன்று சேரும். ஆனால் இந்த யாகம் நடைபெறும் போது அம்பிகையினைத் தரிசித்து மந்திர உச்சாடங்களை செவிவழி கேட்டு அன்னையின் ஷேத்திரத்தில் உலா வந்து அவள் பாதார விந்தங்களை தொழும் அடியவர்களுக்கு கிடைக்கும் அருள் மேலானது.

**திரு. ந. தேவராஜா அதிபர் யா/ நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை கரவெட்டி.**
**தர்மகர்த்தா சபை உறுப்பினர்.**

**அம்பிகை இன்பர்சிட்டியில் சமுத்திர தீர்த்தமாடி மாலையில் ஆலயம் திரும்புவார்**

# பார்க் பதவி நீக்கம் மன்று நேற்று தீர்ப்பு



சியோல், மார்ச் 11
தென்கொரியஜனாதிபதி பார்க்கியூன் ஹை மீதான ஊழல் குற்றச்சாட்டுஉறுதிசெய்யப்பட்டதை அடுத்து அவரை பதவியிலிருந்து விலக்கி உத்தரவிட்டது மன்று.

தென்கொரிய அதிபர் பார்க்கியூன்ஹைமீதும் அவர் தலைமையிலான அரசின் மீதும் ஏகப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள்முன்வைக்கப்பட்டன. அதிபருடன் தனக்கு இருக்கும் நெருக்கத்தைப் பயன்படுத்தி அதிபரின் நெருங்கிய தோழியான சோய் சூன் சில் அரச விவகாரங்களில் தலையீடு செய்தார், முக்கிய ஆவணங்களை ஆராய்ந்தார் என்று எதிர்க்கட்சிகள் ஆதாரங்களுடன் நிரூபித்தன. இதனையடுத்து தலைநகர் சியோலில் லட்சக்கணக்கான மக்கள் திரண்டு தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். அவர்கள் பார்க்கை கைது செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தினர். இதனால் தென்கொரியநாடாளுமன்றத்தால் பார்க் மீதான நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்த முடிவை எதிர்த்து, பார்க் கியூன் ஹை அந்த நாட்டின் அரசமைப்பு சட்ட உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்தார். இந்த முறையீட்டின்மீதுவிசாரணை நடத்திய மன்று, பார்க் கியூன் ஹையை நாடாளுமன்றம் நீக்கியது செல்லும். அவரது பதவி நீக்கம் உறுதியாகிறது என்று நேற்று உத்தரவுபிறப்பிக்கப்பட்டது. (ம)

> “அதிபருடன் தனக்கு இருக்கும் நெருக்கத்தைப் பயன்படுத்தி அதிபரின் நெருங்கிய தோழியான சோய் சூன் சில் அரச விவகாரங்களில் தலையீடு செய்தார், முக்கிய ஆவணங்களை ஆராய்ந்தார் என்று எதிர்க்கட்சிகள் ஆதாரங்களுடன் நிரூபித்தன.



## சிறுவர் காப்பகத்தில் தீ; சாவு 22 ஆக உயர்வு

சான்ஜோஸ், மார்ச் 11
குவாத்மாலாநாட்டில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் கடந்த புதன்கிழமைஏற்பட்ட தீவிபத்தில்உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 19 இல் இருந்து 22 ஆக உயர்ந்தது.

சான் ஜோஸ் நகரில் உள்ள குழந்தைகள் காப்பகத்திலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது. முதல்கட்டமாக 19 குழந்தைகள் உயிரிழந்தனர் என்றுதெரிவிக்கப்பட்டது. 25குழந்தைகள் காயங்களுடன்மருத்துவமனையில்சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் மூவர் உயிரிழந்ததை அடுத்து சாவு எண்ணிக்கை 22 ஆக உயர்ந்தது. மேலும் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால உயிரிழப்புமேலும்அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம)

## பள்ளத்தில் பாய்ந்தது பஸ்; 24 பேர் சாவு

நேபாளத்தில் அவலம்



காத்மண்டு, மார்ச் 11
நேபாளத்தின்ஜாகர்கோர்மாவட்டத்தில்பயணிகள் பேருந்து ஒன்று வீதியில் இருந்து விலகி பள்ளத்துக்குள் உருண்டு விழுந்ததில் 24 பேர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர்.

இந்த அசம்பாவிதம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கலங்கா என்ற இடத்தில்இருந்துகாரா என்றஇடத்துக்குச்சென்றபேருந்தே அவ்வாறு விபத்துக்குள்ளானது. சாவடைந்தவர்களைத் தவிர 41 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

## நெடுவாசல் போராட்டம் தற்காலிக நிறுத்தம்

சென்னை, மார்ச் 11
தமிழகம் புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் கிராமத்தில் இயற்கை எரிவாயு பெறும் திட்டத்தைஎதிர்த்துமேற்கொள்ளப்பட்டுவந்தபோராட்டம்தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

தமிழகம் புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் கிராமத்தில் இயற்கை எரிவாயு எடுப்பதற்கு இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதைக் கண்டித்து நெடுவாசல் மக்கள் தொடர்ந்து மூன்று வாரங்களாக போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். பலதரப்பட்டபேச்சுக்கள் நடத்தியும்போராட்டம்கைவிடப்படவில்லை.

நெடுவாசல் போராட்டக் குழுவுக்கும் தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. மத்திய அரசின் நடவடிக்கைக்கு மாநில அரசு வழங்க வேண்டிய அனுமதிகள்



வழங்கப்படமாட்டாது என்று உறுதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. (ம)

## பிரிட்ஜோவின் உடல் ஏற்கப்படவில்லை நியாயம் கேட்டு போராட்டம் தொடர்கிறது

சென்னை, மார்ச் 11
தமிழகமீனவர்பிரிட்ஜோ, கடந்த திங்கட்கிழமை இரவு சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து அவரது சாவுக்குநீதிகேட்டுநான்காம் நாளாகநேற்றும்பலஇடங்களில் போராட்டங்கள்நடத்தப்பட்டன.

ராமேஸ்வரம், தங்கச்சிமடம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 416 விசைப்படகுகளில் 2 ஆயிரத்து 500 மீனவர்கள் கடந்த திங்கட்கிழமை இரவுமீன்பிடிக்கச் சென்றனர். அவர்கள் இலங்கை கடற் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, தங்கச்சிமடத்தைச் சேர்ந்த டிட்டோஎன்பவரதுவிசைப்படகு மீது, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. பிரிட்ஜோ என்ற மீனவர் கழுத்தில் குண்டு பாய்ந்து சாவடைந்தார். பிறிதொருவர்காயமடைந்து சிகிச்சை பெற்றுவருகிறார். இலங்கை கடற்படையே எம்மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது என்று தமிழக மீனவர்கள் குற்றச்சாட்டைமுன்வைத்துள்ளனர்.

கொலை வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ள இலங்கை கடற்படையைக் கைதுசெய்ய வேண்டும். இறந்தவரின் குடும்பத்துக்கு இலங்கை அரசிடம் இருந்து ஒரு கோடிரூபாஇழப்பீடாகப்பெற்றுத் தரவேண்டும்என்றுவலியுறுத்தி போராட்டங்கள் நடைபெறுகின்றன. நான்காம்நாளாகநேற்றும் போராட்டம் நடத்தப்பட்டது. நூற்றுக்கணக்கான மக்கள் அதில் கலந்துகொண்டனர். கையில் மெழுகுவர்த்திகளை ஏந்தியவாறுஅவர்கள்அறப்போராட்டம் நடத்தினர்என்றுஇந்தியஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)



தன்னை மாணவர் பின்பற்றக்கூடிய வர்களாக இருக்கின்றார்களா என்பதையும் அடிக்கடி மதிப்பீடு செய்ய வேண்டும்.
தற்போது கல்வி பல சவால்களை எதிர்நோக்குகின்றது. தனியாள் விருத்தி, சமூக விருத்தி, சமூக இடைவினைச் செயற்பாடுகள், சமாதான மனிதன் ஆகியவற்றில் ஏற்படுகின்ற நிலைமைகள் ஊடாக ஆசிரியர் மாற்றம் செய்யும் முகவராகச் செயலாற்ற வேண்டும்.


# ஆசிரிய கல்வியின் நோக்கும் மாணவ நன்னடத்தை மாற்றமும்

கலாநிதி பா. தனபாலன்

கற்றல் கற்பித்தலில் மாணவ இயல்பை இனங்கண்டு கற்பதற்கான சூழலை அமைக்கவும், ஆசிரியரின் கடமைகளையும்-பொருத்தப்பாட்டையும் விளங்கி செயலாற்றவும் வழிகாட்டுவதே ஆசிரியர்களுக்கான கல்வியின் நோக்கமாகும். மாணவர்களின் தேவைகளை அறிந்து, அவர்கள் சார்பாக சிந்தித்து கல்வித்தத்துவம், உளவியல், சமூகவியல், ஆலோசனை வழிகாட்டல் எண்ணக் கருக்களைப் பிரயோகித்து மாணவர்களின் மகிழ்ச்சிகரமான கற்றலுக்காக அவர்களுடன் பயணிக்கும் ஆசிரியர்களுக்கான தேர்ச்சிகளை ஆசிரியர் கல்வி மூலம் வழங்க வேண்டும். இது தத்துவக் கோட்பாடுகளை நடைமுறைகளாக்கும் பின்வரும் முறையியல்களின் ஊடாக எடுத்தாளப்படும்.

01. அதீத பௌதிகவியல் - கல்வி வாழ்க்கைக் குறிக்கோள்கள் தொடர்பான விடயங்கள்.
02. அறிவாய்வு - கல்வி பிரயோக நடைமுறைகள், நன்மைகள்.
03. ஒழுக்கவியல்-நன்மை, தீமை, உண்மை பற்றியமை.
04. அளவையியல் கருத்துக்கள், வாதங்கள், ஆய்வுகள், விமர்சனங்கள்.
05. அழகியல் - இரசாயன விருப்பத்தின் ஊடான மனிதத்துவக் கல்வி.

இந்த அடிப்படைகளை மையமாக வைத்து, ஆசிரியர் கல்வி, மாணவர்களின் நல் வாழ்க்கைக்கான மனப்பாங்கு மாற்றத்தை ஆசிரியரிடத்தே ஏற்படுத்த வேண்டும். எமது நாட்டில் தற்போது ஆசிரிய கல்வி தொடர்பான ஆய்வுகளின் பேறாக இந்த நோக்கம் முழுமையாக நிறைவேற்றப்பட வில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இன்று உலகிலேயே அதி உயர் கல்விப் பேற்றைவெளியிடும், பின்லாந்து நாட்டில் ஆசிரிய கல்வியும், தரமும் உலகிலேயே முதலாமிடத்திலுள்ளது. எனவே விரைவாக இலங்கையில் வழங்கப்படும் முன்சேவை, சேவையுள் தொடருறு கல்வி மற்றும் பல்கலைக் கழகங்கள், தனியார்கல்வி நிறுவனங்கள் வழங்கும் ஆசிரிய கல்வி தொடர்பான பாடநெறிகள் மறுசீரமைக்கப்பட வேண்டும். ஆசிரியர்களிடம் மாணவர்கள் சார்ந்த அர்ப்பணிப்புள்ள மனப்பாங்கை ஏற்படுத்த இந்தப் பாடநெறிகளினூடாக இயலாமல் போனமைக்கான காரணங்களைக் கண்டறிய ஆய்வுகளை மேற்கொள்வதுடன், தத்துவாத்த பின்னணிகளை, பாடசாலைகளநிலைகளையும்மீள்மதிப்பீடு செய்ய வேண்டும்.



### ஆசிரியரின் சுய சிந்தனை

ஒவ்வொரு ஆசிரியரும் சுயமாகச்சிந்தித்துதமதுகடமையைஉணர்ந்துசெயற்படபொருத்தமான முகாமைத்துவ கட்டமைப்பு மாற்றங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். இதற்கு நுண்மதி, மனவெழுச்சி நுண்மதி,ஆத்மீகநுண்மதிமற்றும்மிருதுநிலைத்திறன்கள் என்பவற்றைப் பிரயோகிக்க வேண்டும். எமது பாரம்பரியமான மதங்களின் தத்துவங்கள் ஆசிரியர்களுக்கு சரியான தத்துவார்த்த கல்வியின் இருப்பை உணர்த்துகின்றன.

"கடவுள்பூரணமானமாணவர்,ஆன்மாவும்பூரணமானது. பூரணத்தினால் பூரணத்தை உணரும் போது எஞ்சியிருப்பதும் பூரணமே!" இந்து மத வேதாகமக் கல்வி

பரிபூரண விடுதலையை வழங்குவதே கல்வியாகும். இதனை வழங்கும் நல்லாசிரியர் மறைந்துள்ளவற்றை பொருளுள்ள வகையில் எடுத்துரைப்பார் - பௌத்த மதக் கல்வி கௌதம புத்தர்-

பரிபூரணமான ஆளுமை உள்ள கிறிஸ்தவரை ஆக்கி, தேவ வரப்பிரசாதப்படல் - கிறிஸ்தவ மதக்கல்வி -

பரிபூரண அல்குறானைக் கற்றல் மூலம் அல்லாவின் பெயரால் அறிவைப் பரப்பல் - இஸ்லாமிய மதக் கல்வி.

எனவே பரிபூரணமான சமநிலை ஆளுமை உடைய மாணவர்களை உருவாக்குவதே ஆசிரிய கல்வியின் அடிப்படை நோக்கமாகும்.

பரிபூரண கல்வியே உலக விடியலுக்கு வழி என யுனெஸ்கோ எடுத்தியம்புகின்றது. 21 ஆம் நூற்றாண்டுக்கான தனது அறிக்கையில் நவீன உலகில் நிலவுகின்ற உலகமயமாக்கல் செயன்முறை, உலகக் கிராமம் ஆகிய எண்ணக்கருக்கள் கல்விக்குப் புதிய தொனிப்பொருள்களை அளித்துள்ளன.

இதன் காரணமாக மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பரந்த ஓர் அறிவுத் தொகுதியை சவால்களுக்கு முகம் கொடுக்க பின்வரும் கல்வியின் நான்கு தூண்களை எடுத்தியம்புகின்றது.

01. **அறிவைப் பெறக் கற்றல் -**
தானாக-சுயமாக எவ்வாறு கற்க வேண்டும் என்பதைப் புரிந்து கற்பதற்குக் கற்றல் கல்வியின் தொடர்பாடல் தொழில் சார் திறன்களைப் பெறல்.

02. **செயலில் ஈடுபடுவதற்காகக் கற்றல்-**
வாழ்க்கை, தொழில் அனுபவங்கள் கல்வியுடன் பொருத்தப்பாடுடைய குழுவாக இயங்குதல், சமூகத் தேர்ச்சிகள் சமூக தொழில் அனுபவங்களின் துணையுடன் கற்றல்.

03. **ஏனையவருடன் வாழக்கற்றல் -**
தன்னை விளங்கி, மற்றவர்களைப் புரிந்து சமூக ஒருங்கிசைவுடன்சமாதானமானநல்வாழ்வுவாழக்கற்றல்.
*"யாதும் ஊரே யாவரும் கேளிர்"* (எல்லாம் எமது ஊரே, எல்லோரும் எம் நண்பர்களே இங்கு முரண்பாடுகள் களையப்பட்டு மனிதத்துவத்தை நிலைநிறுத்தும் கல்வியை மாணவர்களுக்கு வழங்குதல். பல்கலாசாரத்தில் மற்றவருடன் எவ்வாறு வாழ்தல் என்பதைக் கற்றல்.

04. **வாழக்கற்றல் -**
மகிழ்ச்சியாக எவ்வாறு வாழலாம் என்பதைக் கற்றல், சமநிலை ஆளுமை விருத்தியுடன் நற்பிரசையாக வாழ சமூகமயமாக ஆயுள்காலம் முழுதும் கற்க அழகியல் உணர்வுடன் பொழுதை இனிமையாக மனிதத்துவம் பொருந்தியதாக வாழக்கற்றல்.

### மகிழ்ச்சியாக வாழ்வதற்கான கல்வி

இந்த வகையில் ஆசிரியர்களும், அதிபர்களும், கல்வி மேற்பார்வையாளர்களும் கல்வியின் தத்துவார்த்த நோக்கை அடிப்படைத் தேர்ச்சிக்கல்வியை மறந்து அடைவு மட்டத்தை மட்டும் உயர்த்தி, எதை சாதிக்கலாம் என்பதை ஆராய வேண்டும். கல்வி பரந்தது. பரமானந்தம் தருவது-மனிதர்களை மனிதர்களாக வாழவைப்பது என்பதை உணராவிட்டால், எமது நாடும் உலகமும் வன்முறைகளாலும், போட்டி பொறாமை, முரண்பாடுகளாலும் சிதைந்துவிடும். எனவே கல்வித்துறையில் இருப்போர் அனைவருமே அடிப்படையில் ஆசிரியர்களே என்பதை உணரவேண்டும். அதற்கேற்ப முன்மாதிரியாளர்களாக நடக்க வேண்டும். கௌரவத்தின் சின்னமாகச் செயலாற்ற வேண்டும்.

குறிப்பாக பாடசாலை வகுப்பறையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது ஆளுமையையும், நடத்தைகளையும் ஆசிரிய மதிப்பீடுசெய்ய வேண்டும்.

தாம் எப்படியானவர், தம் கருணை, சுறுசுறுப்பு, நடுநிலைமை, நேரமுகாமைத்துவம், நிலையான கருத்து ஆகியவற்றை உடையவரா? போன்ற வினாக்களுக்கு விடை அளித்து தொடர்ச்சியாக தம் ஆசிரியத்துவத்தையும் நடத்தைகளையும் சுயபகுப்பாய்வுக்கு உட்படுத்த வேண்டும். இதற்கான தத்துவார்த்தப் பின்னணியை ஆசிரிய தன் சுய கற்றலால்-ஆளுமையால் ஏற்படுத்த வேண்டும்.

தன்னை மாணவர் பின்பற்றக்கூடிய வர்களாக இருக்கின்றார்களா என்பதையும் அடிக்கடி மதிப்பீடு செய்ய வேண்டும்.

தற்போது கல்வி பல சவால்களை எதிர்நோக்குகின்றது. தனியாள் விருத்தி, சமூக விருத்தி, சமூக இடைவினைச் செயற்பாடுகள், சமாதான மனிதன் ஆகியவற்றில் ஏற்படுகின்ற நிலைமைகள் ஊடாக ஆசிரியர் மாற்றம் செய்யும் முகவராகச் செயலாற்ற வேண்டும். கல்வியின் மூலம் மாணவர்கள் நல்ல மனப்பாங்குகளைப் பெறுதல், ஆர்வத்தைத் தூண்டி சுயாதீனமாகச் செயற்படவைத்தல், உய தொழில்நுட்ப கல்விச் சாதனைகளைச் செய்ய வெற்றிகரமான அனுபவங்களைப்பெற்றுக்கொடுத்தல் மற்றும் மாணவர்களின் உள விருத்தி, நடத்தை விருத்தி, ஒழுக்க விருத்தி என்பவற்றின் மீது சாதகமான செல்வாக்கை ஆசிரியர் கையாள வேண்டும். இதற்கு தொடர்ந்து கற்க வேண்டும்.

(தொடரும்)

கட்டுரையாளர்: நிபுணத்துவ ஆலோசகர், சமய விழுமியப் பிரிவு, கல்வியமைச்சு, பத்திரமுல்ல.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கல்லில் நார் உரிக்கும் கூட்டமைப்பின் முயற்சி

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் காத்திரமான ஒரு கட்டத்தைக் கடந்துவிட முடியும் என்று எதிர்பார்க்கப்பட்ட சமயத்தில், மீண்டும் ஒரு பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. மாகாணங்களுக்குப் பகிரப்படவுள்ள அதிகாரங்கள் குறித்த இணக்கப்பாடு எட்டப்பட இருக்கையில், இந்தப் பின்னடைவு உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போதைய கூட்டு அரசு 2015இல் பதவியேற்றுக்கொண்டதும் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அயலுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீர, நாட்டை எதிர்காலம் நோக்கி முன்னெடுத்துச் செல்ல புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படுவது அவசியம் என்று கட்டியம் கூறியிருந்தார். எனினும் அந்த அரசமைப்பை உருவாக்குவதற்கான காலம் 2 வருடங்களை எட்டுகின்றபோதும், அதனைச் சாத்தியமாக்கும் வழியைக் கண்டுபிடிப்பது மிகக் கடுமையான ஒன்றாகவே இருக்கிறது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான ஆரம்பம் என்னவோ மிகச்சிறப்பாகத்தான் இருந்தது என்றாலும் போகப் போக அந்த முயற்சி சிங்கள பௌத்த பேரினவாதப் பொறிக்குள் சிக்கிக்கொண்டு மீள முடியாமல் தவிக்கின்றது. தேர்ச்சக்கரம் சேற்றுக்குள் சிக்கிக்கொள்ளும்போது ஒவ்வொரு முறையும் அதனை மீட்கப் பாடுபடுவதைப் போன்றே புதிய அரசமைப்புக்கான முயற்சியை அடுத்தடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் தவம் புரியவேண்டியிருக்கிறது.

கடைசியாக மகிந்த அணியின் குழப்பத்தில் வந்து தடைப்பட்டு நிற்கிறது இந்த முயற்சி. நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசமைப்பு வழிகாட்டல் குழுக் கூட்டத்தில் மகிந்த அணியினர் பங்கேற்காததால் அதிகாரப் பகிர்வு குறித்த இறுதி முடிவு எட்டப்படவில்லை.

வழிகாட்டல் குழுவுக்கு வெளியே மகிந்த அணியினர் என்னதான் புதிய அரசமைப்புக் குறித்து எதிர்க்கருத்துக்களைச் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பி வந்தாலும், வழிகாட்டல் குழுவில் அவர்கள் தொடர்ந்தும் பங்கெடுத்தே வருகிறார்கள். அவர்களையும் இணைத்துக்கொண்டு இந்த முயற்சிகளில் முன்னகர்வதே எதிர்காலத்தில் அவர்களால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கான வழி என்று அரசதலைவரும் தலைமை அமைச்சரும் உறுதியாகக் கருதுகின்றார்கள்.

அதிகாரப் பகிர்வை மகிந்த அணியினர் ஒருவேளை கடைசியில் எதிர்த்தாலும், இந்த முடிவுகள் எல்லாம் அவர்களையும் உள்ளடக்கிய வழிகாட்டல் குழுக் கூட்டத்திலேயே எடுக்கப்பட்டவை என்று சிங்கள மக்களுக்குச் சொல்லிவிட முடியும் என்பதாலேயே மகிந்த அணியினரையும் உள்ளடக்கி முடிவுகளை எடுப்பதில் ஆட்சித் தரப்பினர் அக்கறையாக இருக்கின்றனர். தமிழர்களுக்கு அதிகாரத்தையும் ஆட்சியையும் கொடுத்துவிட்டார்கள் என்று எந்தவொரு தனித்தரப்பினர் மீதும் சிங்கள மக்கள் துரோகிப் பட்டம் சூட்டிவிடக்கூடாது என்பதில் ஒவ்வொரு கட்சித் தரப்புக்களும் அவ்வளவு அக்கறையாக இருக்கின்றன.

இது மகிந்த தரப்புக்கும் தெரியும் என்பதால், ஏனைய விடயங்களுக்கான துருப்புச் சீட்டாக அவர்களும் இதனைப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

என்னதான் மேடையில் வாய் கிழியப் பேசினாலும், உண்மையில் மகிந்த தரப்பு உட்பட எந்தவொரு சிங்களத் தரப்புக்கும் அதிகாரப் பகிர்வும் தீர்வும் தேவையான ஒன்றாக இல்லை. நிர்ப்பந்தத்தின் பேரிலேயே அந்த முயற்சியில் அவர்கள் பங்காளிகளாக இருக்கிறார்கள். அதனால் புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியை எப்படியாவது முன்கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலையிலேயே வீழ்ந்துள்ளது.

பேச்சு மேசையில் இருந்து தானாக விலகிச் செல்வதில்லை என்று தானே வரிந்துகொண்ட சக்கரவட்ட வியூகத்திற்குள் மாட்டிக்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தத் தேரை எப்படியாவது நகர்த்திச் செல்வதைத் தவிர வேறு வழியுமில்லை. அதனால் ஒவ்வொரு தடவையும் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி பின்னடைவைச் சந்திக்கும்போதும் அதனை முன்னகர்த்த வேண்டிய அளப்பெரும் பொறுப்பைக் கூட்டமைப்பே சுமக்கின்றது.

கல்லில் நார் உரிப்பது போன்ற கடினமான இந்தப் பணியில் வெற்றியை நோக்கிச் செல்வதற்கு மிகுந்த பொறுமையும் காலமும் தேவை. ஆனால் காலதாமதத்தால் கொந்தளித்துப் போயிருக்கும் மக்களின் மத்தியில் பொறுப்பை நிறைவேற்றி முடிப்பது என்பது இலகுவான காரியமல்ல.

# என்னைப் பற்றிச் சிலர் போட்டுக் கொடுத்ததால் பிரபாகரனுக்கும் எனக்கும் இடையே பிரச்சினை தோன்றியது

2

தமிழாக்கம்:
எம்.ஐ.முபாறக்

*(இலங்கை இராணுவத்தினர் மீதான தாக்குதல்களின் வெற்றிக்கு புலிகளது தாக்குதல் வியூகங்களே வழிவகுத்ததாகக் குறிப்பிடும் முன்னாள் அமைச்சர் கருணா அம்மானது (விநாயகமூர்த்தி முரளிதரன்) செவ்வியின் நேற்றைய தொடர்ச்சி இன்றும் பிரசுரமாகின்றது.)*

கே: ராஜிவ் கொலை விடயம் புலிகளின் பிழையான தீர்மானம் அல்லவா?

ப: இலங்கை இராணுவத்தை விடவும் இந்திய இராணுவம் தமிழருக்கு இழைத்த அநீதி அதிகம். அதிகமான தமிழ்ப் பெண்களை அவர்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர். இதனால் ஆத்திரமுற்ற பிரபாகரன் ராஜிவ் காந்தியைக் கொலை செய்யும் தீர்மானத்தை எடுத்தார்.

**முஸ்லிம்கள் மீதான தாக்குதல்**

கே: காத்தான்குடி பள்ளிவாசல் தாக்குதல் சம்பவத்துக்கு யார் காரணம்?

ப: அதைச் செய்தவர் புலிகள் இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவின் நியூட்டனாகும். இந்த சம்பவம் தொடர்பில் நான் இப்போது தான் வருத்தப்படுகிறேன். அப்போது என்னால் இதற்கு எதிராகக் குரல் எழுப்ப முடியவில்லை. புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியே வந்த பிறகு தான் எம்மால் இதைப் பற்றிப் பேச முடி கிறது. ஆனால், இவ்வாறான வேலைகளைச் செய்யவேண்டாம் என்று நாங்கள் அப்போது பிரபாகரனிடம் கூறினோம்.

> “
> பேச்சுக்களின்போது சமஷ்டி அடிப்படையில் தீர்வை வழங்குவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடன்பட்டார். அந்த இணக்கப்பாட்டில் அரச சார்பில் ஜீ.எல்.பீரிஸும் புலிகளின் சார்பில் அன்டன் பாலசிங்கவும் கையெழுத்திட்டனர். பிரபாகரன் அதை ஏற்கவில்லை. இதனால்தான் எனக்கும் பிரபாகரனுக்கும் இடையில் பிரச்சினை தோன்றியது.


கே: எல்லைக் கிராமங்களில் இருந்த சிங்கள மக்களை துரோகிகள் எனக் குற்றம்சுமத்தி புலிகள் கொலை செய்தமை சரியா?

ப: தமிழீழம் என்ற வட்டத்துக்குள் தமிழர்களைத் தவிர எவரும் இருக்கக்கூடாது என்று பிரபாகரன் விரும்பினார். இதனால்தான் அவர் ஏனைய இன மக்களைக் கொலை செய்தார். அதேபோல், ஆரம்ப காலத்தில் புலிகள் ஒரு கட்டுகோப்புக்குள் இருக்கவில்லை. அந்தந்தப் பகுதித் தளபதிகள் நினைத்ததைச் செய்து வந்தனர்.

**பிரபாகரனது பலவீனம்**

கே: பிரபாகரனிடம் நீங்கள் கண்ட பலவீனம் என்ன?

ப: அறிவாளிகள் அவரின் அருகில் இருப்பதை அவர் விரும்பமாட்டார். எவரும் அவருக்கு அறிவுரை கூற முடியாது. இதனால், அவருக்கு நல்ல அறிவுரை வழங்குவதற்கு அருகில் எவரும் இருக்கவில்லை.
பல போர் வெற்றிகளை புலிகள் தொடர்ச்சியாகப் பெற்று வந்ததால் பிரபாகரனுக்குத் தலைக்கனம் அதிகரித்தது.
நான் அவருடன் அச்சமின்றிப் பேசுவேன். என்னைப்போல் கடற்புலிகளின் தளபதி சூசையும் அவருடன் பேசுவார். இரண்டு பேர்மீதும் பிரபாகரனுக்கு விருப்பம் அதிகம்.



கே: அவர் எந்தச் சமயத்தைப் பின்பற்றினார்? எந்தத் தெய்வத்தை வணங்கினார்?

ப: சமயங்களின் மீது அவருக்கு விருப்பம் இருக்கவில்லை. ஆனால் அதற்காக அவர் சமயங்களை எதிர்க்கமாட்டார். வணங்குபவர்களைத் தடுக்கவும் மாட்டார்.

கே: நீங்கள் புலிகளின் தளபதி

யாக இருந்து அந்த இயக்கத்துக்குப் பெற்றுக்கொடுத்த வெற்றி என்ன?

ப: பிரபாகரனின் அழைப்பின் பேரில் நாங்கள் 1700 புலிகளுடன் சென்று பூநகரி முகாமைத் தாக்கி வெற்றி கொண்டோம். அதுதான் நாம் ஈட்டிய முதல் வெற்றி.
அந்தப் போருக்கான தளபதியாக இருந்தவர் கேணல் சொர்ணம் ஆவார். எனது பகுதியில் இருந்த முகாமை ஒரே இரவில் நான் கைப்பற்றினேன்.
முதலில் தீர்மானமெடுத்தல், இரண்டாவது திட்டமிடல், மூன்றாவது நடைமுறைப்படுத்தல் என்ற மூன்று விடயங்களும் சரியாக இருந்தால் போரை இலகுவாக வெற்றி கொள்ளலாம்.
புலிகளின் தாக்குதல்கள் எல்லாம் இரவில்தான் நடத்தப்பட்டன. ஆனால், படையினர் பகலில்தான் தாக்குதல்களைத் தொடங்குவர். இரவில் தாக்குதல் நடத்தப்பட்டால் எதிரியால் அதைக் க்ட்டுப்படுத்துவது கஷ்டம். நாம் அதிக வெற்றியைப் பெற்றது இரவில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் மூலம்தான்.
இராணுவத்தைப் பொறுத்தவரை சரத் பொன்சேகா ஒரு நல்ல தளபதி. அவருடன் பல தடவைகள் நேருக்கு நேர் சண்டை பிடித்துள்ளோம். அவர் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தப்பிவிட்டார்.

கே: 2009 இல் அரசுக்கு வெற்றி கிடைத்தது. இந்த வெற்றியின் சொந்தக்காரர் யார்? மகிந்தவா? கோத்தபாயவா? சரத் பொன்சேகாவா?

ப: மஹிந்தவுக்குத்தான் அது செல்லும். அவர்தான் தீர்மானமெடுத்தார் புலிகளை அழிப்பதற்கு. சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுத்தும்கூட அவர் நிறுத்தவில்லை.'

**சரத்பொன் சேகாவால் போரை வெற்றி கொள்ள முடிந்ததா?**

கே: பொன்சேகாவால்தான் புலிகளை வெற்றிகொள்ள முடிந்தது என்று சொல்லப்படுகின்றதே?

ப: நான் புலிகள் அமைப்பில் இருந்தபோது சரத் பொன்சேகா போரில் பங்கேற்றார்தானே? அவரால் வெற்றி கொள்ள முடியவில்லை. உண்மையில் இந்த வெற்றி மகிந்தவுக்குத்தான் செல்ல வேண்டும்.

கே: போர் வெற்றியின் ஒரு பகுதி உங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறதே. இதில் உங்களின் பங்கு என்ன?

ப: புலிகளின் பலமே கிழக்குப் புலிகள்தான். ஜெயந்தன் மற்றும் சாள்ஸ் அன்டனி என்ற இரண்டு படையணிகள் இருந்தன. இவை மிகவும் பலமிக்க படையணிகள். சாள்ஸ் அன்டனி வடக்கைச் சேர்ந்தது. ஜெயந்தன் அணி கிழக்கைச் சேர்ந்தது.
நான் புலிகள் இயக்கத்தில் இருந்து விலகிய பிறகு 6000 கிழக்குப் புலிகளை நான் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைத்தேன். இதனால் புலிகளின் பலம் குறைந்தது. பிறகு நான் இந்தியாவில் போய் இருந்தேன்.

கே: உங்களைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரித்தது ரணில் விக்கிரமசிங்க என்று கூறப்படுவது உண்மையா?

ப: அது பிழை. போர் நிறுத்த காலத்தில் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் வெளிநாடுகளில் இடம்பெற்ற பேச்சுக்களில் நானும் கலந்துகொண்டேன். ஆனால், ஒரு நாள்கூட நான் அவரைச் சந்தித்தது இல்லை.
பேச்சுக்களின்போது சமஷ்டி அடிப்படையில் தீர்வை வழங்குவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடன்பட்டார். அந்த இணக்கப்பாட்டில் அரச சார்பில் ஜீ.எல். பீரிஸும், புலிகளின் சார்பில்



பிரபாகரனின் அழைப்பின் பேரில் நாம் 1700 புலிகளுடன் சென்று பூநகரி முகாமைத் தாக்கி வெற்றி கொண்டோம். அதுதான் நாம் ஈட்டிய முதல் வெற்றி. அந்தப் போருக்கான தளபதியாக இருந்தவர் கேணல் சொர்ணம் ஆவார். எனது பகுதியில் இருந்த முகாமை ஒரே இரவில் நான் கைப்பற்றினேன்.

அன்டன் பாலசிங்கவும் கையெழுத்திட்டனர். பிரபாகரன் அதை ஏற்கவில்லை. இதனால்தான் எனக்கும் பிரபாகரனுக்கும் இடையில் பிரச்சினை தோன்றியது.
உண்மையில், புலிகளுக்கு அதில் விருப்பம் இருக்கவில்லை. நான்தான் கட்டாயப்படுத்தி புலிகள் தரப்பில் கையெழுத்திட வைத்தேன். அந்த ஆவணத்தைப் பிரபாகரனிடன் கொண்டு போய்க் கொடுத்ததும் அவர் அதைக் கிழித்து வீசி நாம் துரோகம் செய்துவிட்டதாகக் கூறினார்.
ஆனால், நான்தான் கட்டாயப்படுத்தி அன்டன் பாலசிங்கத்தை கையெழுத்துப் போட வைத்தேன் என்று சிலர் பிரபாகரனிடம் போட்டுக் கொடுத்தனர்.
பிறகு மத்திய குழுவைக் கூட்டி பிரபாகரன் எனக்கு ஏசினார். இது தொடர்பில் அன்டன் பாலசிங்கத்திடம்தான் கேட்க வேண்டும் என்று நான் சொன்னேன். மறுநாள் நான் மட்டக்களப்புக்குச் சென்று விட்டேன்.

கே: நீங்கள் இலங்கைக்கு வந்து மகிந்தவுக்கு உதவுவதற்கு ஏதாவது நிபந்தனை விதித்தீர்களா?

ப: உண்மையில் இந்தப் போரால் அதிகமான தமிழர்கள் இறந்து கொண்டு போனார்கள். இது நிறுத்தப்பட வேண்டுமென்றால் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் இருந்தேன். அப்போது தமிழர்கள் என்னைத் துரோகி என்றே அழைத்தனர்.
பிரபாகரன் அப்போதே அந்த ஒஸ்லோ உடன்படிக்கையை ஏற்றிருந்தால் முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட பேரவலத்தைத் தடுத்து இருக்கலாம்.

கே: மகிந்தவின் அழைப்பை ஏற்பதற்கு ஏதாவது நிபந்தனைகள் முன்வைத்தீர்களா?

ப: நிபந்தனைகள் எவற்றையும் முன்வைக்கவில்லை. ஒரேயொரு கோரிக்கையை முன்வைத்தேன். போர் முடிந்த பிறகு தமிழருக்கு தீர்வு ஒன்றைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். கோத்தபாய, மகிந்தவுக்குத் தொலைபேசி அழைப்பை எடுத்து இதைக் கூறினார்.
மாகாண சபைத் தேர்தலின் ஊடாக தமிழருக்கு உதவுவதாகவும், முதலமைச்சர் பதவியை தமிழருக்கே வழங்குவதாகவும் மகிந்த உறுதியளித்தார். அதன்பிறகே நான் இலங்கை வந்தேன்.
மகிந்த கூறியதுபோலவே செய்தார். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழர்களுக்கு நான்கு ஆசனங்களே கிடைத்தன. முஸ்லிம்களுக்கு அதைவிட அதிகம் கிடைத்தன. இருந்தும், தமிழர் ஒருவருக்கே முதலமைச்சர் பதவியை மகிந்த வழங்கினார்.

கே: இலங்கை வந்த பிறகு உங்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்தன? போர் வெற்றிக்கு நீங்கள் எந்த வகையில் உதவினீர்கள்?


ப: அதிகமான செயற்பாடுகளில் ஈடுபட்டேன். அவை ரகசியங்கள். நாட்டின் பாதுகாப்பு நலன் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு அவற்றை வெளியில் சொல்ல முடியாது.

**கருணா குழு இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டதா?**

கே: உங்கள் தலைமையிலான ஆயுதக் குழு இராணுவத்துடன் இணைந்து புலிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தியதாகச் சொல்லப்படுகிறதே?

ப: நாங்கள் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து வந்ததும், அதிகமான எனது ஆதரவாளர்களை, அதாவது என்னுடன் வந்த கிழக்கு மாகாண புலி உறுப்பினர்களை பிரபாகரனுக்கு ஆதரவான புலிகள் கொன்றனர். இதனால் எனது ஆள்கள் பாதுகாப்பின்றி இருந்தனர். அவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக இராணுவத்துடன் இணைந்து செயற்படுமாறு நான் கூறினேன். அவர்களும் அவ்வாறே செய்தனர். அவர்களுக்குச் சம்பளமும் வழங்கப்பட்டது. அவர்கள் ஆயுதக் குழுவாக இல்லாமல் இராணுவம் போன்றே செயற்பட்டனர்.

(நாளையும் தொடரும்)



# வாசகர் திருமுகம்

## தவறுகள் திருத்தப்படு

தங்களது பத்திரிகையில் கடந்த 04.03.2017 வாசகர் திருமுகம் பகுதிய "இத்தகையோர் திருந்துவது எப்போது" என்னும் தலைப்பில் வெளிவந்த செ தொடர்பாக, குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நடத்துநர் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவரது தவறு கண்டுபிடிக்கப்பட்டமையால், அவரை ஐந்து நாள்கள் கடமை இடைநிறுத்தம் செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தங்களுக்கு அறியத்தருவதுடன், இந்த விடயத்தைத் தங்களது பத்திரிகையில் பிரசுரித்து உதவுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

*யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம்*

## வேலையற்ற பட்டதாரிகளின் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும்

வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இவர்கள் அரச திணைக்களங்களில் தமக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க வேண்டுமென்பதை வலியுறுத்தியே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களது கோரிக்கை நியாயமானது. எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் படித்துப் பட்டம் பெற்ற இவர்கள், தமக்கு வேலை வாய்ப்பு வழங்கவேண்டுமெனக் கேட்பதில் தவறொன்றுமில்லை.
அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த ஜனாதிபதி, வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம் தொடர்பாகவும் கருத்துத் தெரிவித்திருந்தார். தனியார் துறைகளில் இலட்சக்கணக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், ஆனால் பட்டதாரிகள் அரச நிறுவனங்களில் மட்டுமே தமக்கு நியமனங்களை வழங்குமாறு கோருவதால் அரசினால் உடனடியாக அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லையெனவும் அவர் தெரிவித்திருந்தார். சில தனியார் நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்கள் அதிகரித்த வேதனத்தைப் பெறுகின்றனர். மேலதிக வசதிகளும் இவர்களுக்குக் கிடைக்கின்றன. ஆனால் அநேகமான தனியார் நிறுவனங்கள் தமது பணியாளர்களுக்குக் குறைந்த அளவிலான வேதனத்தை வழங்கி வருவதாகவே தெரிய வருகின்றது. வரவு செலவுத் திட்டத்தில் அரசினால் தெரிவிக்கப்பட்ட இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா சம்பள அதிகரிப்பைக் கூட வழங்குவதற்குப் பல தனியார் நிறுவனங்கள் பின்னடித்து வருகின்றன. தொழில் பாதுகாப்பு, ஓய்வூதியம் ஆகியவை அரச துறையின் வரப்பிரசாதங்களாகும்.
இதனால்தான் 'கோழிமேய்த்தாலும் கொறணமேந்தில் மேய்க்க வேண்டும்' என அன்று சொல்லி வைத்தார்கள்.
ஆகவே அரசு தேவையற்ற சமாதானங்களைக் கூறுவதை விடுத்து, வேலையற்ற பட்டதாரிகளின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

*க. இராமநாதன், மிருசுவில்*

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 4 | | 5 | 7 | | | |
| | | | 8 | | | | 4 | |
| | | | 1 | | 4 | | 7 | 8 |
| 9 | | | 6 | | | | 5 | |
| 4 | | 5 | | | | 6 | | 3 |
| | 8 | | | | 5 | | | 9 |
| 5 | 2 | | 4 | | 1 | | | |
| | 4 | | 5 | | 8 | | | |
| | | | 3 | 9 | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 4 | 5 | 6 | 7 | 9 | 3 | 1 |
| 6 | 7 | 1 | 9 | 3 | 8 | 4 | 5 | 2 |
| 5 | 9 | 3 | 4 | 1 | 2 | 6 | 8 | 7 |
| 2 | 6 | 9 | 7 | 8 | 5 | 3 | 1 | 4 |
| 4 | 1 | 8 | 2 | 9 | 3 | 7 | 6 | 5 |
| 7 | 3 | 5 | 1 | 4 | 6 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 6 | 3 | 2 | 4 | 1 | 7 | 8 |
| 1 | 8 | 7 | 6 | 5 | 9 | 2 | 4 | 3 |
| 3 | 4 | 2 | 8 | 7 | 1 | 5 | 9 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# மும்பையின் முதல் நடிகை

தமிழ் சினிமாவில் தமிழ் நடிகைகள் நடித்ததை விட பிறமொழி நடிகைகள் நடித்ததுதான் அதிகம். குறிப்பாக மலையாளம், இந்தி நடிகைகள். தமிழ் சினிமாவுக்கு இந்தியிலிருந்து வந்த முதல் நடிகை சாந்தா ஆப்தே. 1930 ஆம் ஆண்டு சினிமாவில் அறிமுகமாகி இந்தி மற்றும் மராட்டிய படங்களில் நடித்து வந்த இவர் 1941 ஆம் ஆண்டு தமிழில் வெளிவந்த சாவித்திரி படத்தின் மூலம் தமிழுக்கு வந்தார். இப்போதும் மும்பையிலி ருந்து வரும் நடிகைகள் தமிழில் வசனம் பேசுவது இல்லை. சாந்தா ஆப்தே தமிழைக் கற்றக் கொண்டு பேசியும், பாடியும் நடித்தார். அதற்காக ஒரு ஆண்டு ஒதுக்கி தமிழ் கற்ற பிறகே நடித்தார். சாவித்திரி படத்தில் எம்.எஸ்.சுப்புலட்சுமிதான் நடிக்கவேண்டி இருந்தது. அவர் நடிக்க மறுத்ததால் மும்பையிலிருந்து சாந்தா ஆப்தே அழைத்து வரப்பட்டார். இந்தியில் முதல் வெள்ளிவிழா படமான அமர் ஜோதி சாந்தா ஆப்தே நடித்ததுதான். சாந்தா ஆப்தே சாவித்திரி படத்துக்குப் பிறகு ஏனோ தொடர்ந்து தமிழில் நடிக்கவில்லை.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** செயலில் தடுமாற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். உறவினர் வகையில் செலவு ஏற்படும்.

**இடபம்:** சமயோசித புத்தியுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். லாபம் பன்மடங்கு உயரும். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**மிதுனம்:** உழைப்பில் அதிக நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள மந்தநிலை சீராகும். லாபம் உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். உடல்நலனில் அக்கறை தேவை.

**கடகம்:** பேச்சு, செயலில் அன்பு நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழிக்க, தேவையான மாற்றம் செய்வீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும். பெற்றோரின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**சிங்கம்:** திட்டமிட்ட பணி நிறைவேற விடா முயற்சி தேவைப்படும். நண்பரின் ஆலோசனை நன்மையளிக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதுமானது. மிதமான லாபம் கிடைக்கும்.

**கன்னி:** பெற்றோரின் சொல்லுக்கு மரியாதை தருவீர்கள். தொழில், வியாபாரத்தில், நிலுவைப் பணி நிறைவேறும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். மனைவியின் பாசம் நிறைந்த அன்பில் மகிழ்வீர்கள்.

**துலாம்:** கடந்தகால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். நன்றி மறந்தவரைக்கூட பெருந்தன்மையுடன் மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். லாபம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** நண்பர்களின் செயல் அதிருப்தியை உருவாக்கலாம். தொழில், வியாபாரத்தில் மூலதனம் தேவைப்படும். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

**தனுசு:** உறவினர்களின் அதிருப்திப் பேச்சுக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் வரும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.

**மகரம்:** திட்டமிட்ட செயலை விரைந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் விலகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**கும்பம்:** சிறு முயற்சி கூட பலமடங்கு நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். உடல்நலனில் அக்கறை தேவை.

**மீனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். பெண்கள் உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர்.

**நீதிபதி: கைதி எப்படி செத்துப் போனார்?**
**சிறைத்துறை அதிகாரி: மின்சாரக் கம்பியை வாயால் கடிச்சு செத்து போய்ட்டாருங்கய்யா!**
**நீதிபதி: அது ஏன் கண்காணிப்பு கமராவில் பதிவாகலை?**



**சிறைத்துறை அதிகாரி: ம்ம்... அது வந்து... அப்போ மின்சாரம் இல்லைங்க...?**

**பாஸ்போர்ட் அளவில் போட்டோ எடுக்கணும், ஆனா செருப்பு வரை தெரியணும்...**




**எடுத்திடலாம், செருப்ப கழட்டி தலையில வச்சிக்கிட்டு கதிரையில உக்காரு...**

**நாளைக்கு எனக்கு ஏதாவது ஒன்னு ஆச்சுன்னா, நீதாண்டா பார்த்துக்கணும்!**



**போ பாட்டி... நாளைக்கு எனக்கு ஸ்கூல் இருக்கு...**

கணவர்: நேற்று நம்ம வீட்டுக்கு வந்த திருடனை உங்கப்பாதான் அனுப்பி இருப்பாரோன்னு எனக்கு சந்தேகமா இருக்கு!
மனைவி: ஏன் வீணா அவர் மேல பழியைப் போடுறீங்க?
கணவன்: பின்ன என்ன, வரதட்சனையா வாங்கின ஐம்பதாயிரத்தை எடு என்டு திருடன் சரியாய் கேட்டானே...



♥Kawsi♥ @Bubbly_Girl__
மறக்க முடியாமல் இருப்பது மட்டுமே அன்பு இல்லை
மறக்காமல் இருப்பதும் இறக்கும் வரை நினைப்பதும் இறந்த பின்பும் நிலைப்பதே உண்மையான அன்பு...






## இது புதுசு

பெண்களுக்கான சட்டைகள் நெற் அமைப்புடனும் கோட் அமைப்புடனும் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இந்தச் சட்டைகளில் கற்கள் பதித்த வேலைப் பாடுகளும் காணப்படு கின்றன.

இவை 3 ஆயிரம் ரூபா வில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## 2017

# மார்ச் மாதப் பலன்கள்




## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம்1ஆம்பாதம்

தனுசுராசி நேயர்களே! பொய் பேசுபவர்களை யும், தீய பழக்க வழக்கம் உள்ளவர்களையும் கண்டால் ஒதுங்கி நடந்து கொள்ளும் பண்பு கொண்ட உங்களுக்கு ஏழரைச்சனி நடப்பது நெருக்கடிகளை தரும் அமைப்பென்றாலும் மாத முற்பாதியில் 3இல் சூரியன், 4இல் சுக் கிரன் சஞ்சரிப்பதால் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். 10இல் சஞ்சரிக்கும் குரு வக்கிர கதியில் இருப்பதால் பணவரவிலிருந்த தேக்கங்கள் விலகி சாதகமான பலன்களை அடைவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை சுமாராக இருக்கும். நெருங்கியவர்களை அனுசரித்து நடந்து கொள்வது நல்லது. திருமண சுபகாரியங்களில் அனுகூலபலன் அமையும். உடல் நிலையில் சிறுசிறு பாதிப்புகள் தோன்றி மறையும். எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கப் பெற்று தேவைகள் பூர்த்தி ஆகும். கொடுக்கல் வாங்கலில் பெரிய தொகை களை ஈடுபடுத்தி லாபம் காண முடியும் என்றாலும் சற்று கவனமாக செயற்படுவது நல்லது. உத்தியோகஸ்தர்கள் உடன் பணிபுரிபவர்களி டம் விட்டுக்கொடுத்து நடந்து கொண்டால் வேலைப்பளுவைக் குறைத் துக் கொள்ளலாம். தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு சற்று முன் னேற்றப் பலன்கள் உண்டாகும்.

**பரிகாரம்_**

சனிப் பிரீதி, ஆஞ்சநேயர் வழிபாடு மேற்கொள்வது நல்லது.



## வரலாற்றில் இன்றைய தினம்

## நாளை

**மாசி-28**

**ஞாயிற்றுக்கிழமை -12.03.2017**

**திதி: பூரணை மு.இ. 08.46**

**நட்சத்திரம்: பூரம் மா.06.00**

**சுபநேரம்:09.22-10.52 வரை**

**ராகுகாலம்:04.52-06.22 வரை**

**பூரணை விரதம்**

222 _ ரோமப் பேரரசர் இலகபலூஸ் அவரது தாயார் யூலியா சோமி யாஸ் உடன் படுகொலை செய்யப் பட்டார். இதனை பிறிற்ரோறியன் பாதுகாவலர் புரட்சி ஒன்றின்போது மேற்கொண்டு, ரோம் வீதிகளில் உடல்களை இழுத்துச் சென்று, தைபர் ஆற்றில் வீசினர்.

1702 _ இங்கிலாந்தின் முதலாவது தேசிய நாளிதழ் டெயிலி கூறன்ற் முதன் முதலாக பிர சுரிக்கப்பட்டது.

1784 _ மங்களூர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை யடுத்து, இரண்டாம் ஆங்கில _ மைசூர் போர் முடிவுக்கு வந்தது.

1824 _ அமெரிக்க போர்திணைக்களத்தால் இந்திய விவகாரக்குழு உருவாக்கப்பட்டது.

1903 _ காங்கேசன் _ சாவகச்சேரிக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

1918 _ ஸ்பானிஷ் புளூ காய்ச்சல் நோயாளி முதன் முதலாக இனங்காணப்பட்டார். இது உலகம் முழுவதும் அதி தீவிரமாகப் பரவியது.

1941 _ கூட்டு நாடுகளுக்கு கடன் - குத்தகை அடிப்ப டையில் ஆயுதம் வழங்கும் சட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் டி ருஸ்வெல்ட் ஒப்ப மிட்டார்.

1946 _ அஷ்விற்ச் வதைமுகாமுக்குப் பொறுப்பான றுடெல்ப் பெஹாஸ், பிரித்தானியப் படைகளால் கைது செய்யப்பட்டார்.

1988 _ தமிழர்களும் முஸ்லிம்களும் பயணித்த வவுனியா -திருமலை பேருந்தை மறித்து பய ணிகள் மீது சூடு, 17 பேர் சாவு 15 பேர் காயம்.

1990 _ பற்றிசியோ அல்வின், சிலியின் முதலாவது ஜனநாயகமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனா திபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண் டார்.

2002 _ அமெரிக்க தூதரக அறிக்கையில் போர் நிறுத்த உடன்படிக்கையை மதிக்கும்படி தமிழீழ விடுதலைப்புலிகளை கோருகிறது அமெரிக்கா.

2002 _ பூசா கைதிகள் ஒரு தொகுதி திடீரென களுத் துறைக்கு மாற்றம், தற்போது பூசாவில் 50 கைதி கள் மட்டுமே எனத் செய்திகள் தெரிவிப்பு.

2002 _ நாகர்கோவில் பகுதியில் புலிகளின் பொறுப் பாளர் பொலிஸாரால் கைது. பொறுப்பதிகாரி தலையிட்டு விடுவித்தார்.

2002 _ கிழக்கு ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகள் கடும் பதிலடி, 9 அமெரிக்கப்படைகள் சாவு.

2006 _ சிலியின் முதல் பெண் ஜனாதிபதியானார் மிச்செல் பாச்லெற்

2007 _ மனிதஉரிமைமீறல்களுக்கான பொறுப்பை அரசு ஏற்கவேண்டுமென பன்னாட்டு மன்னிப் புச்சபை சொல்கிறது.

2007 _ குறிகாட்டுவான் தலைமன்னார் கப்பல் சேவையை நடத்துமாறு ஆயர் தோமஸ் சவுந் தரநாயகம் ஜனாதிபதியிடம் கோரிக்கை.

2008 _ இலங்கைப் படைகளின் தமிழின அழிப்பு இந்திய மத்திய அரசே பொறுப்பேற்கவேண்டும். விடுதலைப்புலிகளின் குற்றச்சாட்டு.


2008 _ வெள்ளவத்தையில் தேடுதல்; சந்தேகத்தில் 15 தமிழர்கள் கைது.

2012 _ ஆப்கானிஸ்தான் பன்ஜாயி மாகாணத்தில், அமெரிக்க படைவீரரொருவரால், கந்தகாருக்கு அருகே 16 குடிமக்கள் படுகொலை செய்யப் பட்டனர்.

2016 _ சட்டமா அதிபரின் உறுதிமொழியையடுத்து கைதிகள் உணவு தவிர்ப்பைக் கைவிட்டனர்.

2016 _ கிழக்கு பல்கலை மாணவர்கள் மீது 50க்கு மேற்பட்ட சிங்கள மாணவர்களால், மருத்துவ பீடத்துள் வைத்து கடுமையான தாக்குதல்.

2016 _ தமிழரின் உரிமைக்காக உழைத்தவர் மங் கையர்க்கரசியென எதிர்க்கட்சித் தலைவர் சம் பந்தன் இரங்கல்.



## இருப்புச்சதையை குறைக்கும் கோணாசனம்

**பெண்களுக்கு இடுப்பில் இருக்கும் அதிகப்படியான சதையைக் குறைக்க இந்த ஆசனத்தைத் தினமும் செய்து வரலாம்.**

செய்முறை:

**விரிப்பில் நேராக நின்று கொண்டு கால்களை 2 அடி விரித்து வைக்கவும். கைகளைப் படத்தில் காட்டியபடி தலைக்கு மேலே தூக்கிக் கோத்துக் கொள்ள வேண்டும். முதலில் வலப்பக்கம் உடல் திரும்பாமல் வளைய வேண் டும். 20 எண்ணிக்கை ஆசன நிலையில் இருந்து பின் இடப் பக்கம் சாய வேண்டும். இவ் வாறு 5 முறை செய்யலாம்.**

பயன்கள்:

**விலா எலும்புகள் பலப்படும். கபநோய் நீங்கும். இடுப்பு வலிகள் குறையும். பெண்கள் இந்த ஆசனத்தைச் செய்வதால் இடுப்பு போன்ற இடங்களில் சதை ஏற்படுவதைத் தடுக்க லாம்.**

**வாடகைக்கு**
யாழ் நகர் கஸ்தூரியார் வீதியில் கடை வாடகைக்கு உண்டு.
**077 618 3283**

**பழைய ஓடு விற்பனைக்கு**
நல்லநிலையில்உள்ளபழையஓடுகள் விற்பனைக்குஉண்டு.
தொடர்புக்கு - 077 723 2535

**வாடகைக்கு**
நல்லூரில்சிறிய அனெக்ஸ் வாடகைக்கு உண்டு.
**- 011 236 2611**

**பெயர்மாற்றம்**

தொல்புரம் கிழக்கில் வசிக்கும் **இராசையா சாந்ததேவி**யாகிய நான் இன்று (11.03.2017) முதல் எனது பெயரை **இராசையா சாந்தரூபி** என்று மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்று அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.
**இராசையா சாந்தரூபி**

**இப்பொழுது திரையில்**




**MC** கொழும்பு 10.00/1.30/4.15/7.30
**MC** யாழ்ப்பாணம் 10.00/1.00/4.00/7.00
செல்லா யாழ்ப்பாணம் 10.30/2.30/6.30
கெப்பிடல் கொழும்பு 10.30/2.30/6.30
லிபடி-லைட் கொள்ளுபிடிய - 9.30pm
சினிஸ்டார் அநுராதபுரம் 6.30/9.30
G.K. கல்முனை -2.30/9.30pm
NIT - குருநாகல 9.30pm
NIT - இரத்தினபுரி 9.30pm
சினி வேல்ட் கொட்டஹேன 10.30/2.30/6.30pm
பாலா சாவகச்சேரி 10.30/2.30/6.30/ சனி. ஞாயிறு 9.30
றீகல் தியத்தலாவ 9.30pm
விஸ்டா லைட் ஜாஎல 9.30pm
ஸ்கை லைட் மாத்தறை 9.30pm
செல்லம் -செங்கலடி 10.00/2.30/6.30pm
தினுஷா நாவலப்பிடி 2.30pm/6.30pm
நியூ இந்ராணி வெளிமட - 9.30pm
வெளிங்டன் கந்தளாய் - 9.30pm.
எரினா கடுகஸ்தோட்ட 1.30pm
சந்திரா அவிசாவளை 4.15/9.30pm
நியூ ஜானகி மத்துகம 9.30pm
நெல்சன் திருகோணமலை 10.30/2.30/6.30/ சனி. ஞாயிறு 9.00pm
மின்னேறுவ கழுத்துறை - 7.30
வசந்தி வவுனியா 10.30/2.30/6.30pm
அர்ச்சனா அக்கறைப்பற்று 10.30/2.30/6.30/9.30
சீகிரி பண்டாரவளை 4.30/9.30
சாயா-கேகாலை 10.30/2.30pm
கொன்கோட் தெஹிவலை 10.30/ 1.30/ 4.30 / 7.00pm
குயின்ஸ்-காலி 9.30pm
ஜயபிம கம்பளை 7.00pm/9.30pm
வில்மெக்ஸ் அனுராதபுரம் 9.30pm
சமந்தா தெமடகொட 7.00 pm
சிநெஸ்போ குருநாகல - 9.30pm
ஜோதி -இரத்தினபுரி 9.30pm
சினிமெக்ஸ் ஜா-எல 9.30pm
ரீகல்- அம்பாறை 4.15 / 7.30pm
சினிஷ்னா நாவலபிடி 9.30pm
தர்ஷனா கொஸ்வடிட - 9.30pm
சினி சிட்டி மருதானை 10.30/2.30/6.30
லக்மாலி ராகல 10.30/2.30/6.30pm

## 231 கிலோ...

சாவகச்சேரி - மீசாலையில் வயல் காணியொன்றிலிருந்துநேற்றுமுன்தினம்இரவு 7.30 மணியளவில் 2 கோடி ரூபாபெறுமதியான 231 கிலோ கஞ்சாப் பொதி மூடைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் கைப்பற்றி இருந்தனர்.
முதற்தகவலின்படி மீட்கப்பட்ட கஞ்சா 150 கிலோகிராம் என்று நேற்றுமுன்தினம் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அதனை நிறுத்த போது 231 கிலோகிராம் என்பது தெரியவந்ததாகப் பொலிஸார் கூறினர்.
குறித்த பகுதியின் ஊடாகக் கஞ்சா கடத்தல் இடம்பெறுவதாகக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய உபபொலிஸ் பரிசோதகர் பத்திராஜ தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாண மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸின் ஆலோசனையுடன் முறியடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது கடத்தல்காரர்கள் மீசாலை கேணியடிப் பகுதியில் உள்ள வயல் பகுதி ஒன்றில் கஞ்சாவைப் போட்டுவிட்டு அங்கிருந்து தப்பித்து சென்றுள்ளனர். அவர்களைப் பிடிக்க முடியவில்லை.
குறித்த வயல் பகுதியில் மூடைகள் காணப்படுவதைக் கண்ட பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மூடைகளைப் பரிசோதித்தபோது கஞ்சா என்பது தெரியவந்தது.
பொலிஸாரின் விரைவான செயற்பாட்டினால் கஞ்சா கடத்தல் முறியடிக்கப்பட்டது. எனினும் எவரும் கைதுசெய்யப்படவில்லை. இந்தக் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். கைப் பற்றப்பட்ட கஞ்சாப் பொதிகள் யாழ்ப்பாணத்திலிருந்து வேறு மாவட்டங்களுக்குக் கடத்தப்படவிருந்தனவா? அல்லது வேறு மாவட்டத்திலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டனவா என்பது தொடர்பில் விசாரணை இடம்பெறுகிறது என்று பொலிஸார் கூறினர்.
(து-4-89-106)

சிவமயம்



**உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்**
உசன் - மிருசுவில்
**மூலமந்திர ஜபயக்ஞ ஸ்கந்த ஹோம பெருவிழா**

**ஆரம்பம்**
**08.03.2017**
**புதன்கிழமை**

**ஸ்கந்தஹோமம்**
**12.03.2017**
**ஞாயிற்றுக்கிழமை**
**காலை 8 மணிக்கு**

**அருள் வாக்குச்சித்தர் குகஸ்ரீ இரத்தின கேதீஸ்வர சுவாமிகள்**
**(பிரதம குரு உசன் கந்தசுவாமி கோயில்)**
**தலைமையில் பல சிவாச்சாரியார்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.**

குறிப்பு - அன்றைய தினம் இல.769 வழி இ.போ.ச பஸ் மற்றும் தனியார் சிற்றூர்திச்சேவை யாழ்ப்பாணம் - உசன் - யாழ்ப்பாணம் இடம்பெறும்.

*மதியம் ஒரு மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.


**V.M.K. நகையகம்** 80/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2515
**V.M.K** கண்டி வீதி, சாவகச்சேரி. 021 227 1616

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 10.03.2017 | வெற்றி வாரம் 2106 | வர்ணம் சிவப்பு
கன்னி
வெற்றி இலக்கங்கள்
**09 21 28 41**
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 12, 530, 457/=
2017.03.12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 .Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 110
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 10.03.2017
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 78,825,076/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
**U 42 51 54 66**
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சீட்டிழுப்பு வாரம்: 547 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி 10.03.2017
வெற்றி இலக்கங்கள்
**17 32 34 52 F**
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 23,722,275/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

**கண்ணீர் அஞ்சலி**




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் கல்வியியல் முதுமாணி அணி (XII,"A") இன் மாணவியும் எமது ஆசிரிய நண்பியுமான **திருமதி சிவாணி கேதீஸ்வரன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**வைத்திலிங்கம் நடராசா**

அவர்கள் 10.03.2017 இறைபதம் அடைந்து விட்டார் அன்னாரின் மறைவையொட்டி துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய நண்பர்கள் கல்வியியல் முதுமாணி அணி XII**

**துயர் பகிர்கின்றோம்**



எமது பாடசாலையின் அதிபர்
**திரு. ஸ்.நிலோஜ்குமார்**
அவர்களின் தந்தையார்
**அந்தோனிப்பிள்ளை**
**ஸ்ரனிஸ்லஸ்(செல்வநாயகம்)**
அவர்களின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் செபங்களை காணிக்கையாக்குகின்றோம்.
**ஆசிரியர்கள், மாணவர்கள்**
**யா/சென் ஜோசப்ஸ் வித்தியாலயம்,**
**கொழும்புத்துறை.**

## மேலும் 225...

இவ்வாறு காங்கேசன்துறை சிமெந்து ஆலைக்கு அருகில் உள்ள இந்த நல்லிணக்கபுர நிலத்தில் 116 வீடுகள் அமைத்து வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 83 வீடுகள் அமைத்து வழங்கப்பட்டன. ஏனைய 33 வீடுகளும் இன்று (நேற்று) உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.
இவ்வாறு கையளிக்கப்பட்ட வீடுகள் ஒவ்வொன்றும் 20 பேர்ச் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. மீள்குடியேற்ற அமைச்சின் 9.5 லட்சம் ரூபா பணத்துக்கான பொருள்கள் இராணுவத்தினரிடம் வழங்கப்பட்டு அவர்களது மனிதக் கூலியில் அமைக்கப்பட்ட வீடுகளே இவ்வாறு கையளிக்கப்பட்டன. இவ்வாறு வழங்கப்படும் வீடுகளும் காணியும் இணைந்து 2 மில்லியனுக்கும் அதிக பெறுமதி கொண்டவையாகக் காணப்படுகின்றன. கட்டப்பட்ட 33 வீடுகளில் 5 வீடுகள் கடந்த 4 ஆம் திகதி அரச தலைவரால் வழங்கப்பட்டிருந்தன. எஞ்சிய 28 வீடுகள் தற்போது கையளிக்கப்பட்டன- என்றார். (து-4-26-101)

## அர்ஜுன...

அர்ஜுன மகேந்திரனிடம் நேற்று வாக்குமூலத்தைப்பெற்றது. நேற்றுமுற்பகல் 9.30மணியளவில் ஆணைக் குழுவிடம் முன்னிலையான அர்ஜுன மகேந் திரனிடம் மதியம் 12.30 வரை அதாவது மூன்று மணித்தியாலங்கள் விசாரணை நடத்தப்பட்டது.
கடந்த 2015ஆம் ஆண்டு மைத்திரி-ரணில் தலைமையிலான கூட்டு அரசு ஆட்சிக்குவந்து ஒரு மாதகாலத்துக்குள் மத்திய வங்கியின் பிணைமுறி விநியோகத்தில் மோசடி இடம் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.
பின்னர் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற கோப் குழு தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அப்போது கோப் குழுவின் தலைவராக மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் டியூ. குணசேகர நியமிக்கப் பட்டிருந்தார்.
எனினும், கோப் அறிக்கை சமர்ப்பிக்கப்படவிருந்த முதல் நாள் நாடாளுமன்றம் கலைக்கப் பட்டது. அதன் பின்னர் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையிலான கோப் குழு நியமிக்கப்பட்டு ஆராயப்பட்டது. இந்தக் குழுவின் அறிக்கை சமர்ப்பிப்பதில் மத்திய வங்கியில் பிணைமுறி விநியோகத்தின்போது ஊழல் இடம்பெற்றுள்ளமை உறுதி எனச் சுட்டிக்காட்டப்பட்டது.
ஆனால், கடந்த மாதம் வரை அரசு இந்த விடயத்தில் ஆணித்தரமான முடிவுகள் ஏதும் எடுக்காமல் இருந்தமையால் ஆணைக்குழுவை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நியமித்திருந்தார். குறித்த குழுவே நேற்று அர்ஜுன மகேந்திரனிடம் விசாரணைகளை மேற்கொண்டு வாக்குமூலத்தைப் பதிந்துள்ளது.
இந்த ஆணைக்குழு கடந்த 8ஆம் திகதி அர்ஜுன மகேந்திரனை நேற்று விசாரணைகளுக்காக முற்படுமாறு பணிப்புரை விடுத்திருந்தது.
மூன்று மணித்தியாலய விசாரணைகளின் பின்னர் அர்ஜுன மகேந்திரன் அங்கிருந்து வெளியேறியிருந்தார். இந்த ஆணைக்குழு எதிர்வரும் திங்கட்கிழமை மீண்டும் ஒன்று கூடவுள்ளது. (து-4)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



**அமரர் சுகிர்தா அழகரட்ணம்**

கடந்த 09.02.2017 வியாழக்கிழமையன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி சுகிர்தா அழகரட்ணம் அவர்களின் மறைவு கேட்டு வெளிநாட்டில் இருந்தும் உள்ளூரில் இருந்தும் தொலைபேசியிலும் நேரிலும் அனுதாபங்களை தெரிவித்தும் கண்ணீர் அஞ்சலிகள், பதாகைகள் மூலம், அஞ்சலி செலுத்தியும் எமக்கு ஆறுதல் செய்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது இதயம் கனிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.03.2017) சனிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அதனைத் தொடர்ந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் இடம்பெறும். என்பதனை அறியத்தருகின்றோம். **தனிப்பட்ட அழைப்பிதழ்கிடைக்காதவர்கள் இந்த அழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**15/3, புது வீதி,**
**கொய்யாத்தோட்டம்,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

## மகளிர் தின நிகழ்வுகள் கிளிநொச்சியில் இன்று

கிளிநொச்சி நீள்விழி பெண்கள் அமையத்தின் ஏற்பாட்டில் பன்னாட்டு மகளிர் நாள் நிகழ்வுகள் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பன்னாட்டு பெண்கள் நாளை முன்னிட்டு பெண்கள் உரிமைகளை வலியுறுத்தும் நோக்கோடு "வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுப் பெண்களின் வாழ்வியல்" எனும் தொனிப் பொருளை வலியுறுத்தி "பெண்ணை மிதித் தவர் கண்ணைத் திறந்திடும் காலத்தை உருவாக்க அணிதிரள்வோம்" என்பதை முதன்மைப்படுத்தி கிளிநொச்சி நீள்விழி பெண்கள் அமையத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. கிராம மட்டப் பெண்கள் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், மனித உரிமை செயற் பாட்டாளர்கள், அரசியல் பிரமுகர்கள், கல்விச் சமூகத்தினர் என அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (வ-426)

*85 இந்திய...*

நோக்கில் இலங்கை-இந்திய அரசுகளுக்கு இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் அடிப்படையில் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள85 இந்திய மீனவர்களும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களில் ஊர்காவற்றுறை நீதவானின் உத்தரவின் பேரில் யாழ்ப்பாணச் சிறையில் வைக்கப்பட்டிருந்த 53 மீனவர்களும், மன்னார் நீதிமன்றின் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 24 மீனவர்களும், திருகோணமலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 மீனவர்களும் அடங்குவர்.

இவர்கள் நேற்று இந்தியத் தூதரகத்திடம் கையளிக்கப்பட்டனர். நாளை மறுதினம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-101)

*மாகாணங்களுக்கு...*

பொலிஸ்மா அதிபர்களின் கீழ் இந்த அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் மகிந்த தரப்பைச் சேர்ந்த கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனக ஹேரத் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

எந்தப் பிரிவினைவாதத்துக்கு எதிராக எமது படையினர் போராடினார்களோ அந்தப் பிரிவினைவாதத்தை ஆதரிக்கும்அதற்கு அடிபணியும் ஓர் அரசுதான் நல்லாட்சி என்று சொல்லப்படும் இந்த அரசு.

எமது படையினர் ஆயிரக்கணக்கில் உயிர்களைத் தியாகம் செய்து புலிகளிடமிருந்து மீட்டெடுத்த இந்த நாட்டை மிக இலகுவாக மீண்டும் புலிகளிடமே ஒப்படைக்கப் பாக்கின்றது.நாட்டில் மூன்றில் ஒரு பகுதி நிலத்தைப் புலிகள் 30 வருடங்களாகக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.அந்த இடங்களைச் சொற்ப காலத்துக்குள் புலி ஆதரவாளர்களிடம் கொடுப் பதற்கு அரசு திட்டமிடுகின்றது.

நாட்டை மீட்டெடுத்த படையினரை இந்த அரசு அவமதிக்கின்றது. அவர்களுக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கிப் படையினரைக் காட்டிக் கொடுத்துவிட்டது. இந்த முறை இடம்பெறும் ஜெனிவா மாநாட்டிலாவது அந்தப் பிரேரணையை ரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. அதை மேலும் பலப்படுத்தும் வேலையையே செய்கிறது.

புலிகளின் இலக்கான தமிழீழத்தை அமைப்பதற்கு ஏதுவாக காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது. பிரதிப் பொலிஸ்மா அதிபர்களின் கீழ் இந்த பொலிஸ் அதிகாரம் வழங்கப்படும்.பொலிஸ்மா அதிபர் அதிகாரமற்ற பேரளவிலான ஓர் அதிபராக மாற்றப்படுவார். அரசின் இந்தச் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்துவதற்கு நாம் இன்றே களமிறங்க வேண்டும்- என்றார். (த-3)

*ட்ராக்ட...*

தெரிவித்தனர்.

சாலைச் சீர மைப்புப் பணியினை மேற்கொண்டு வரும் தம்மிகா ரத்நாயக்க (வயது 43) என்ற 3 பிள்ளைகளின் தாயாரே விபத்தில் உயிரிழந்தார்.

சாலைச் சீரமைப்பு வேலைகளில் அவர் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். எதிர்பாராமல் வேலை செய்து கொண்டிருந்த உழவு இயந்திரம் சாலையில் பணி மேற்கொண்டிருந்த குறித்த பெண்ணின் மீது மோதியது. சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

விபத்தையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் உழவு இயந்திரத்தின் சாரதியைக் கைது செய்தனர். ஆரம்பகட்ட விசாரணையின்போது உழவு இயந்திரத்தின் பிரேக் பிடிக்காததினால் விபத்து ஏற்பட்டது என்று கண்டறியப்பட்டது. மேலதிக விசாரணைகளை போகஸ்வாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


(வ-21)

*மக்களின்...*

அமைய 4.5 மில்லியன் ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தத் துறைமுக மும் கடற்படையினரின் உதவியுடன் விரைவில் புனரமைக்கப்படவுள்ளது என்றார். (த-101)

## மரண அறிவித்தல்கள்

### வில்பிறட் மகேந்திரன்



பிறப்பு. 28.12.1950
இறப்பு.10.03.2017

குருசோ வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வில்பிறட் மகேந்திரன் நேற்று (10.03.2017) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்


218, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்

J.றொபேட் 077 302 4445
ஷாம் 077 315 1175

## மரண அறிவித்தல்

### Lord வைத்திலிங்கம் நடராசா

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தி யோகத்தர்)



காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும், இல.43, பலாலி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட Lord வைத்திலிங்கம் நடராசா (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தி யோகத்தர்) நேற்று (10.03.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Lord வைத்திலிங்கம் - மீனாட்சி தம்பதியரின் அன்புமகனும் காலஞ் சென்றவள்ளியம்மையின்பெறா மகனும் சற்குணேஸ்வரி (பவானி) யின் அன்புக்கணவரும் காலஞ் சென்றவர்களான அரியரத்தினம் - ரத்தினம் தம்பதியரின் மருமகனும் மாணிக்கவாசகர், பாலரட்டிண சிங்கம், சரஸ்வதி, மகேஸ்வரி, சண்முகவடிவேல், நாகேஸ்வரி, விக்கினேஸ்வரி ஆகி யோரின் அன்புச்சகோதரனும் உமாசுகி (வைத்தியர், ஆஸ்திரேலியா), சிவானி (ஆசிரியர்), தாரணி (இலங்கை வங்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கேதீஸ்வரன் (ஆசிரியர்), காண்டீபன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற ராசலெட்சுமி மற்றும் அருளானந்தம் (கனடா), சத்தியபாமா (கிளி), இந்திரன் (கனடா), யோகேஸ்வரன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் புரகீசனின் அன்புப்பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

43, பலாலி வீதி,
கந்தர்மடம்

குடும்பத்தினர். 077 653 0037



### குழந்தைவேல் வரதகுலசிங்கம் (வரதன்)

(ஓய்வுபெற்ற இலங்கை போக்குவரத்து சாலைப் பரிசோதகர்)

நீர்வேலி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட குழந்தைவேல் வரதகுலசிங்கம் (வரதன்) நேற்று (10.03.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான குழந்தைவேல் இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராசமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அரவிந்தன் மற்றும் சஞ்சயன் (பிரான்ஸ்), அகல்ஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தனுசா (ராசாத்தி), ஜனனி ஆகியோரின் அன்பு மாமனும் இராசலட்சுமி, புனிதவதி, குணவதி, சரஸ்வதி, தங்கேஸ்வரி, உலகேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இஷான், சயோன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

மனைவி, பிள்ளைகள்
021 491 6458

## மரண அறிவித்தல்

### செல்லப்பா விநாசித்தம்பி



உதிப்பு.20.06.1934
உதிர்வு.10.03.2017

இராமாவில் மீசாலை வடக்கை பிறப்பிடமாகவும் புளியம்பொக் கணையை வதிவிடமாகவும் தற்போது மீசாலை வடக்கில் வசித்தவரு மாகிய செல்லப்பா விநாசித்தம்பி நேற்று (10.03.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான கந்தையா - சின்னக் குட்டி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான நாமுத்து வள்ளிமுத்து கந்தையா ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற அன்னப் பிள்ளையின் அன்புக் கணவரும் சிவதவ நாயகி (மட்டுவில்), சிவயோகலிங்கம் (லண்டன்), கணேசலிங்கம் கோகுலவாணி பரமலிங்கம் புஸ்பராணி (ஆசிரியையா / மீசாலை விக்னேஸ்வராம.வி), ஆகியோரின் பாசமிகுதந்தையும் யோகநாதன் (மட்டுவில்), றஜனி (லண்டன்), யோகேஸ்வரி காலஞ்சென்ற யோ கேஸ்வரன் மற்றும் தவராணி நாகசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கஸ்தூரி சார்மினி வசந்தா வானுஜா தர்சன் பிருந்தா கம்சனா அபிராமி (லண்டன்) அபிஷன் (லண்டன்) விதுரன் ஜதுர்னன் பத்மாவதி சகானன் கிஷானா புகழ்யா லவன் கவிப்பிரியன், சோபிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் தேனுஜன், ஹர்ணிகா, டனிஹர்சன், அக்சயா, அகுரத் ஆகியோரின் அன்புபூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். தகவல்

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.
0770344370

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் கருணாகரன்



தோற்றம் 02.11.1967
மறைவு 08.03.2017

மீசாலை மேற்கு, கார்த்திகேசு வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கருணாகரன் கடந்த (08.03.2017) புதன்கிழமை காலமாகி விட்டார்

அன்னார் நாகலிங்கம் சோமசுந்தரம் காலஞ்சென்ற சோமசுந்தரம் சின்னாச்சி தம்பதியரின் அன்புபுதல்வனும் கருணா கரன் சுகந்தா வின் அன்புக்கணவரும் மனோகரன், சிறிகரன், சிறிமதி, சிவமதி (சுவிஸ்), ரவீந்திரன், கலைமதி (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் தெய் வேந்திரராசா (கனடா), விநாயகமூர்த்தி (கனடா), பாஸ்கரன் (இந்தியா), மதன் (கனடா), சுபாஜினி (லண்டன்), சுதர்ஜினி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் நடராசா - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு,
கார்த்திகேசு வீதி.

தகவல்
குடும்பத்தினர்.

## இலங்கை...

ஏற்றுக்கொள்ளச் செய்வது எப்போதும் கடினமான விடயம் எனவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

நாங்கள் இலங்கை அரசதலைவர் மீது மிகுந்த நம்பிக்கை வைத்தோம். அவர் எங்களை மோசமாக ஏமாற்றிவிட்டார் எனத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன். "நாங்கள் அவரிடம் சலுகைகளைக் கோரவில்லை. எங்களுக்குத் தேவையானது நீதி மாத்திரமே எனவும் அவர் குறிப்பிட்டார். அரச தலைவர் உரிய நடவடிக்கைகளை எடுக்காததன் காரணமாக ஏமாற்றமடைந்துள்ள தமிழர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிடம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை கண்டிக்குமாறு வலியுறுத்தி வருகின்றனர்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வில் இலங்கைக்குக் கடும் சோதனை காத்திருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரச தலைவர் சீர்திருத்தங்களுக்கே ஆணை கோரினார். அவர் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றாதது குறித்து ஏமாற்றமடைகின்றோம் என்கிறார் இலங்கையின் சிவில் சமூகப் பிரதிநிதி சரத் விஜயசூர்ய. (த-4)

## மகிந்த...

விளக்கத்தையும் முன்வைத்தனர்.

இதற்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கடும் ஆட்சேபனை வெளியிட்டதுடன், சபை நடவடிக்கைகளைக் குழப்பியடிக்கும் நோக்கில் செயற்படும் மகிந்த ஆதரவு அணிக்கு அதிக நேரம் வழங்கப்பட்டதற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிச் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இதன்போது, ஆளும் பொது எதிரணி உறுப்பினர்களுக்கிடையில் கடும் அமளி துமளி ஏற்பட்டதால் நாடாளுமன்றஅமர்வுகளை எதிர்வரும் 21ஆம் திகதிவரை ஒத்திவைத்தார் சபாநாயகர் கருஜயசூரிய.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத்தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று, 23/2இன் கீழான சிறப்பு அறிவிப்பு ஆகியன முடிவடைந்த பின்னர், கடந்த இரண்டு நாள்கள்போல் நேற்றைய தினமும் மகிந்த ஆதரவு அணி சர்ச்சையைக் கிளப்பியது.

விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியை நாடாளுமன்றத்தில் தனிக்கட்சியாக அங்கீகரிக்க முடியாது என்றும், தினேஷ் குணவர்தனவுக்குப் பதிலாக அந்த இடத்துக்கு டலஸ் அழகப்பெருமவை நியமிப்பது குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்றக்குழுத் தலைவரான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் பேச்சு நடத்தப்பட்ட வேண்டும் என்றும் சபாநாயகர் வழங்கிய தீர்ப்பு சம்பந்தமாக முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச, கெஹலிய ரம்புக்வெல ஆகியோர் விரிவான கருத்துகளை முன்வைத்தனர்.

விமல் வீரவன்ஸ, டலஸ் அழகப்பெரும ஆகியோர் தமதுரையின்போது ஐக்கிய தேசியக் கட்சியையும், அரசிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களையும் தாக்கிப் பேசினர். சபாநாயகரின் தீர்ப்புத் தவறானது என்பதை எடுத்துரைப்பதற்காக பழமொழிகளையும், கடந்தகால சம்பவங்களையும் எடுத்தியம்பி ஆவேசமாக உரையாற்றினர்.

இதனால், ஆளுங்கட்சியின் பிரதான பங்காளிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் கொதித்தெழுந்தனர்.

"சபாநாயகர் வழங்கிய தீர்ப்போடு இந்தப் பிரச்சினை முடிவடைந்துவிட்டது. மீண்டும் மீண்டும் அதுபற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. சபையின் தினப்பணிகள் தாமதமடைகின்றன. நாளாந்தம் குழப்பியடிக்கும் பணியிலேயே மகிந்த ஆதரவு எதிரணியினர் ஈடுபடுகின்றனர். முதல் ஒன்றரை மணிநேரத்தை இவர்களுக்காகவே செலவழிக்க வேண்டியுள்ளது. எனினும், சபாநாயகர் இவர்களுக்கு நேரம் வழங்குகின்றார். இதை ஏற்கமுடியாது" என்று திட்டவட்டமாக அறிவித்தார் சபை முதல்வரான அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல.

"அவ்வாறு இல்லை. தீர்ப்புக் குறித்து விளக்கமளிப்பதற்கு நேரம் வழங்கப்படும் என்ற மகிந்த ஆதரவு அணி உறுப்பினர்களுக்கு உறுதியளிக்கப்பட்டது. அதற்குரிய சந்தர்ப்பமே வழங்கப்பட்டுள்ளது. எனவே, நான் நியாயமாகவும், நடுநிலையாகவுமே செயற்படுகின்றேன்" என்று சபை முதல்வருக்குச் சபாநாயகர் விளக்கமளித்தார்.

எனினும், "பொது எதிரணிக்குக் கூடுதல் நேரம் வழங்கப்படுவதற்கு எதிர்ப்பு வெளியிட்டு சபையிலிருந்து வெளியேறுகின்றோம்" எனக் கூறிவிட்டு வெளிநடப்புச் செய்தார் சபை முதல்வரான அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல.

ஆளுங்கட்சியின் முதன்மைக் கொறடாவான அமைச்சர் கயந்த கருணாதிலக, அமைச்சர் கபீர் ஹாசீம் உள்ளிட்ட அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெளியேறினர்.

ஆளும் தரப்பு வெளிநடப்புச் செய்யும்போது, மகிந்த ஆதரவு அணி உறுப்பினர்கள் எழுந்து நின்று கூச்சலிட்டனர். இதனால் சர்ச்சை நிலை உருவானது. இதையடுத்து சபை அமர்வுகளை எதிர்வரும் 21ஆம் திகதிவரை ஒத்திவைத்தார் சபாநாயகர்.

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் ஆளுந்தரப்பு சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தமை இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

## பிரிட்டனில்...

உடனடியாக நடைமுறைக்கு வரலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அகதியொருவருக்கு அவர் வெளியேறுவதற்கான ஆரம்பகால அவகாசத்தை வழங்கும் சட்டமே 2005 முதல் நடைமுறையில் காணப்படுகின்றது. குறிப்பிட்ட கால எல்லை முடிவடைந்தவுடன் குறிப்பிட்ட நபர் விண்ணப்பித்தால் அவருக்கு நிரந்தரமாகத் தங்கியிருப்பதற்கான அனுமதி இதுவரை வழங்கப்பட்டுவந்தது. இந்த நிலையிலேயே பிரிட்டன் தலைமை அமைச்சர் தெரேசா மேயின் அரசின் புதிய உத்தரவு வெளியாகியுள்ளது.

இந்த உத்தரவு காரணமாக கடந்த ஐந்து வருடங்களில் பாதுகாப்பு வழங்கப்பட்ட அகதிகள் தங்கள் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவது குறித்த ஆய்வை எதிர்கொள்ளவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

பிரிட்டனில் தஞ்சம் கோரி ஐந்து வருடங்கள் முடிவடைந்த பின்னர் அங்கு நிரந்தரமாகத் தங்கியிருப்பதற்காக விண்ணப்பிக்கும் அகதிகள் அனைவரும் இந்த ஆய்வுக்குத் தங்களை உட்படுத்தவேண்டியிருக்கும் என்று பிரிட்டனின் உள்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது. இதற்கு விண்ணப்பிக்கத் தவறுபவர்கள் காலம் முடிவடைந்த பின்னரும் தங்கியிருப்பவர்களாகக் கருதப்படுவர். அவர்கள் பிரிட்டனில் தொழில்புரிவதற்கோ அல்லது சலுகைகள் பெறுவதற்கோ அனுமதிக்கப்படமாட்டார்கள். நாட்டிலிருந்து திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் உள்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட உத்தரவு மார்ச் 9ஆம் திகதியே பதிவேற்றப்பட்டதாகத் தெரிவித்துள்ள உள்துறை அலுவலகம் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டவர்களுக்கு அங்கு நிரந்தரமாகத் தங்குவதற்கான விண்ணப்பத்தைப் பரிசீலிக்கும்போது பாதுகாப்பாகத் திருப்பி அனுப்பும் உத்தரவை புதிய பிரிவில் இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரி வித்துள்ளது. அகதிகளின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகள் பிரகடனம் மற்றும் ஐரோப்பிய சட்டத்தின் கீழ் எங்களுக்கு உள்ள பன்னாட்டுக் கடப்பாட்டை நிறைவேற்றவே உத்தரவைப் பிறப்பித்துள்ளோம். இதன்கீழ் நாங்கள் எங்கள் பாதுகாப்பை நாடுபவர்களுக்கு அகதிகள் அந்தஸ்தை வழங்குவதுடன் அவர்கள் வெளியேறுவதற்கான பொருத்தமான கால அவகாசத்தையும் வழங்கவேண்டியுள்ளது எனவும் உள்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு தேவைப்படும்வரை அதனை வழங்குவதற்காகவே பாதுகாப்பாகத் திரும்புவது குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. அதேவேளை, பாதுகாப்பு தேவைப்படாதவர்கள் பிரிட்டனில் தங்கியிருப்பதற்காக விண்ணப்பிக்கும்போது வேறு காரணங்களை முன்வைக்கவேண்டும் அல்லது இங்கிருந்து வெளியேற வேண்டும் எனவும் உள்துறை அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இந்தப் புதிய கொள்கைக்கு அகதிகள் பேரவை கடும் எதிர்ப்பை உடனடியாக வெளியிட்டுள்ளது. இந்தக் கொள்கை தங்களுக்குப் பாதுகாப்பில்லை என்பதை உரிய விதத்தில் நிரூபித்துள்ள அகதிகள் தங்கள் வாழ்வை மீளக் கட்டியெழுப்ப முடியாத நிலையை இந்தச் சட்டம் உருவாக்கும். அதேவேளை, தாங்கள் எப்போதும் திருப்பி அனுப்பப்படலாம் என்ற அச்சத்துடன் அவர்கள் வாழும் நிலையை ஏற்படுத்தும் என அகதிகள் பேரவை குறிப்பிட்டுள்ளது.

குறிப்பிட்ட சட்டம் பிரிட்டனில் உள்ள அகதிகளின் நிலையை அச்சுறுத்துகின்றது. அகதிகள் மேலும் ஐந்து வருடங்களுக்கு நிச்சயமற்ற நிலையில் வாழும் நிலையை ஏற்படுத்துகின்றது எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (4)

## பொது எதிரணிக்கு...

சபை அமர்வுகளில் பங்கேற்பதற்கு ஒருவார காலம் தடைவிதிக்கப்பட்டுள்ளதால் பதில் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவை நியமிக்குமாறு மகிந்த அணி சபாநாயகரிடம் கடிதம் மூலம் கோரியது. எனினும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் பேசிய பின்னரே முடிவு அறிவிக்கப்படும் என்று சபாநாயகர் பதில் அளித்தார்.

அத்துடன், தேசிய சுதந்திர முன்னணியை தனிக் கட்சியாக அங்கீகரிக்க முடியாது என்றும் அவர் தீர்ப்பளித்திருந்தார். இவை தொடர்பில் தமது தரப்பு விளக்கத்தை முன்வைப்பதற்கு மகிந்த அணிநேரம் கோரியிருந்தது.

நேற்றைய சபை அமர்வின்போது அதற்குரிய நேரம் வழங்கப்பட்டது. முதலில் கருத்து வெளியிட்ட முன்னாள் சபாநாயகரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான சமல் ராஜபக்ச,

"கடந்த இரண்டு நாள்களாகச் சபையில் இடம்பெற்ற சம்பவங்கள் கவலையளிக்கும் வகையில் உள்ளன. உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிரணி உறுப்பினர்களைவிட, பொது எதிரணி பக்கமே கூடுதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். நானும் அந்த அணியிலேயே இருக்கின்றேன். எனவே, இந்தப்பிரச்சினையில் தலையிட்டுத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய கடப்பாடு எனக்கிருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பல கட்சிகள் உள்ளன. கூட்டு அரசில் இணைவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சிஆதரவைத் தெரிவித்திருந்தாலும் ஏனைய பங்காளிக் கட்சிகள் அந்த முடிவை ஆதரிக்கவில்லை. கூட்டணியில் இணைந்து போட்டியிட்டாலும் அந்தக் கட்சிகளுக்கென கொள்கை, கோட்பாடுகள் இருக்கின்றன. எனவே, அந்தக் கட்சிகளின் கோரிக்கைகளுக்கும் சபாநாயகராகிய நீங்கள் செவிமடுக்கவேண்டும். அவ்வாறு செயற்பட்டால் இந்தச் சபையை அமைதியாக உங்களால் வழிநடத்தக்கூடியதாக இருக்கும். எனவே, பொது எதிரணி உறுப்பினர்களுக்கு நாட்டு மக்களுக்காக பேசுவதற்கு உரிய நேரத்தையும், ஏனைய சிறப்புரிமைகளை வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்"என்றார்.

அதன்பின்னர் கருத்துவெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படும் சந்தர்ப்பங்கள் தமது அணிக்கும் தேவையென வாதிட்டார்.

23/2 இன கீழ் அறிவிப்பு விடுப்பதற்கும், சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை கொண்டு வருவதற்கும், விவாதங்களின்போது கூடுதல் நேரம் பெறுவதற்கும் இந்த அங்கீகாரம் அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"ஐக்கிய தேசியக் கட்சிக்கு அடுத்தபடியாக பொது எதிரணி பக்கமே 51நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். ஆனாலும், எமக்கு விவாதங்களின்போது உரிய நேரம் ஒதுக்கப்படுவதில்லை. இது ஜனநாயகம் மிக்க செயற்பாடா?

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு 2 வருடங்கள் ஆகின்றன. ஜெனிவாவில் சர்வஜன வாக்கெடுப்புப் பற்றிப் பேசப்படுகின்றது. இவை தொடர்பில் விவாதிப்பதற்கு இந்தச் சபையில் யார் இருக்கின்றார்கள்? எனவே, நீங்கள் (சபாநாயகர்) வழங்கிய தீர்ப்பு நியாயமானதா? ஜனநாயகம்மிக்கதா எனக் கேட்க விரும்புகின்றேன்" என்று தெரிவித்தார் டலஸ் அழகப்பெரும.

அத்துடன், கிளி கூண்டில் இருக்கவேண்டும், குரங்கு மரத்தில் இருக்கவேண்டும். ஆனால், இங்கு கிளி மரத்தில் இருக்கின்றது. குரங்கு கூண்டில் இருக்கின்றது எனக் குறிப்பிட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. மீது விமர்சனமும் முன்வைத்தார்.

அதன்பின்னர் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ,

"நாட்டிலுள்ள முக்கிய பிரச்சினைகள் குறித்து குரல் எழுப்புவதற்கு எதிர்க்கட்சியொன்று இல்லை. அரசின் பங்காளிக் கட்சிகளாகச் செயற்படும் எதிர்க்கட்சிகளே இருக்கின்றன. இவைகள் மக்கள் பற்றிப் பேசுவதில்லை. 48 இலட்சம் மக்களுக்காக நாமே குரல் கொடுத்து வருகின்றோம். எனவே, பொது எதிரணிக்குரிய அங்கீகாரம் அவசியம். அதற்குரிய தீர்மானத்தை நீங்கள் எடுக்கவேண்டும். வேறு எவரினதும் உத்தரவுக்காகக் காத்திருக்க வேண்டியதில்லை. எமது அணிக்குரிய அங்கீகாரத்தை வழங்காவிட்டால், உரிய வகையில் சபை நடவடிக்கையைக் கொண்டுசெல்ல முடியாத நிலை ஏற்படும்" - என்றார். (த-4)

## பேஸ்புக்...

குப் பொறுப்புக்கூற முடியாது. எனினும், முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் அவை தொடர்பில் விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்றின்போது, மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினரான பத்ம உதயசாந்த குணசேகர, 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் விடுதலைப் புலிகளால் யாழ். மாவட்டத்தில் கொலை செய்யப்பட்டவர்களின் விவரங்களைக் கோரியிருந்தார்.

இதற்குப் பதில் வழங்கிய சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க,

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்கள் பெரிதாகச் செயற்பாட்டில் இருக்கவில்லை. கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய யாழ்ப்பாண மாவட்டத்தில் 384 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், அதில் 192 சிங்களவர்களும், 191 தமிழர்களும், ஒரு முஸ்லிமும் அடங்குவர். அவற்றுள் 6 தமிழ் அரசியல் தலைவர்களும், 213 அரச ஊழியர்களும் அடங்குகின்றனர். இதேவேளை, பொலிஸ் நிலையங்களில் பதிவாகியுள்ள முறைப்பாடுகள் சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை கோரப்பட்டுள்ளது. இதனை நாங்கள் தயாரித்து 2 மாதங்களில் வழங்குகின்றோம் என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பத்ம உதயசாந்த, தனது மேலதிகக் கேள்வி நேரத்தில், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு மீண்டும் உயிரூட்டுவதற்குச் சில இணையத்தளங்களிலும், சமூக வலைத் தளங்களிலும் தகவல்கள் பரப்பப்பட்டுள்ளன எனவும், அதற்கான ஆதாரங்களை முன்வைத்து இவை தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் எனவும், எனவே, இவற்றுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன எனவும் தெரிவித்தார்.

"இவர் நேற்று (நேற்று முன்தினம்) இது சம்பந்தமாக முன்வைத்த தகவல்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு குறிப்பிட்டுள்ளேன். முகநூல்களில் பதிவிறக்கம் செய்யப்படும் தகவல்கள் பொறுப்புடன் செய்யப்படுபவை அல்ல. சரியானவை அல்ல. முகநூலில் சரியான தகவல்களை வழங்கும் பக்கங்களும் உள்ளன. அவற்றுக்கு நீல நிற குறியீடு வழங்கப்பட்டுள்ளது. அந்தக் குறியீடு இருந்தால் மாத்திரமே முகநூல் நிறுவனமும் பொறுப்புக் கூறுகின்றது. இன்று (நேற்று) சபையில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் சம்பந்தமாக நாங்கள் கவனம் செலுத்தி ஆராய்வோம்" - என்றார். (த-4)

## விபத்தில்...

புளியங்கூடலைச் சேர்ந்த விஜயரூபன் சர்மிளா (வயது -32) என்ற இரு பிள்ளைகளின் தாயாரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

யாழ். நகரில் இருந்து புளியங்கூடல் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவேளை மண்கும்பான் பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்தின் பின்பகுதியில் அது மோதுண்டுள்ளது. இதன்போது மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் இருந்து பயணித்த பெண் வீதியில் வீழ்ந்துள்ளார்.

அந்த நேரத்தில் வீதியின் எதிர்த் திசையில் பயணித்த காரின் சில்லில் சிக்கி அவர் நசியுண்டு படுகாயமடைந்தார். இவ்வாறு காரில் மோதுண்டவரை அதே காரில் ஏற்றிச் சென்று ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் சேர்த்துவிட்டுச் சாரதி சென்றுவிட்டார். இருப்பினும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர் சிகிச்சை பயனின்றிப் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கனடாவில் வசித்து வந்தவர். புளியங்கூடலில் உள்ள தாயார் சுகவீனமுற்றுள்ளதால் அவரைப் பார்வையிடுவதற்காகவே அண்மையில் நாடு திரும்பியிருந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-101)



## ஆறு

எங்கும் இனிதாய் ஓடிடுவேன்
எழிலை என்றும் தந்திடுவேன்
பயிர்கள் பலதும் செழித்திடவே
பாங்காய் நானும் உதவிடுவேன்

செடியில் மலர்கள் மலர்ந்திடவே
சிறப்பாய் நானும் நீர் தருவேன்
பொய்கை நன்றாய் நிறைந்திடவே
பொன் போல் நீரை வழங்கிடுவேன்

வாய்க்கால் வழியே நான் ஓடி
வளங்கள் செழிக்க வழி செய்வேன்
கரும்பு வளர நீரூட்டி
கைத்தொழில் சிறக்கச் செய்திடுவேன்

மீன்கள் வளர உணவூட்டி
மீனவர் வாழ்வை ஒளி செய்வேன்
காடுகள் தோறும் நான் தவழ்ந்து
கனிவாய் உயிர்களைக் காத்திடுவேன்

கத்தரி, வெண்டி, பாகலிடம்
காதல் கொண்டே நான் வருவேன்
நெல் வயல் பசுமையாய் செழிப்பதற்கு
நெளிந்து வளைந்து நான் வருவேன்

புழுதி மண்ணில் நான் பாய்ந்து
பசும் புற்கள் வளரச் செய்திடுவேன்
பசும்பால் நலமாய்த் தருகின்ற
பசுக்களை நன்றாய் வளர்த்திடுவேன்

மக்கள் வாழ்வில் இருளகற்றும்
மின்சாரத்தை வழங்கிடுவேன்
இன்பம் பொங்கும் இன்னிசையை
இனிதாய் இசைத்து நான் வருவேன்

தூய்தாய் இருக்கும் என் மேனி
மாசாய் மாறிடக் கழிவுகளை
தொகையாய் மானிடர் கொட்டுகிறார்
தொல்லை பலதும் தருகின்றார்

நலமாய் நானும் உயிர் வாழ்ந்தால்
நன்மை பலதும் செய்திடுவேன்
அழுக்காய் என்னை ஆக்கி விட்டால்
அனைத்து உயிர்களும் அழிந்திடுமே!

### நேற்று வெளியான புரியாத புதிர்களுக்கு விடைகள்

1. தவறு
2. பால், பாலாடை
3. எல்லா மாதங்களும்
4. பூ
5. 'அ' எழுத்து
6. நாளை
7. கோயில்களில் உள்ள சமையலறை
8. நிழல்
9. வயது
10. மற்றவர்களை விட வேகமாக ஓட வேண்டும்
11. காகம்
12. நிலைக் கண்ணாடி




சுற்றிச் சுழன்று வேகமாய் வீசியது புயல் காற்று. காட்டு மரங்களெல்லாம் வீசிய புயலில் அகப்பட்டு பலமாய் ஆடிக் கொண்டிருந்தன. இலைகள் உதிர்ந்தும் கிளைகள் முறிந்தும் காற்றில் சுற்றிச் சுழன்று பறந்தன. கூடுகள் சிதறி உடைந்த தால் பறவைகள் அவலக் குரல் எழுப்பி யவாறே வானில் பறந்து புயற்காற்றில் சிக்கித் தவித்தன.

காக்கையின் கூடும் அடித்த புயலில் சிக்கி சிதறிப் போயிற்று. குளிரும்,பசியும் காக்கையை வாட்டி எடுத்தன. தங்குவதற்கு இடமில்லாது கண்களில் கண்ணீர் பெருக கஷ்டப்பட்டு சிறக டித்துப் பறந்தது காக்கை. பறந்து சென்ற காக்கையைப் பார்த்து பல்லிளித்துச் சிரித்தது முயல். முயலைப் பார்த்த காகம் "முயல் தம்பி, அடித்திடும் புயலில் எனது அருமையான கூட்டை இழந் தேன். பசியும் குளிரும் என்னை வாட்டி எடுக்கின்றன. இப்படி தவிக்கும் எனக்கு உந்தன் வீட்டில் கொஞ்ச நேரம் தங்க இடம் கொடுப்பாயா?" என அழுது கொண்டே கேட்டது. அதனைக் கேட்ட முயல் சிறிதும் இரக்கமின்றி "காக்கையாரே! கூட்டை இழந்தது உமது தலைவிதி! அதற்கு நான் எதுவும் செய்ய முடியாது. எனக்குத் தொல்லை கொடுக்காதீர்" என்று சொல்லிவிட்டு புதரின் மறைவில் இருந்த தனது குழி, வீட்டினுள் தாவி ஓடிப் புகுந்து கொண் டது. முயலின் பதில் கேட்டுக் கவலையடைந்த காகம், பசி கண்களை மறைக்க, உடல் குளிர்ந்து நடுங்க தள்ளாடியபடி ஒரு மரக்கிளையில் சென்று அமர்ந்தது. புயல்காற்றின் வேகமும் சற்று தணிந் திருந்தது. அப்போது மரத்தின் கீழ் குறட்டை விட் டுத் தூங்கும் ஒரு நரியைக் காகம் கண்டது. அத னருகே சென்ற காகம் நரியைத் தட்டி எழுப்பி "நரியண்ணா! அடித்த புயலால் என் கூட்டை இழந்து நிற்கிறேன். பசியும் குளிரும் என்னை வாட்டுகின்றன. சிறிது வேளை உமது வீட்டில் தங்க இடம் தருவீர்களா?" என்று கேட்டது.

குள்ள நரியும் "நானும் உம்மைப் போலவே வீட்டை இழந்து தவிக்கிறேன். என்னிடம் உதவி கேட்பதில் பயன் இல்லை" என வாய் கூசாமல் பொய் சொல்லி விட்டு, மரத்தின் வேர்களின் இடுக்கில் அமைந்திருந்த தனது வீட்டினுள் தாவி புகுந்து கொண்டது. நரி கூறியது முழுப் பொய் என காகத்துக்குப் புரிந்தது. துன்பம் வந்த வேளையிலும் கூட, பிறருக்கு உதவி செய்ய வசதியிருந்தும் செய்ய மனம் இல்லாத நரியையும், முயலையும் பற்றி காகத்துக்கு கோபம் வரவில்லை. மாறாக மன வருத்தமே ஏற்பட்டது. காகம் அங்கிருந்து பறந்து சென்று நாவல் மரம் ஒன்றில் அமர்ந்து, கீழே காற்றில் உதிர்ந்திருந்த நாவற் பழங்களைக் கண்டு அவற்றை வயிறார உண்டது.

களைப்பு நீங்கி புதிய வலிமையும் பெற்றது. புயலும் முற்றாக ஓய காகம் நாவல் மரக் கிளையில் பலமான வீடு ஒன்றை அமைத்தது. ஏனைய பறவைகள் வீடுகள் கட்டவும் உதவிய தோடு பழங்களையும் பகிர்ந்துண்ண வைத்தது.

மாதங்கள் பல கழிந்தன. பெருமழை அடிக்கத் தொடங்கியது. காட்டாறுகள் நிரம்பி பெரு வெள்ளமாக பெருக்கெடுத்து ஓடின. வெள்ளத்தில் மூழ்கி, முயல், நரி மற்றும் விலங்குகளின் வீடுகள் இடம் தெரியாது அழிந்தன.

முயலும் நரியும் காகம் கூடு கட்டியிருந்த நாவல் மரத்தடியில் ஒதுங்கின. குளிராலும் பசியாலும் நடுங்கின. மேலே மரத்தில் காக்கையின் கூட்டையும் அதனைச் சூழ அதன் இனத்தவர்கள் உண்டு மகிழ்வதையும் கண்டன. தம்மை எவராவது ஆதரிக்க மாட்டார்களா என ஏங்கின. இவர்கள் இருவரையும் அடையாளம் கண்ட காக்கை, கீழே பறந்து வந்து இருவரையும் அன்புடன் உபசரித்து, தன்னிடமிருந்த உணவுகளையும் பரிமாறியது. முயலும் நரியும் தாம் காகத்துக்கு ஆபத்தான ஆதரவற்ற வேளையில் உதவி செய்யாததையும், மாறாக காகம் பழிக்கு பழி தீர்க்காமல் தம்மை ஆதரிப்பதையும் கண்டு வெட்கி தலைகுனிந்து நின்றன.

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உடையர் பிறருக்கு - குறள்**
**ஒரு குற்றத்துக்கு இன்னொரு குற்றம் தீர்வல்ல.**

## ஊசி போடும் ஊர்வசிகள்

மனிதனுக்குத் தொல்லை கொடுக்கும் நுளம்புகளின் வாயுறுப்புக்கள் மிகவும் திறமையாக இயங்குகின்றன. நுளம்புகளும் ஈக்களும் கடிப்பதில்லை. அவற்றால் கடிக்க முடியாது. அவற்றைத் துளை போடும் பூச்சிகள் என்று சொல்லலாம். அவற்றின் வாய்கள் கூரிய ஊசிகளைப்போல அமைந்துள்ளன. இவை குருதியை உறிஞ்சும் பழக்கமுடையவை. அவை உடலின் பாகங்களில் மெதுவாக அமர்ந்து மிருதுவான இடங்களைக் கண்டு பிடிக்கின்றன. பின்னர் தமது வாயின் ஊசி உறுப்புக்களால் துளை போடு கின்றன. குறிப்பாக பெண் நுளம்புகளே இவ்வாறு ஊசி போடுகின்றன.



நட்டம் குறைவென்றாலும் தொற்று நோய்களை உண்டு பண்ணக் கூடிய நஞ்சையும் மற்ற நுண் உயிர்களையும் அவை மனிதனின் உடலுக்குள் செலுத்தி விடுகின்றன. விளைவுகள் மலேரியா, தூக்கமின்மை நோய், மஞ்சள் காய்ச்சல், டெங்கு, யானைக்கால் போன்ற நோய்கள் உண்டாகின்றன. மலேரியா டெங்கு காய்ச்சல் போன்றவற்றால் சாவும் சம்பவிக்கிறது.

'ஒலுங்கு' எனப்படும் பெரிய நுளம்புகளும் மனிதனின் குருதியை உறிஞ்சுகின்றன. இவ்வாறு உறிஞ்சுவதால் குருதி

## அறிந்து கொள்வோம்

- பூமியிலிருந்து ஒரு பொருள் சந்திர னுக்கு கொண்டு செல்லப்பட்டால் அதன் திரட்சி ஒரே மாதிரியும், எடை வேறாகவும் இருக்கும்.
- சூரியனுடைய ஒளியிலிருந்து முப் ாயிரத்தில் ஒரு பங்கு ஒளியைத் தான் சந்திரன் குளுகுளுவென்ற வெ ிச்சமாக பூமிக்கு பிரதிபலிக்கிறது.
- விண்வெளிப் பயணிகளுக்கு ஆகா ம் கறுப்பு நிறத்தில் தெரியும்.
- ஒரு கப்பல் ஆற்றிலிருந்து கடலுக்கு நுழையும் போது மேலே எழும்புகிறது.
- ஒரு பொருளின் வேகம் ஒலியின் வேகத்தை விட அதிகமாக உள்ள போது அது சூர்பர்சானிக் என்று அ ழைக்கப்படுகிறது.
- பூமியில் நின்று பார்க்கும் பொழுது அரை வட்டமாகத் தோன்றுகின்ற வானவில் பறந்து செல்லுகின்ற ஆ ய விமானத்திலிருந்து பார்க்கும் பொழுது பிரமாண்டமான சக்கரம் ே ான்று முழுவட்டமாகத் தோன்றும்.
- காற்று இல்லாவிடின் எத்தகைய ண்ணெய் விளக்கும் எரியாது. ஆனால் மின்சார விளக்கின் குமி ்குள்ளே (பல்புக்குள்ளே) காற்று இருந்தால் அது எரியாது.
- பகல் பொழுதில் சூரியவொளி வானொ ஒலி பரப்பை சற்றுப் பாதிப்பதால், பகல் பொழுதில் இருப்பதைவிட இ நேரங்களில் வானொலி சற்றுத் தெளிவாகவே ஒலிக்கின்றது.
- கிரகங்கள் கண் சிமிட்டாத ஒளி விட ு பொருள்களாக உள்ளன. நட்சத்திரங்களே ஒளி விடுகின்றன.
- கால் பந்து தரையில் விழும் போது அதன் எலாஸ்டிக் தன்மையால் மேல் நோக்கி எழும்புகிறது.

### முதலாம் வட்டத்தில் உள்ள சொற்களின் எதிர்ப் பொருள் தரும் சொற்களை இரண்டாம் வட்டத்தில் கண்டு பிடித்து எழுதுவோம்

| | |
|---|---|
| முதலாம் வட்டம் | மாலை, நன்மை, சிரிப்பு, முடிவு, வெறுப்பு, துன்பம், கீழ், இனிப்பு, ஒளி, வெளியே, துணிவு |
| இரண்டாம் வட்டம் | இன்பம், விருப்பு, கசப்பு, இருள், உள்ளே, ஆரம்பம், காலை, அழுகை, தீமை, மேல் |

### எதிர்ப்பொருட் சொற்கள்

| | |
|---|---|
| 1. ______ | 1. ______ |
| 2. ______ | 2. ______ |
| 3. ______ | 3. ______ |
| 4. ______ | 4. ______ |
| 5. ______ | 5. ______ |

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 11

**அண்ணா வி.க.**
**கால்பந்தாட்டம்**

அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அராலி மாவத்தையில் உள்ள சங்கானை பிரதேச செயலக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து மல்லாகம் நியூவொரியஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விளான் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதவுள்ளது.

**சரஸ்வதி வி.க.**
**கால்பந்தாட்டம்**

உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



# கரப்பந்தாட்டத் தொடரில் சென். தோமஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 16 வயதுப் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை சென். தோமஸ் பெண்கள் பாடசாலை சம்பியனானது. நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை சென். தோமஸ் பெண்கள் பாடசாலை அணியை எதிர்த்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மோதியது.

மூன்று செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது.

முதலாவது செற்றை 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய சென். தோமஸ் பெண்கள் பாடசாலை அணி, அடுத்த செற்றிலும் ஆதிக்கம் செலுத்தி இரண்டாவது செற்றையும் 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வசமாக்கியது. இதனால் அந்த அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. மூன்றாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை தனதாக்கியது. (ம-108-422)

## வாகை சூடியது விண்மீன்

யாழ்ப்பாணம், மார்ச் 11

தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் வித்தகபுரம் கண்ணகி விளையாட்டுக் கழகமும் மோதின. முதல் பாதியில் விண்மீனின் சார்பாக பதிவான கோலே ஆட்டத்தின் ஒரே கோலுமாக அமைந்தது. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் மகுடம் சூடியது பலாலி விண்மீன். (ம-108)



## துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலய மட்ட துடுப்பாட்டத் தொடர் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

ஆண்களுக்கான ஆட்டம் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்திலும் பெண்களுக்கான ஆட்டம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (ம-108)

## 390 ஓட்டங்களா? 10 இலக்குகளா?

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் அணிக்கு 457 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. தற்போது பங்களாதேஷ் அணி இலக்குச் சரிவில்லாமல் 67 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 494 ஓட்டங்களுடன் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக குசல் மெண்டிஸ் 194 ஓட்டங்களையும், குணரத்ன 85 ஓட்டங்களையும், டிக்வெல்ல 75 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மிராஸ் 4 இலக்குகளையும், ரகுமான் 2 இலக்குகளையும், அகமட், றோய், சகிப் அல் ஹசன் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் 312 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ரகிம் 85 ஓட்டங்களையும், சர்கர் 71 ஓட்டங்களையும், இக்பால் 57 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் டில்ருவான் பெரேரா, கேரத் இருவரும் தலா 3 இலக்குகளையும் லக்மல், குமார, சன்டகன் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

182 ஓட்டங்கள் முன்னிலையுடன் இலங்கை அணி நேற்றுக் களமிறங்கி 274-6 என்ற நிலையில் இருந்தபோது, ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக தரங்க 115 ஓட்டங்களையும், சந்திமல் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

457 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி இலக்குச் சரிவில்லாமல் 67 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நாள் முடிவு கண்டது. பங்களாதேஷின் வெற்றிக்கு இன்னும் 390 ஓட்டங்களும், இலங்கையின் வெற்றிக்கு 10 இலக்குகளும் தேவைப்படுகின்றன. (ம)

## பிரதேச செயலகங்களின் வலைப்பந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட ரீதியிலான பெண்கள் பிரிவு வலைப்பந்தாட்டத் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணி முதல் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

உடுவில் பிரதேச செயலகத்தை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலகமும், சாவகச்சேரி பிரதேச செயலகத்தை எதிர்த்து சங்கானை பிரதேச செயலகமும், வேலணைப் பிரதேச செயலகத்தை எதிர்த்து காரைநகர் பிரதேச செயலகமும், கரவெட்டி பிரதேச செயலகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலகமும், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தை எதிர்த்து கோப்பாய் பிரதேச செயலகமும், நல்லூர் பிரதேச செயலகத்தை எதிர்த்து யாழ்ப்பாண பிரதேச செயலகமும் மோதவுள்ளன. (ம-108)



## வீரகத்திப்பிள்ளை ம.வித்தி. கரப்பந்தாட்டத்தில் மகுடம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணி கிண்ணம் வென்றது.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணியை எதிர்த்து உடுப்பிட்டி அ.மி.கல்லூரி அணி மோதியது.

முதல் செற்றை 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன். சரிவில் இருந்து மீண்டு அடுத்த இரு செற்களையும் முறையே 25:21, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

மூன்றாமிடத்தை விக்னேஸ்வராக் கல்லூரி அணி தனதாக்கியது. (ம-422-108)

## ஐக்கியம் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 11

பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட மேசைப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

வல்வை சிவகுரு மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியும் சென். தோமஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதின. 3:1 என்ற செற் கணக்கில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-108)




ஆட்டநாயகன் கபில்ராஜ்


சிறந்த களத்தடுப்பாளர் ஜெனி பிளெமிங்

# வடக்கில் கொடியேற்றியது சென். ஜோன்ஸ் கல்லூரி

## 27 வருடங்களின் பின் இன்னிங்ஸால் வென்று

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான வடக்கின் போர் துடுப்பாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இன்னிங்ஸால் வெற்றிபெற்றது. இந்த வெற்றி 27 வருடங்களின் பின்னர் அந்த அணிக்குக் கிடைத்த இன்னிங்ஸ் வெற்றியாகவும் பதிவானது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான மூன்று நாள்களைக் கொண்ட இந்த ஆட்டம் இரண்டாம் நாளான நேற்றைய தினமே முடிவுக்கு வந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 164 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக தசோபன் 48 ஓட்டங்களையும், கௌதமன் 2[illegible] ஓட்டங்களையும், கார்த்தீபன் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கபில்ராஜ் 4 இலக்குகளையும், ஜதுசன் மற்றும் அபினேஸ் இருவரும் தலா 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி நேற்றுமுன்தின நாள் முடிவில் 114-5 என்றிருந்தது. அந்த அணி நேற்றுத் தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடியது. குறிப்பாக ஜதுசன் அரைச்சதம் கடந்து அணியைப் பலப்படுத்தினார். அவர் 70 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். பின் வரிசை வீரர்களும் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்த 253 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது சென். ஜோன்ஸ்.

பந்துவீச்சில் தசோபன் 4 இலக்குகளையும், துசாந்தன், மதுசன் இருவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 89 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கியது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி. அணி 12 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பவிலியன் திரும்பினார் பிரியலக்சன். மற்றொரு ஆரம்ப வீரரான ஜெயதர்சன் ஓர் முனையில் நிலைத்து நின்றாலும் மற்றொரு முனையில் கௌதமன், நிக்சன், ஜெரோசன் அடுத்தடுத்து ஒற்றையிலக்கத்துடன் நடையைக் கட்டினர். வேகப்பந்து வீச்சாளர் கபில்ராஜ் ஆட்டிப்படைத்தார். அணி 52 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 7 ஆவது இலக்காக வீழ்ந்தார் ஆரம்ப வீரரான ஜெயதர்சன். தடுமாற்றம் தொடர 82 ஓட்டங்களில் சுருண்டது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி.

பந்துவீச்சில் கபில்ராஜ் 6 இலக்குகளையும், ஜதுசன், அபினாஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாகவும், சிறந்த பந்து வீச்சாளராகவும் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் கபில்ராஜ் தெரிவானார். சிறந்த துடுப்பாட்ட வீரராக சென். ஜோன்ஸின் ஜதுசன், சிறந்த களத்தடுப்பாளராக சென். ஜோன்ஸ் அணியின் தலைவர் ஜெனி பிளெமிங், சிறந்த இலக்குக் காப்பாளராக சென். ஜோன்ஸின் தேவபிரசாத், சகலதுறை வீரராக யாழ். மத்திய கல்லூரியின் தசோபன் ஆகியோர் தெரிவாகினர்.

(ம-23)


சிறந்த துடுப்பாட்ட வீரர் ஜதுசன்


சிறந்த இலக்குக் காப்பாளர் தேவபிரசாத்


வெற்றி ஆரவாரத்தில் சென். ஜோன்ஸின் மைந்தர்கள்


சிறந்த சகலதுறை வீரர் தசோபன்

## பணியாளர் தேவை

* கணக்காய்வாளர்
* கூலியாள்கள்
* சிட்டை எழுதுநர் + காசாளர்
* மின் இணைப்பாளர்
* தச்சுத் தொழிலாளி
* கட்டடத் தொழிலுட்பவியலாளர்
* சிமெந்துச்சாடி/பூக்கல் வேலை தெரிந்தவர்
* சாரதி

ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
A JA CS 0019340

**T.P. 076 780 6942**

## மதி உணவகம்
### மீண்டும் ஆரம்பம்

இன்று (11.03.2017) சனிக்கிழமை எமது வியாபாரத்தினை மீண்டும் ஆரம்பிக்க உள்ளதை அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் மிக மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். அத்துடன் கடந்த 18.02.2017 அன்று ஏற்பட்ட தீ அனர்த்தத்திற்கு உதவிய அனைத்து இளைஞர் மற்றும் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**புதுக்குடியிருப்பு சந்தி, புதுக்குடியிருப்பு.** **உரிமையாளர், பணியாளர்.**

கனடாவில் நிரந்தர குடியேறல் வேலைவாய்ப்பு கல்வி கருத்தரங்கு
இனிமேலும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல வேண்டாமே!
குறைந்த கட்டணத்துடன் சட்டபூர்வமாக குடும்பத்துடன் கனடாவில் குடியேறலாம்
நாள்-12-03-2017 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி
முற்பதிவுகளுக்கு - V2 Travels
0768226236
49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்

SHAMROCK
ஊச்சமோட்டை
அரசியல் - A/L 2017
பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு மீட்டல் வகுப்புக்கள்.
MR.R.BALA
சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றன.

# பஞ்சாப் அணியின் தலைவராக கிளென் மக்ஸ்வெல் நியமனம்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டார் கிளென் மக்ஸ்வெல்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடர் அதன் வரலாற்றில் 10 ஆவது தொடராக அமைந்துள்ளது. ஒவ்வொரு அணியின் நிர்வாகமும் தனது அணியைப்பலப்படுத்துவதில்தீவிரமாக உள்ளது. பல மாற்றங்களையும் செய்து வருகின்றன. அந்த வகையில் பஞ்சாப் அணியின் தலைவராக ஆஸ்திரேலியாவின் சகலதுறை வீரர் மக்ஸ்வெல் நியமிக்கப்பட்டார்.



கடந்தவருட ஐ.பி.எல். தொடரில்பஞ்சாப்மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தியது. இதனால் ஆரம்பத்தில் அணித்தலைவராகச் செயற்பட்டடேவிட்மில்லர்தொடரின்இடையே இடைநிறுத்தப்பட்டுமுரளிவிஜய்தலைவராக்கப்பட்டார். தற்போது தலைமைத்துவம் தொடர்பில்மீண்டுமொருமாற்றம்செய்யப்பட்டுள்ளது. (ம)

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
IELTS Life skills
• Latest training materials.
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
ஆலோசனைகளுக்கு 777173517 யாழ்ப்பாணம் 0212224403
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
நெல்லியடி 021226 2470 | சாவகச்சேரி 021227 0775 | சுன்னாகம் 021224 1970 | கிளிநொச்சி 021228 5655
www.itdmi.com/english

## விலகினார் ஸ்ராக்

இந்தியாவுக்குஎதிராகஎஞ்சியுள்ளடெஸ்ட்ஆட்டங்களில் இருந்து காயம் காரணமாக ஆஸியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ராக் விலகினார். ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம்செய்து4ஆட்டங்கள்கொண்ட டெஸ்ட் தொடரில்விளையாடிவருகிறது. முதல் இருஆட்டங்களின்முடிவில்இருஅணிகளும் 1:1 என்றுள்ளன. மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி ராஞ்சியில் நடைபெறவுள்ளது. இரு அணிகளும் சமநிலையில் உள்ளதால் அடுத்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாக உள்ள நிலையில் இந்த ஆட்டத்தில்இருந்துஸ்ராக்விலகினார். காலில்ஏற்பட்ட காயத்தை அடுத்தே ஸ்ராக் விலகினார். ஸ்ராக்கின் விலகல் ஆஸ்திரேலிய அணிக்கு பெரிய இழப்பாக அமையும் என்று கருதப்படுகிறது. (ம)

## வேலைவாய்ப்பும் பயிற்சியும்

சர்வதேச ரீதியாக விஸ்தரித்துள்ள எமது American நிறுவனமானது இலங்கையில் வடமாகாணத்தில் மேலதிகமாக 15 புதிய கிளைகளை உருவாக்க இருப்பதனால் அக் கிளைகளிற்குரிய அலுவலகத்திற்கான வேலைக்கு நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர். O/L, A/L படித்தவர்களும் நேர்முகத் தேர்வில் தோற்றமுடியும்.

**குறிப்பு** : முன் அனுபவம் அற்றவர்கள் 03 மாதகால பயிற்சியின் பின் தகுந்த பதவியினை அடையமுடியும்.

**சம்பளம்**: பயிற்சியின்போது 12,000/=க்கு மேல்
பயிற்சியின் பின் 45,000/= தொடக்கம் 75,000/= வரை

**தொடர்பு :**
**077 298 6763, 077 006 4030, 077 077 1377**

fems
உங்களுக்கு எல்லைகளில்லை
பூஜாவுடன், வாழ்க்கைக்குத் தைரியமூட்டும் செயலமர்வு

fems
YOU'RE LIMITLESS FOUNDATION

வாழ்க்கைக்குத் தைரியமூட்டும் செயலமர்வு யாழ்ப்பாணத்தில்.

**மார்ச் 18 சனிக்கிழமையன்று**
**காலை 9.30க்கு**
**யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்**

இச்செயலமர்வில் **பிரபல நடிகை**
**பூஜா உமாஷங்கர் கலந்துகொள்கிறார்.**
பெண்கள் அனைவரும் அறிவூட்டும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு குதூகலமடையவும் பரிசுகளை வெல்லவும் பயனடையவும் அழைக்கப்படுகின்றனர்.
அத்துடன் பூஜாவையும் மற்றும் பல பிரபலங்களையும் முக்கியஸ்தர்களையும் சந்திக்கும் வாய்ப்பும் உங்களுக்குக் கிடைக்கிறது.



**தொடர்புகளுக்கு : 077 312 0630**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.